புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம்௵ பிப்ரவரி௴ 1௳ [ந. 29.

பிரஸங்கம் XXIX.

## ஜப்பான்.

ஐரோப்பிய யுத்தமானது தூரக்கிழ் தேசங்களிற்கும் பரவக்கூடுமோவென்பதைப்பற்றி சர்ச்சைசெய்ய இது உசிதமான சமயம். ஹிட்லரின் தடபுடல் ஏற்பாடுகள் எல்லாம் பிரிடனில் பலிக்கவில்லை. கிரேக்கரின் வீரத்தன்மையாலும் தளகர்த்தர் வேவல் (General Wavell) லிபியாவில் அத்தியாச்சர்யமாகப் போர் புரிந்ததாலும் இதாலி வெரும் போல் கட்டடம் என்று வெளியாகிவிட்டது. இதன் பயனாக ஹிட்லரின் சாயம் வெளுத்து விட்டது. இழந்துபோன மதிப்பை பிறர் உதவியைக்கொண்டு திரும்ப அடைய வேணுமென்று ஹிட்லர் எண்ணுவது இயல்பு.

அவ்வித உதவி ஐரோப்பாவில் அவனுக்குக் கிடைக்காது; ஏனென்றால், முஸோலினி உடைந்த சட்டி; ஒரு வழியிலும் பிரயோஜனமில்லை. எதிர்பாராத விதமாக முஸோலினி சாயம் வெளுக்கவே, அச்சு தேசத்தாருடன் கடைசியாகச் சேர்ந்த ஜப்பானுடைய உதவியை ஹிட்லர் தேடவேண்டியதாக இருக்கிறது. ஊரான் பிள்ளையை கிணற்றில் விட்டு ஆழம் பார்ப்பதுபோல் ஹிட்லர் ஜப்பானை உபயோகிக்கப் பார்க்கிறான்; இந்த நிலைமையை ஜப்பானியர் ஒத்துக்கொள்ளுவார்களா என்பதுதான் முக்கியமான பிரச்னை.

சென்ற செப்டம்பர் மாதத்தில் அச்சு தேசத்தாருடன் ஜப்பான் சேர்ந்து கொண்டதாக வெளியிடப்பட்டது. பிரிடன் படையெடுப்பில் ஹிட்லருக்குத் தோல்வி ஏற்பட்டது; போரில் ஏற்பட்ட தோல்விக்கு மாறாக ராஜதந்திர முறையில் ஏதேனும் ஒரு வெற்றி அடையவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஆகையால், ஜப்பான் முதலான புது சகாக்கள் தேட ரிப்பன்டிராப் கிளம்பி தன் சாகசக்கியங்களை உபயோகித்தார். அவர் வலையில் ஜப்பான் சிக்கிக்கொண்டு தூரத்தில் உள்ள கீழ் பிரதேசத்தின் நாஸி நிலையமாக ஸ்தாபிக்கப்பட்டது. இதன் பயனாக அச்சு தேசத்தாரின் செல்வாக்கு உயர்ந்தது. ஐரோப்பாவில் ஜெர்மனியும், இதாலியரும் தலைவர்களாகவும், ஆசியாவில் ஜப்பானியர் தலைவர்களாகவும் இருப்பதாக ஏற்பாடு. ஐரோப்பிய யுத்தத்திலும் சீன யுத்தத்திலும் சம்பந்தப்படாத தேசத்தார் யாராலாவது அச்சு தேசத்தார் மூவரில் எவரேனும் எதிர்க்கப்பட்டால் அவர்களுக்கு மற்ற இரண்டு தேசத்தாரும் உதவி புரிகிறதென்று ஒப்புக்கொண்டார்கள். இந்த ஏற்பாடானவுடன் பர்லினில் வெகு உற்சாகம் ஏற்பட்ட போதிலும் இந்த ஏற்பாட்டைப்பற்றி ரஷியர்கள் என்ன நினைப்பார்களோவென்று கொஞ்சம் சங்கைகளும் ஏற்பட்டன.

அச்சு விஸ்தாரப்படவே போர்முனைகளும் அதிகரிக்கக்கூடுமென்று எதிர்பார்க்கப்பட்டது. காலக்கிரமத்தில் யுத்தமும் தூரக்கிழ் பிரதேசத்திற்குப் பரவி, கடைசியாக உலகம் முழுமையுமே வியாபிக்கக்கூடுமென்று எதிர் பார்க்கப்பட்டது. இன்னம் இதர அபாயங்களும் அதில் தொக்கியிருந்தன. உலகம் முழுவதுமில்லாமல் போனாலும் ஆசியா கண்டத்தை மட்டுமாவது தன்னரசு நாடாய் ஆளவேணுமென்பது ஜப்பானுடைய வெளிப்பட்ட ஆசை; ஒருதலை முறையாய் வைத்திருந்த அந்த ஆசையை பூர்த்தி செய்துகொள்ள அச்சு தேசத்தாருடன் சேருவது நலமாகக் காணப்பட்டது. ஏனென்றால் (புதுமுறையானது) வாழ்க்கைக்கு வசதியான ஆசியா கண்டத்தையும் அளாவவேணும் என்பது அச்சு தேசத்தாரின் நோக்கம்.

புதிய முறை இன்னதென்பது சுலபமாக விளங்கும் உலகத்தையே பங்கிட்டுக்கொள்ள அது ஒரு ஏற்பாடு; இவ்வித ஏற்பாடுகள் பண்டை காலத்தில் சில அரசர்கள் செய்து ஏமார்ந்து போயிருக்கிறார்கள். இந்த ஏற்பாட்டின்படி ஜெர்மனிக்கு நைஜீரியா, (Nigeria) பிரஞ்சு-காங்கோ, பெல்ஜியன்-காங்கோ (the French and the Belgian Congo), ரொடேஷியா (Rhodesia), தென் ஆபிரிக்கா (South Africa)வும் பங்காகக் கொடுப்பதாம்; இந்தக் கொள்ளையில் இதாலியின் பங்காக எகிப்தும் மத்தியதரைக் கடலிலுள்ள பிரஞ்சு நாடுகளும் கொடுப்பதாகவும், ஜப்பானுக்கு டச்சு கிழ் தீவுகளும் பிரஞ்சு இண்டோசைனாவும் கொடுப்பதாகவும் பேசப்பட்டது. ஜப்பானுக்கு வெகு சந்தோஷம். சுமார் 30 வருஷத்திற்கு மேற்பட்ட காலமாக தன் அந்தரங்க எண்ணம் வியாபார உடன்ப்டிக்கைகள் அரசியல் உடன்படிக்கைகள் மூலம் மறைக்கப்பட்டிருந்தது; இப்பொழுது அது வெட்ட வெளிச்சமாக துலங்கிற்று. இப்போதைக்கு டச்சு கீழ் தீவுகளும் இண்டோசைனாவிலுள்ள பிரஞ்சு ஸ்தலங்களும் கிடைத்தால் ஜப்பானியர் திருப்தி அடையலாம்; ஆயினும் இதன் முடிவு ஆங்கிலம் பேசும் தேசத்தாருக்கே ஆபத்தென்று கண்ணுள்ளவர்களுக்குத் தெரியும். இந்த உடன்படிக்கை பேச்சுப்படி நடைபெற்றால் பசிபிக் (Pacific) மஹா சமுத்திரத்திற்கே ஜப்பான் தலைமை நாடாகி விடும். அதனால் ஆஸ்திரேலியா, நீயூ ஜீலெண்டு (New Zealand) பிரிடிஷ் கொலம்பியா (British Columbia), ஆரிகான்

(Oregon), காலிபோர்னியா (California) முதலிய நாடுகளுக்கு ஆபத்தான நிலைமை ஏற்படும். உண்மையில் பசிபிக் (Pacific) மஹா சமுத்திரத்தில் ஜப்பான் ஆதிக்கம் ஏற்பட்டால் அமெரிக்காவுக்குப் பல வழியிலும் இடைஞ்சல் உண்டு. அலாஸ்க்காவிலிருந்து ஆஸ்திரேலியா வரையிலுள்ள பிரிடிஷ் அமெரிக்க நாடுகளுக்கே ஆபத்தாயிருக்கும்.

இந்தப் புதிய ஆபத்தான நிலைமையில் அமெரிக்காவும் பிரிடனும் நல்ல வேலை செய்தன. இரண்டு தேசத்தின் பிரதிநிதிகளும் வாஷிங்டனில் சந்தித்து, அவர்கள் பொது பாதுகாப்பிற்கு வேண்டிய காரியங்களைச் செய்தார்கள். ஏற்கனவே இருதேசத்தார்களுக்குள்ளும் நல்ல அந்நியோன்யம்; இந்த யுத்தத்தில் எந்தப் பக்கம் அமெரிக்கா சேருமென்பதில் எக்காலத்திலும் சந்தேகமிருந்ததில்லையென்ற போதிலும் இவர்களுக்குள் கிரியாம்சையில் ஒத்துழைப்பு அதிகரித்தது. பிரிடிஷ் கப்பற்படை நிலையங்கள் அமெரிக்கா வசம் குத்தகைக்கு விடுவதென்றும் அமெரிக்கா நாசகாரிகள் பிரிடனுக்கு கொடுக்கப்படவேண்டியதென்றும் ஏற்கனவே பேசப்பட்டிருந்ததில், அதை அனுசரித்து, வேறு நடவடிக்கைகளும் நடத்தப்பட்டன. வாஷிங்டன் கூட்டத்தை ஜப்பானியர் அலக்ஷியம் செய்தது போல் பாவனை பண்ணினாலும் அது ஹிட்லரைத் தூக்கிப்போட்டுத் தானிருக்க வேண்டும்.

ஜப்பான் கவனிக்கவேண்டிய சிக்கலில் ரஷியா, சீனா, அமெரிக்க ஐக்ய மாகாணங்கள் முக்கியமான அம்சங்கள். அச்சு தேசத்தாரின் எண்ணங்கள் பூர்த்தியாக வேண்டியதற்காக ஜப்பான் செய்யக்கூடிய வேலையானது மேலே கண்ட சிக்கலைப் பிரிப்பதைப் பொறுத்தது.

ஜப்பான் அச்சில் சேர்ந்தது ரஷியாவுக்குத் திருப்திகரமாகவில்லை. "அச்சு தேசத்தார் எவருக்கும் சோவியட் நாடுகளுக்கும் இச்சமயம் உள்ள சிநேகத்திற்கு அச்சு உடன்படிக்கையானது எவ்வித பங்கமும் விளைவிக்காது என்று ஸ்பஷ்டமாக கண்டிருந்தபோதிலும் நடப்பு அப்படித்தான். நாஸிகளுக்கும் உள்ளுக்குள் கொஞ்சம் உதைப்புத்தான். இந்த உடன்படிக்கையானது ரஷியாவைப் பாதிக்காதென்று நாழிதவறுமல் பத்திரிகைள் மூலமாகவும் ரேடியோ மூலமாகவும் நாஸிப் பிரசார இலாகா முறையிட்டுவந்தது. ரஷியா கவலைப்படவேண்டியதில்லை; தனக்குச்சம்மந்தமில்லாத காரியங்களில் தலையிட்டுக்கொண்டு பிரிடனுடன் கொஞ்சி விளையாடும் அமெரிக்காதான் ஜாக்கிரதையாயிருக்கவேண்டியது என்று குறிப்பிடப் பட்டது. ரஷியர்களுக்குள்ள சந்தேகம் தணிந்ததோ யில்லையோ. நம்மால் சொல்லமுடியாது. ஆனால் ரஷியாமட்டும் இதே அச்சு தேசத்தார் மூவரும் சில காலத்திற்குமுன் அபேதவாத எதிர்ப்பு உடன்படிக்கை செய்துகொண்டார்கள் என்ற விஷயத்தைக் கொஞ்சம் காரத்துடன் எடுத்துக்காட்டினார்கள். இதிலிருந்து ரஷியாவை ஏமாற்ற முடியாதென்பது வெளியாயிற்று. ரஷியாவும் சமயத்திற்கேற்றபடி, உறுமியும் நகைத்தும் கவனமாயிருந்துகொண்டு, கூடுமானால் சண்டையன்னியில் ஜப்பானுக்கும் தனக்குமுள்ள விவகாரங்களைத் தீர்த்துக் கொள்ளலாமென்றிருந்தது.

அச்சில் ஜப்பான் சேர்ந்தது முதல் ரஷிய—ஜப்பானிய உடன்படிக்கை ஒன்று ஏற்படப்போவதாகப் பேச்சு இருந்து வந்திருக்கிறது. தளகர்த்தர் தாதகாவா(Lieut-General Tategawa)ஸ்தானிகராக ரஷியாவிற்குப்போனபோது வெகு சீக்கிரம் ஒருவரை யொருவர் எதிர்க்கிறதில்லையென்று உடன்படிக்கை கையெழுத்தாகுமென்று எதிர்பார்க்கப்பட்டது. அவர் மோலோடாவை அடிக்கடி சந்தித்தார்; உடன்படிக்கையை மட்டும் இன்னமும் காணோம். மஞ்சுகோ (Manchuko)வில் ஜப்பானிய ஆதிக்கத்தை ஸோவியட் ஒத்துக்கொண்டு, சீனாவிற்கு உதவி செய்யாமலிருந்தால் அதற்குப் பதிலாக ரஷியாவிற்கு அநேக சௌகரியங்கள் செய்வதாக ஜப்பானியர் சொல்லுகிறார்கள்; ஆனபோதிலும் ரஷியர்கள் இதுவரை இணங்கவில்லை. அரசியல் காரியங்களில் ரஷியர்கள் காரியவாதிகள்; இதுவரை ஒத்துக்கொள்ளவில்லை யென்றால், அதற்கு அர்த்தம், இன்னமும் தாமதித்தால் மேற்கொண்டும் சௌகர்யங்கள் ஏற்படக்கூடுமென்றும், எந்நிலைமையிலும் ஜப்பான் சண்டைக்குவராது என்ற நம்பிக்கையும் ரஷியருக்கு இருக்கிறது என்று அர்த்தம். மேலும், ஜப்பானியரிடம் நீண்டகாலமாக அவநம்பிக்கை. அநேக வருஷமாக அவர்களுக்குள் மனத்தாங்கல் இருந்து வருகிறது. 1932, 1933 வேனல் காலத்தில் யுத்தம் வந்துவிடும்போல இருந்தது. சரியான சமயத்தில் ஸோவியட்டின் அதிகாரத்தை அமெரிக்கா ஒத்துக்கொண்டபடியால் ரஷியரின் பயம் கொஞ்சம் தணிந்தது; ஆனால், ஜப்பானுடன் ஜெர்மனி ரகசிய உடன்படிக்கை செய்துகொண்டார்கள் என்ற நம்பிக்கை உண்டாகி யுத்த தளவாடங்களும் தேர்ச்சியுள்ள விமானிகளும் ஜப்பானுக்கு அனுப்பப்பட்டபோது பயம் மறுபடியும் கிளம்பிற்று. 1935-ல் ஜப்பானும் ரஷியாவும் கொஞ்சம் நெருங்கி, ஸோவியட்டிற்குச் சொந்தமான சீன கீழ் ரயில்வேயை ஜப்பான் விலைக்கு வாங்கி உடன்படிக்கை செய்துகொண்டார்கள். தெற்கு சீனாவின் பேரில் தான் ஜப்பானியருக்கு கண் என்றும் ஸோவியட்டிற்குச் சொந்தமான கடற்கரை மாகாணங்களுடன் அவர்கள் வம்பிற்கு வரமாட்டார்கள் என்றும் ஸோவியட்டிற்கு நம்பிக்கை ஏற்பட்டது. ஆயினும் மங்கோலிய உள்நாட்டுப் பிரதேசத்தில் ஜப்பானியர் தொடர்ந்து குடியேறுவதைக் கவனிக்க ஸோவியட்டிற்கு மறுபடியும் சந்தேகம் ஏற்பட்டது. இதனால்தான், எந்தச் சந்தர்ப்பத்திற்கும் தயாராகவிருக்க வேண்டி ஒரு பலமான சைனியம் ரஷியர்கள் சீனாவிற்குச் சமீபம் வைத்திருக்கிறார்கள்.

ஜப்பான் செய்யப்போகும் காரியமானது முக்கியமாக சீனாவைப்பொருத்தது. மூன்று வருஷகாலமாக சீனாவைப் படுத்தாதபாடு படுத்தி அனர்த்தம் செய்து வந்திருக்கிறார்கள். சீனாவும், ஜெர்மன் ஆக்கிரமணம் செய்திருக்கிற பிரான்ஸின் நிலையிலிருக்கிறது. இருந்தபோதிலும் சீனர் விடவில்லை, தெம்புடன் இருக்கிறார்கள். ஆரம்பத்தில் சீனரின் ஸ்திதி கவலைக்கிடமாயிருந்தது; ஆயினும் அவர்கள் சமத்காரத்தால் தங்கள் நிலையை மாற்றிக்கொண்டார்கள். இப்போது பார்க்க ஜப்பானியர் நிலைதான் ஆட்டமாகக் காணப்படுகிறது. சீனா கவர்ன்மெண்டார் மேற்குப் பக்கம் சுங்கிங்கிற்கு (Chungking) மாறியது நல்ல காலம். பி. பி. ஸி. யில் ஒருவர் சொன்னபடி மேற்குச் சீனா ‘தங்கமயமான மேற்கு’

திசையாக இருக்கிறது. அங்கே கணக்கிடமுடியாத நிலக்கரியும், இரும்பும், வற்றாத எண்ணெயும், கைத்தொழில் மிகுந்த தேசமாகவேண்டுமென்ற எண்ணங் கொண்ட தேசத்தாருக்கு வேண்டிய பண்டங்கள் நிரம்பிய நாடு. க்வோமிண்டாங் கட்சிக்கும், அபேத வாத முறையில் ஈடுபட்ட இளைஞர்களுக்கும் கட்சிகள் இருந்தபோதிலும், அவர்கள் தங்கள் கட்சிகளை மறந்து எதிரியை ஒரே மனதாய் எதிர்க்கிறார்கள். சீனர்கள் சாதுக்கள்; முன்னோர் வாழ்க்கை முறையைப் பின்பற்றியவர்கள்; தங்கள் காரியத்தைப் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பவர் கள். இவர்களை ஒருவித காரணமுமன்னியில் ஜப்பான் எதிர்த்து அவர்கள் தேசத்தின்பேரில் படையெடுத்ததால், உலகம் பூராவுக்குமே ஜப்பானிடமிருந்த மதிப்புப் போய்விட்டது. உலகத்தாருக்குச் சீனாவிடம் அனுதாபமும், மதிப்பும் உண்டு. இது காரியாம்சையில் ஏராளமானதும் நாளுக்கு நாள் அதிகரிக்கும் பிரிடிஷ், அமெரிக்க யுத்த சாமான்களாக மேற்கு சீனாவிற்கு அனுப்பப் படுகின்றன.

ஜப்பான் அச்சைச் சேர்ந்தபின் பிரிடிஷ் அமெரிக்க பிரதிநிதிகள் வாஷிங்ட னில் சந்தித்ததின் முதல் பயனாக 'பர்மா ரோடு' மறுமுறை திறக்கப்பட்டது. ஜப்பானியரை மதித்து முன்னமே இந்த ரோட் அடைபட்டதில் இத்தேசத்திலும் பிரிடனில் பலபேர்களுக்கும் ரொம்ப வருத்தம். அதைத் திறந்துவிட்டது நமது சிநேகிதர்களான சீன தேசத்தாருக்கு நாம் செய்யவேண்டிய கடமையென்று கருதப்பட்டது. இந்த ரோடிற்கு "பர்மா-யூனான் ரோட்" என்று பெயர்; அது அக்டோபர் மாதம் 17-ம் தேதி நடு இரவில் திறக்கப்பட்டது. அப்படிச் செய்ததால் ரொம்ப நலமுண்டாயிற்று. ரங்கூனிலுள்ள பண்டிதர் பீஸ்லி (Professor Beasley) பின் வருமாறு சொல்லுகிறார். "லாஷியோவிலிருந்து வியாபாரம் துவக்குகிறது. ஏப்ரல் 1ம் தேதி முதல் 1940-ம் ஹு பிப்ரவரி மீ கடைசி வரை 2,000,000 பவுன் பொருமதியுள்ள சாமான்கள் இந்த ரோட்டின் வழியாக சீனாவிற்குச் சென்றது. மேற்கொண்டும் ஏராளமான யுத்தத் தளவாடங்கள் சென்றன; அவைகளின் கணக்கு பர்மா கவர்ன்மெண்டார் வெளியிடவில்லை. பல சாமான்களடங்கிய வியாபாரம்; முக்கியமானது மோட்டார் பஸ்கள், 'வான்'கள், லாரிகள், டையர், ட்யூப்புகள் இவைகள் மொத்த வியாபாரத்தில் பாதி அளவிற்கு அனுப்பப்பட்டன. இன்னும் முக்கிய சாமான்கள் என்னவென் றால், எண்ணெய், பருத்திச் சரக்கு, போர்வைகள், பலவித யந்திரங்கள், இரும்பு தளவாடங்கள், மருந்து சரக்குகள்." பர்மாவிலிருந்து ஒரு தூது கோஷ்டியார் சீனாவிற்குப் போயிருக்கிறார்கள். வியாபாரம் அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது. சீனாவில் ஜப்பான் காரியங்கள் சுலபமாக நடைபெறவில்லை. பிரிட னிடமிருந்து சீனாவிற்கு அதிகமாகக் கிடைக்கும் உதவியால் ஜப்பானின் கஷ்டங் கள் ஜாஸ்தியாகும்.

அச்சு உடன்பாடு ஏற்பட்டவுடன் பிரிடனும், அமெரிக்காவும் செய்வது ஹிட்லர் முகத்திலடித்ததுபோலாயிற்று. பிரிடனுக்கு தளவாடங்கள் அனுப்பக் கூடாதென்று தாஜா பண்ணியும், பயமுறுத்தியும் பார்த்தான் ஹிட்லர்; பலிக்க

வில்லை. கோபாவேசங்கொண்டு தூரக் கிழ் நாடுகளில் வம்பு இழுத்துவிடப் பார்க்கிறுன். ஜப்பானுக்கும் அமெரிக்காவும் சண்டையை கிளப்பி, அதன் பயனுக இப்போது பிரிடனுக்கு அனுப்பும் தளவாடங்களை பஸிபிக் பாதுகாப்பிற்காக அமெரிக்காவை அனுப்பும்படி செய்யப் பார்க்கிறுன். பஸிபிக்கில் அமெரிக்காவின் பூர்ண கவனமும் செலுத்தும்படி செய்துவிட்டால், ஐரோப்பாவில் இங்கிலாந்தை தோற்கடிப்பது சுலபமாகும். ஜப்பான் ஹிட்லர் பேச்சிற்கிணங்கி விட்டால் அதனுல் நிர்வகிக்க முடியாது. இண்டோ-சீனுவில் வியாபிக்க ஜப்பான் முயற்சி செய்துவந்திருக்கிறது; ஆனுல் அங்குள்ள பிரெஞ்சுக்காரர்கள் இடங்கொடுக்கவில்லை. அதன்மேல், தாய்லாண்டுக்கும் இண்டோ-சீனுவுக்கும் வம்பு இழுத்துவிட்டார்கள்; அது இன்னும் முடிவிற்கு வரவில்லை. மீகாஞ் நதி ஓரமுள்ள எல்லைப்புறத்தில் தாய்லாண்டிற்குக் கொஞ்சம் நியாயமான பாத்தியமுண்டு; இந்த விவகாரம் ஜப்பானின் பஞ்சாயத்துமூலம் முடிவடையக்கூடும். அப்படியானுல் ஜப்பானுக்குக் கொஞ்சம் மகிமைதான்; ஆனுலும், ஜப்பானுக்குள்ள வில்லங்கங்கள் அதனுல்மட்டும் குறைந்துபோகாது. இந்த நிலைமையில், ஹிட்லர் தூண்டுதலின்பேரில் ஜப்பான் அமெரிக்காவுடன் சண்டைக்குப் போவது பெரும் பேதமையாகவிருக்கும்.

ஆனுலும், ஜப்பான் அமெரிக்காவை பரம விரோதியாகக் கருதுகிறது. இரண்டு நாடுகளுக்கும் வியாபாரத் துறைகள் பெரும் பேட்டி; அமெரிக்காவின் பேட்டியால் ஜப்பானுடைய கைத்தொழில் அபிவிருத்தியும் வியாபார விஸ்தாரமும் ரொம்ப குறைந்துவிடுமென்று ஜப்பானுடைய நம்பிக்கை. ஜப்பானியர் நெஞ்சழுத்தக்காரர்கள்; அமெரிக்கர்களும் அப்படியே; ஆனுல் அமெரிக்காவுக்கு ஏராளமான ஜனத்தொகையும் பொருளாதார வசதியும் உண்டு. இவர்களுக்குள்ள போட்டி கேவலம் வியாபார சம்பந்தத்தால் மட்டும் இல்லை. அவர்கள் நோக்கங்களிலேயே வித்தியாசமுண்டு. அமெரிக்கர்கள் ஜனநாயக ஆட்சியில் பரிபூர்ணமான நம்பிக்கை உள்ளவர்கள்; ஜப்பானியரோ அரசனைத் தெய்வமாகக் கருதுகிரவர்கள்.; ஒருவேளை சர்வாதிகாரிகளையும் தெய்வங்களாக ஜப்பானியர் இனி கருதக்கூடும். ஜப்பான் எல்லா விஷயங்களிலுமே ஜெர்மனியைப் பின்பற்றி இருக்கிறது. ஜப்பானின் அரசியல் திட்டம் அவசியமான சில மாறுதல்கள் விறு, ஜெர்மனியின் அரசியல் திட்டத்தைத் தழுவியது. ராணுவ விஷயங்களிலும் ஜெர்மனியைப் பின்பற்றியவர்கள். உண்மையில் ஜெர்மன் ராணுவ அதிகாரிகளைப்போல கத்திக் கடிவாளங்களை மாட்டிக்கொண்டு டோக்கியோ, ஹக்கோடேட், முதலிய பட்டணங்களில் ஜப்பான் ராணுவ அதிகாரிகள் செய்யும் ஆர்ப்பாட்டமானது ஜப்பானியர்களுக்கு அருவருப்பு உண்டாக்குகிறது. இந்த நிலைமையில் அமெரிக்காவும் ஜப்பானும் ஒத்துப்போவது சுலபமான காரியமல்ல. இது கைகூட வேணுமானுல் ஜப்பான் பிரிடனுடன் ஒத்திருக்கவேணும்; பிரிடிஷாரிடம் அநேக ஜப்பானியருக்கு நிஜமான மரியாதை உண்டு. இப்படிச் செய்வார்களேயானுல் போர் புரியாமலே இரண்டு தேசங்களும் சமாதானமாக பிரிடன் நிச்சயமாய் உதவி செய்யும்.

இந்த நேரம் மனத்தாங்கல் பலமாய் இருக்கிறது. அமெரிக்கர்கள் பிரிடனுக்குக் கூடுமானவரை உதவி செய்வதாகக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். பிரிடனிடம் ஜப்பான் முரட்டுத்தனமாக இருப்பதை கவனிக்கத் திருப்திகரமாக வில்லை.

டச்சு தீவுகளிலுள்ள டச்சுக்காரரை ஜப்பான் அனுசரிக்கப் பார்க்கிறது. ஒரு ஜப்பானியத் தூது கோஷ்டி சமீபத்தில் பட்டேவியாவுக்குச் சென்றது; அதன் தலைவர் Mr. யோஷிநூவா, இரு தேசத்தாரும் வியாபாரத் துறையில் லாபமடையக் கூடிய விதமாக யோசனைகள் சொன்னாரும். அவர் பேச்சு சமாதானமாயிருந்தது; தூர திருஷ்டியுடன் காரியங்கள் செய்ய வேண்டும் என்று எடுத்துச் சொன்னார்; இப்பொழுது அதிகாரம் வகிக்கும் ஜப்பான் ராணுவ இலாக்காவின் அந்நிய தேசங்களை வியாபிப்பதிலுள்ள உற்சாகத்திற்கு விரோதமாயிருப்பதால் அவர் இப்படி பேசியிருக்கலாம்.

ரஷியாவுடன் ஜப்பானின் ஜம்பம் பலிக்கவில்லை என்று சொன்னோம். ரஷியர்கள் விழித்த பேர்வழிகள். சீனாவில் ஜப்பானின் சிக்கலான நிலைமை அவர்களுக்குத் தெரியும். ஆகையால், கைமேல் சொற்ப பலன் கிடைப்பதை உத்தேசித்து எதிர்கால லாபத்தை இழக்க அவர்கள் தயாராக இல்லை. நாலாடக்கமும் ஜப்பான் ஜயித்தால் அது ரொம்ப வலுவடையும்; வலுவடைந்த ஜப்பான் ரஷியாவின் கண்ணைக் குத்திக் கொண்டே இருக்கும்.

சீனா சம்பந்தமாக ஜப்பானின் நிலைமை திருப்திகரமாகவில்லை. ஜப்பானின் பிரதம மந்திரி இன்று சொன்ன விஷயம் அர்த்த புஷ்டியுடன் இருக்கிறது. "சீனா-ஜப்பானிய சண்டை துவக்கி, 5 வருஷம் வந்த போதிலும் சமாதானம் ஏற்படுவதாகத் தோன்றவில்லை. இதற்கு, ராணுவ இலாகா பேரில் குற்றமில்லை பொறுப்பு என்னுடையதே.

லக்ஷக்கணக்கான துகைகளும் ஆயிரக்கணக்கானத் துருப்புகளும் இழந்ததற்காக அரசனுக்கும் ஜனங்களுக்கும் நான் ஜவாப் சொல்ல முடியாதவனாக இருக்கிறேன். இப்போதிருக்கும் நிலைமையை மாற்ற என்னால் இயன்றவரை பாடுபட சங்கல்பம் செய்து கொண்டிருக்கிறேன்."

முன்காலத்திய பிரிடனின் மந்திரியாயிருந்த வுல்சி என்பவர் சொன்ன வார்த்தைகளைப் போல் இந்த வார்த்தையும் உருக்கமாக இருக்கிறது. ஆனால் ஜப்பான் பிரதம மந்திரியின் ஸ்திதி அவ்வளவு கோளாறாய் இல்லை; ஏற்கனவே ஏற்பட்டிருக்கிற நஷ்டத்தை குறைத்து ஜாஸ்தி சிக்கலில் மாட்டிக் கொள்ளாமல் தன் தேசத்தைப் பாதுகாக்க முடியும்.

இன்னொரு விஷயமும் இருக்கிறது. ஜப்பான் இச்சமயம் யுத்தாவேசத்துடனும் பலத்துடனும் இருக்கிறது. உலகத்திலேயே அதன் கப்பற்படை மூன்றாவது. அதன் விமானப்படை பலமுள்ளது. ஜப்பானியர் கீழ்ப்படியும்

சுபாவமுள்ளவர்கள்; இதனால் தேசத்திற்கு நெருக்கடியான சமயங்களில் ரொம்ப குணமுண்டு; புதுமுறை, தங்கள் உயர்ந்த விதி, முதலிய சாராயம் தலைக் கேறியிருக்கிறது. ஆயினும் அவர்கள் கட்டடத்தில் பிளவுகள் இருக்கின்றன. நாட்டின் கடன் மலைபோலிருக்கிறது; நாளுக்கு நாள் பயங்கரமாக அதிகரிக்கிறது. வரி கடுமை; ஏற்றுமதிகள் குறைந்து விட்டன; பணமெல்லாம் போய்விட்டது. ஜப்பானில் நிலக்கரி, எண்ணெய் முதலிய யுத்தத்திற்கு அவசியமான பொருள்கள் வெகு குறைவு. ஆகையால் "சீன சம்பவம்", சீனு தன்னை பாதுகாக்க ஆரம்பித்தது ஜப்பானுக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணிற்று; "இது துஷ்ட ஜந்து இதை எதிர்த்தால் அது தன்னை பாதுகாக்க பார்க்கிறது" என்று சீனுவைப் பற்றி எண்ணினார்கள். தங்கள் செலவை சீனுவிடமிருந்து வசூல் செய்யப்பார்த்தார்கள்—பலிக்கவில்லை. மேலும், ராணுவமும் சட்டசபையும் எதிர்த்திருக்கும் அரசியல் நிலை வெகு அதிருப்திகரமானது. 1889-ம் வருஷத்திய அரசியல் திட்டம் நடப்பில் நிராகரிக்கப்பட்டிருக்கிறது; சட்டசபை மட்டும் இடையிடையே பெயருக்குகூடி நிஷ்டூரப்படுவதைவிட வேறு ஒரு காரியமும் செய்யவில்லை.

பழைய சிநேகத்தை மறந்து ஜெர்மனியுடன் சேர்ந்த வேறு இரண்டு நாடுகள் பெருங்கஷ்டத்தில் மாட்டிக்கொண்டிருக்கின்றன. இதாலி புரண்டு அழுகிறது, ருமேனியா நிரந்தரமான கலக நிலையில் இருக்கிறது. இது ஜப்பானியருக்கு அபசகுனமாகத் தோன்றவேணும். சிறு ஜப்பானியர் சர்வாதிகார முறையில் ஈடுபட்டு துள்ளினாலும் ஜப்பானியர் மொத்தத்தில் தூர திருஷ்டியுடையவர்கள். ரஷியா விழிப்பாயிருக்கும் இச்சமயத்தில் ஹிட்லர் ஆட்டி வைப்பதற்கிணங்கி போரில் ஜப்பானியர் சிக்கிக் கொண்டார்களானால் பலருக்கு ஆச்சரியமாக இருக்கும்.

## அனுபந்தம்.

---

# ஜப்பானின் நெருக்கடியான சமயம்.

# துடர்ந்தேத்தியான டோக்கியோ சம்மேளனங்களின் அர்த்தம்.

# சீனுவின்மீது படையெடுப்பினுல் அதிருப்தி.

["ஜப்பானின் நெருக்கடியான சமயம்" என்ற தலையங்கத்தின் கீழ் டைம்ஸ் பத்திரிகை ஆசிரியர் எழுதுவதாவது :—]

டோக்கியோவில் கூட்டத்திற்கு பின் கூட்டம் தொடரச் செய்கிறது. 16-ந் தேதியன்று பிரதம மந்திரி ப்ரின்ஸ் கோனுயி என்பவர் வெளிநாட்டு மந்திரியுடனும், கப்பற்படை, தரைப்படை இவைகளின் தலைவர்களுடனும் நெருங்கிய ஆலோசனையுடனிருந்தார். இவர் பார்லிமெண்ட் சபை துவக்குமுன், இரு வீடுகளின் பிரதிநிதிகளுடனும், ஜனநாயகத்தின் தலைவர்களுடனும் துடர்ந்து சந்தித்து வருகிருர். சந்தேகமில்லாமல் இவருடைய முக்கிய கருத்து என்னவென்ருல், சென்ற சில வருஷங்களாக ஜப்பான் கையாடிவரும் கொள்கையின் முடிவைப்பற்றி உள்நாடுகளிலும், வெளிநாடுகளிலும் பரவிவரும் சங்கையைத் தணிப்பதுதான். ஆனுல், இவர் இந்த நூதனமான வழியைக்கையாடவேண்டியதில்லை. சமீபத்தில் யுத்த மந்திரியால் விடுத்த தெளிவான எச்சரிக்கையிலிருந்து ஜப்பானியர்கள் 1941-ம் ஆண்டில் ஒரு பெரிய ஆபத்தை எதிர்க்கும்படி நேரிடும் என்று வெளியாகிறது. தற்சமயம் டோக்கியோவில் வெளியாகிவரும் மகத்தான ஜனச்சேதத்திலிருந்து ஜப்பானிலுள்ள கேவலம் ஒரு பொட்டயன்கூட, ஏறக்குறைய நான்கு வருஷங்களாக யுத்தத்தில் ஜயிக்கமுடியாத சீனுவை ஜயிக்க முயல்வது எவ்வளவு பெரிய நஷ்டத்திற்கு ஹேது என்று நன்கு உணர்வான். இயர்க்கையில் சண்டையிடும் சுபாவமில்லாத ஜப்பானிய ஜனங்களுக்கு, இந்தப் போரில் 35 லக்ஷம் சீனர்கள் மடிந்தார்கள் என்று சொல்வதினுல் ஒரு ஆருதல் ஏற்பட மாட்டாது. சீனர்கள் தங்களுடைய சுதந்திர வாழ்க்கையைக் காப்பாற்றவும் தங்களுடைய அபிமான தாய்நாட்டை கார்க்கவும் உயிரைக் கொடுக்க ஜப்பானியர்கள் மடிவது காரியமில்லாத விஷயமாகும்.

சென்ற 6 வருஷங்களாக ராஜாங்க ராணுவக்கொள்கையினுல் ஏற்பட்டிருக்கும் நஷ்டம் முழுமையும் அவர்கள் காட்டவுமில்லை. மேன்மேலும் அதிகரித்து வரும் பொருள் செலவை உத்தேசித்தால் இந்த தேசத்தின் செல்வத்தைப்பற்றியும், நாணயத்தைப்பற்றியும் சந்தேகமேற்படுகிறது. சென்ற மாதம் வெளியான வரவு செலவு திட்டத்தில், இந்த வருஷத்திய சாதாரண அவசிய செலவானது வருமானத்தைவிட ஒண்ணரை மடங்கு அதிகமாகப் போடப்பட்டிருக்கிறது. சீனுப்போரின் செலவு இதில் சேர்க்கப்படவில்லை. இந்த யுத்தத்தால் ஒரு வருஷத்தில் ஏற்படுகிற செலவு ஒன்றுக்கே ஒரு வருஷத்திய வருமான மொத்தமும்

தேவையாக இருக்கிறது. ஜப்பானிலுள்ள சிக்கலான துரைத்தன விஷயங்களைச் சேர்த்து யோஜித்தும் அதின் செல்வ நிலைமை மிகவும் நெருக்கடியாக்வே யிருக்கிறது. இதுவுமல்லாமல் ஜப்பானில் மற்ற இடங்களைப்போல் ராஜாங்க ராணுவக் கொள்கையினால் மற்றொரு நஷ்டமும் ஏற்பட்டிருக்கிறது. அதாவது வீட்டில் சுதந்திரமின்மை. முந்திய தலைமுறை ஜப்பானிய ராஜதந்திரிகள் ஆதரித்துக் கவனமாய் கட்டச்செய்த விசால நோக்கமுள்ள ஐதீகங்கள் கை நழுவப்பட்டு, தேசாசார பாத்தியங்களின் நஷ்டத்துடன் உயிர்சேதமும், வருமான நஷ்டமும், கூட்டி சேர்க்கப்பட்டு வருகிறது. ஆகவே ஜப்பானிய பொதுமக்கள் கேழ்விகேட்கும் குணத்தில் இருந்து வருகிறார்கள் என்பதில் ஆச்சரியமில்லை. வற்புருத்தலாய் அவர்கள் கேட்கும் கேழ்வியும், "ராணுவ அதிகாரம் பலனுடையதா" என்பதே யாகும். தன்தேசத்தின் உள் நாடு வெளிநாடு காரியங்களில் சிப்பாய்கள் மாலுமிகள் இவர்களுடைய போக்கு மிகவும் கெடுதலை உண்டு பண்ணுவதென்பதை அவர்கள் பார்க்காமலிருக்கமுடியாது. முக்கியமாக ஜப்பானுக்கு மிகவும் பெரிய வெளிநாட்டு பிரச்னமான—ஐக்கிய நாடுகளுடன் உறவு—வேகமாய் க்ஷீணித்துக் கொண்டு வருகிறது.

சீன தேசத்து பெரும்பகுதியாரின் ஆதரவை மார்ஷல் செய்ங்கி கெய் ஷேக் இன்னமும் ஆண்டு அடைந்து வருகிறார். மிஸ்டர் மத்ஸௌகாவின் விபரீதமாய் தோன்றும் பிரகடனங்களில் மற்றொன்றான—கீழ் ஆசியா பிரதேசங்களை ஜயித்து கொள்ளையடிப்பதை ஜப்பான் எதிர்க்கச் செய்தது என்ற விவரத்தை உதாரணமாக மிஸ்டர் வாங் சிங் வெய் போன்ற தற்கால நீச நடவடிக்கையுள்ள சில சீன ஜனங்களே ஒப்புக்கொள்ளுவார்கள். சீனா வடக்கேயிருந்து தெற்குக் கோடிவரை ஆதிக்கம் செய்ய பயங்களான வழிகளைச் சமீப காலங்களிலுள்ள ஜப்பானிய ராஜாங்கத்தார்கள் திடர்ந்தேத்தியாய் கைக்கொண்டு முயன்று பார்த்தார்களென்றும், இந்த ஆதிக்கத்தைத்தான் சீனர்கள் தடுத்து வருகிறார்களென்றும் விஷயம் தெரிந்த ஜப்பானியர்கள் அறிகிறார்கள். "சீக்கிரம் சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கைக்கு ஆதாரம் ஒன்றுமில்லை" யென்று யுத்த மந்திரி தன் தேசத்தாருக்கு இன்னமும் எச்சரிக்கை செய்யவேண்டியிருக்கிறது. சீனாவுக்குப் பிரயாணம்போய் சமீபத்தில் டோக்கியோவுக்குத் திரும்பிவந்த யுத்த காரியாலயத்தைச் சேர்ந்த அச்சு இலாகா பிரதம அதிகாரி கலோனல் மாபூச்ஸி என்பவர், "செய்ங்கி கெய் ஷேக்கின் ராஜாங்கம் அழிந்துவிடும் என்ற நம்பிக்கைக்குத் தற்பொழுது கொஞ்சமும் இடமில்லை" என்று ஒப்புக்கொண்டார். அவர் சீனப்பிரச்னை மிகவும் சிக்கலாக ஆகிவிட்டதென்றும், சங்கிங்கில் இருக்கும் சீனத்தலைவரைச் சுற்றி பிரஜாப்பிரபுத்துவமுள்ள சீன தேசத்தின் உயர்ந்த சுதேசாபிமானிகள் எல்லாரும் இருந்து உதவி புரிவதாக ஒப்புக்கொண்டு தெரிவிக்கச் செய்தார். ஜப்பானியரின் ஆக்கிரமணப்போர் "கடைசியாகவும் முடிவாகவும்" இந்த 1941-ம் வருஷத்தில் தீரச் செய்யுமென்ற ஆரவாரமுள்ள ஒரு புதுவருஷ அறிக்கையை சர்வசேனாதிபதியே விடுவிக்கச் செய்தார் "சுபாவமாகவே சமாதானத்தை விரும்பும்" சீனா. வருங்காலத்தில் உலக சமாதானத்திற்கு பெரிய சகாயத்தைச் செய்விக்கும் என்ற உண்மையையும்

அவர் சேர்த்துச்சொன்னார். ஜப்பானிய ராஜாங்கத்தாரின் தற்காலப்போக்கு அந்த தேசத்தின் அரசிறை வருமானத்தை பாழாக்கும் தன்மையில் கொண்டு விடுவதாக தோற்றுவதுடன், அநேகமாய் தாங்க முடியாத அளவுக்கு தேச உற்பத்தி சாதனங்களை ஏற்கனவே அழுத்தச் செய்யும் சண்டையை மேலும் விரிவு செய்வதில், உள்நாட்டு வெளிநாட்டு ஜப்பானிய ராணுவ அதிகாரிகளுக்கும், இராஜ்ஜிய தந்திரிகளுக்கும் சச்சரவுகள் இருந்து வருவதாகவும் தெரிகிறது. ஐக்கிய நாடுகளை பிரிடனுக்கு எவ்விதமும் ஒத்தாசை செய்யக்கூடாதென்று பயங்கரமான விதமாய் கட்டளையிட்டுக்கொண்டு, ஜப்பான் இதேகாலத்தில் ஜெர்மனிக்கு தன்னாலான உபகாரத்தை செய்து வருகிறது. ஆனல் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் ஜப்பான் பயமுறுத்தல்களை எள்ளளவும் பொருள் செய்யாமல், பிரிடனுக்கும், சீனுவுக்கும் வேண்டியபடி ஒத்தாசை செய்து வருகிறார்.

# வார யுத்தச் செய்திகள்.

---

(23—1—41 லிருந்து 29—1—41 வரை).

## இதாலியின் கரிநாள்.

**டோர்னுவின் வீழ்ச்சி.** டோர்னு பிடிபட்டுவிட்டதாகவும், பிரிடிஷ் சைனியங்கள் பெங்காஸியை நோக்கி முன்னேறுவதாகவும் பிரிடிஷ் ரேடியோ நேற்றிரவு ஒலி பரப்பியது.

**லிபியாப்படையெடுப்பு** டிஸம்பர் 9-ம்தேதியன்று ஆரம்பிக்கப்பட்டு வெற்றிக்கு மேல் வெற்றியாய் நடந்துகொண்டிருக்கிறது. மெர்ஸாமாட்ரூவைப் பிடித்த திலிருந்து ஸிடி-எல்-பரானி, ஸிடி-எல்-பரானியிலிருந்து ஸொல்லம், கபூஸா, பார்டியா, டொப்ரூக், டெர்னு வரிசையாகப் பிடிக்கப்பட்டன. இதைப்போன்ற வேகமான படையெடுப்பு இதுவரையில் கேள்விப்பட்டதில்லை. இந்த வெற்றிகளிலிருந்து வட ஆபிரிக்காவில் கடற்கரையில் நீண்ட பாகமொன்று பிரிட்டனுக்குக் கிடைத்துவிட்டது. இதிலிருந்து மத்தியதரைக்கடலில் கப்பல் போக்குவரத்தை நன்றாய்க் கைவசப்படுத்தவும், அங்கு இருக்கும் ஜெர்மன் விமானங்களைத் துரத்தவும், சமயம் வந்தபோது இதாலியைப் படையெடுக்கவும் முடியும். இதிலிருந்து ஸிரிநேகா முழுவதும் இதாலிக்கு நஷ்டமாகும்.

**எரிடிரியாவில்** டெஸநாய், ஸாப்டொராட், சேரு, எய்லோடா, அம்ஹாகர், பிஸ்கியா முதலிய இடங்களைப் பிடித்தாய்விட்டது. இங்கு விசேஷமாக இந்தியத் துருப்புகள் சண்டை செய்கின்றன. இங்கே அகோர்டாட் என்று ஒரு ஸ்தலம் இருக்கிறது. எரிடிரியாவில் போட்டிருக்கும் ஒரே ரயில்பாதை இதில் முடிகிறது. இங்கிருந்துதான் மஸாவா என்ற துறைமுகத்துக்குப் போகவேண்டும். இந்த இடத்தையும் இப்பொழுது நமது படைகள் வளைத்துக்கொண்டிருக்கின்றன.

**அபிஸீனியாவில்.**—டானு ஏரியின் தென்கிழக்குக் கரையில் அபிஸீனியத் துருப்புகளுக்கும், இதாலியருக்கும் சண்டை ஏற்பட்டு 200 இதாலியர்கள் மாண்டார்கள். தென்-ஆபிரிக்கத் துருப்புகளும், அபிஸீனியச் சிப்பாய்களும் சேர்ந்துகொண்டு எல் யிபோவையும், எல் ஸார்டேவையும் பிடித்துவிட்டார்கள். நெகலி எதிர்க்கப்பட்டது. மெடம்மா பிராந்தியம் முழுவதும் எதிர்க்கப்படுகிறது.

தலைநகராகிய அடிஸ் அபாபா முற்றுகை போட்டால்போல கஷ்டப்படுகிறது. ஊரைவிட்டு வெளியே போக இதாலியர்கள் பயப்படுகிறார்கள். வெளியூர்களில் வசிக்கும் இதாலியர்கள் தலைநகரில் அடைக்கலம் புகுகிறார்கள். சர்க்கரை, புகையிலை, பால், மகரோனி முதலான உணவுப் பொருள்கள் குறைந்து வருகின்றன.

ஹெய்லி ஹெலாஸி, தன் புதுச் சைனியத்தோடு தன் ராஜ்ஜியத்துக்குள் பிரவேசம் செய்துவிட்டார். அவரை வரவேற்கும் கொண்டாட்டம் பகட்டில்லாமல் சிரத்தையோடு நடந்தது. வரவேற்புக்குப் பதில் சொல்லும்போது சக்கிரவர்த்தி, தான் ராஜ்ஜியத்தைவிட்டு 5 வருஷகாலம் வெளியே வசிக்க நேரிட்டபோது பிரிடனுடைய ஆதரவைப் பெற்றிருந்ததாகவும், இப்பொழுது பிரிடனுடைய உதவியால் ஒரு சைனியத்தைச் சேர்த்திருப்பதாகவும் பேசினர்.

**கென்யா** பாகத்தில் பிரிடிஷ் படைகள் முன்னேறி இதாலியர்களைக் கீன்யாவிலிருந்து அடியோடு விரட்டிவிட்டன.

**அல்பேனியாவில்** இதாலிய எதிர்ப்பெல்லாம் பயன்படவில்லை. சபால்லெரே என்ற புது இதாலிய சேனதிபதி வந்ததிலிருந்து இதாலியர்கள் அதிகமாக இறப்பதைத் தவிர வேறு ஒன்றையும் காணேம். பிரிடிஷ் விமானங்கள் எல்பாஸானவை வெற்றிகரமாய்த் தாக்கின. வாலோனவுக்கு 5 மைலுக்குள் கிரேக்கர்கள் நெருங்கிவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

**இதாலிக்கு,** உள்நாட்டிலும் இந்த வாரத்தில் கஷ்டமும் அவமானமும் அதிகம். மிலான், டியூரின் நகரங்களில் கலகமேற்பட்டு, ஜெர்மன் துருப்புகளைக் கொண்டு அடக்கவேண்டியதாயிற்று. இதைச் 'சிறு சம்பவம்' என்று சில அறிக்கைகள் சொன்னலும், அநேக கொலைகள் இதிலிருந்து ஏற்பட்டிருக்கின்றன. இதாலிய, ஜெர்மானிய ரகஸ்ய போலீஸ்கள் சந்தேகப் பட்டவர்களைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**ருமேனியா.** இந்த தேசத்தைப்பற்றிய சமாசாரங்கள் பலவிதமாக வந்து கொண்டிருக்கின்றன. விபரீத ஐரன்கார்ட் கக்ஷிக்காரர்கள் கவர்ன்மெண்டைக் கவிழ்த்துவிடப் பார்த்ததிலிருந்து கலகம் ஏற்பட்டு 30,000 குடியானவர்களும், தொழிலாளிகளும், மால்டாவியா, கிரியேவாவிலிருந்த சைனியங்களும் கலகக்காரர்களோடு சேர்ந்துகொண்டன. மந்திரிகளாகவிருந்த ஸீமாவும், பெட்ரோவிஸெஸ்கியுவும் கலகத்தில் தலைமை வகித்து, பிரதம மந்திரியானவர் ஐரன்கார்ட் கக்ஷிக்கு உரித்தாயில்லை யென்றார்கள். ஸீமா ஐரன்-கார்ட் கக்ஷியின் பொதுப் பணத்தை அபகரித்து விட்டதாக, பிரதம மந்திரி குற்றம் சாட்டினர். கலகம் பலப்பட்டது. பிரதம மந்திரி சைனியத்தை ஏவி, கலகத்தை அடக்க உத்தரவு போட்டார். அதன் முடிவாக, புதன்கிழமை தலைநகரில் தீவட்டிக் கொள்ளை நடந்து, கலகக்காரர்கள் கோரமாய்ச் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். பிராஸால், பிரேய்லா, பிளோயஸ்டி, காலட்ஸ் புயூஸா, பார்லாட் முதலிய இடங்களெல்லாம் கொலைக்களங்களாயின. இவ்விதமாய் 5 நாட்கள் நடந்த பிறகு கலகம் ஒருவிதமாய் அடக்கப்பட்டது. ஸீமாவைப் பிடித்துவிட்டதாகச் செய்தி முதலில் வந்தது. இப்பொழுது அவர் ஓடிவிட்டதாகத் தெரிகிறது.

**பிரான்ஸ்.** நிபுணர்களடங்கிய தேசிய-சபையொன்று பிடேனுக்கு யோசனைகள் சொல்ல பிரான்ஸில் நியமிக்கப்பட்டிருக்கிறது. அங்கத்தினர்கள் நியமிக்கப் பட்டவர்களேயொழிய பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களல்ல.

ஜெர்மனியிலிருப்பதுபோல், விஷியிலும், உத்தியோகஸ்தர்கள் பிடேனுக்கு நேராடி ஜவாப்தாரியாயிருக்கவேண்டுமென்று உத்தரவு பிறந்திருக்கிறது.

ஜெர்மனியோடு சேர்க்கப்படாத பிரான்ஸின் வழியே ஜெர்மனியிலிருந்து ஸ்பெயினுக்குப் போக ரயில் பாதையொன்று சேர்க்கப்பட்டிருக்கிறதாம்.

பிரான்ஸுக்குச் சொந்தமாய் ஆபிரிக்காவில் டுனீஷ்யாவில் இருக்கும் ராணுவ நிலையங்களை உபயோகிக்க விஷியை ஜெர்மனி கேட்டுக்கொண்டு இருக்கிறதாம்.

## ஜெர்மனி-பிடித்துவைத்திருக்கும் நாடுகள்.

**ஹாலண்டு.** இங்கே 'புது அரசியல்' என்று சொல்வதெல்லாம், புதுக் கொள்ளைதான். ஜெர்மனி ஹாலண்டைப் படையெடுத்தபோது ஜெர்மனிக் கேற்பட்ட செலவைக்கொடுப்பதுடன் இப்பொழுது அங்கு வைத்திருக்கும் ஜெர்மன் சைனியங்களுக்கும் ஹாலண்டு உணவுக்காகவேண்டிய செலவையும் கொடுக்க வேண்டும். மேலும் உள்நாட்டில் விளையும் உணவுப்பொருள்களைக் கொள்ளையடிப்பதிலிருந்து பஞ்சம் வந்துவிட்டது. 1,00,000 டச்சுக்காரர்கள் கட்டாயவேலை செய்ய ஜெர்மனிக்குக்கொண்டுபோகப்பட்டு விட்டார்கள். வியாபார—நிலையம் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலமாய் ஹாலண்டினுடைய விளைபொருள்களைக் கொள்ளையடித்துக்கொண்டு போகிறார்கள்.

**பெல்ஜியம்.** மிஸ்டர் ஹூவர் கணக்கிட்டிருக்கிறபடி பெல்ஜியத்தில் இன்னும் ஒரு மாதத்துக்குள்ளாக ஆகாராதிகள் கிடைக்காதாம். பிரிடனிலும், ஜெர்மனியிலும், கொடுக்கப்படும் உணவில் மூன்றில ஒரு பங்குதான் பெல்ஜியத்தில் திட்டம் போட்டு இப்பொழுது கொடுக்கப்படுகிறதாம்.

**நார்வே**யில் ஜெர்மானியர்கள் ராஜத் துரோகிகளைக்கொண்டு கவர்ன்மென்டொன்றை நடத்துகிறார்கள். இவர்கள் ஜெர்மனிக்குத் தொழிலாளிகளை அனுப்புவதற்குச்செய்த பிரயத்தனமொன்றும் பலிக்கவில்லை. தலைநகராகிய ஆஸ்லோவிலிருந்து 1,000 பேர்களை அனுப்பவதென்று போட்டதிட்டத்தில் 200 பேர்கள் கூடச்சேரவில்லை.

**பிரெஞ்சு, இந்து-சைனாவும், தாய்லாண்டும்.** இங்கிருந்து வரும் செய்திகள் முன் பின் விரோதமாயிருக்கின்றன. சில அறிக்கைகளின்படி இவ்விரண்டு தேசங்களும் ஜப்பானுடைய மத்திஸ்தத்துக்கு இணங்கி, ஸைகானுக்கப்பால் ஜப்பானிய யுத்தக் கப்பல் ஒன்றில் மத்தியஸ்தம் நடக்கப்போவதாகத் தெரிகிறது. வேறுசில செய்திகளின்படி சண்டை நிற்கவில்லையென்றும், ஸிஸிபானைத் தகர்த்துக் கொண்டிருப்பதாயும், தாய்லாந்து ஏற்கனவே பிடித்த இடத்தைத் திருப்பிக் கொடுக்க மறுப்பதாயும் தெரிகிறது.

**அமெரிக்கா.** அமெரிக்கா காங்கிரஸின் அங்கமாகிய அயல் நாட்டுக்கமிட்டியானது சாக்ஷிகளை இரண்டு வாரங்களாக விசாரித்து, சில சிறு மாறுதல்களோடு,

பிரிடனுக்குக் கடன் கொடுக்கும் மசோதாவை அநேக வோட்டுகளைக்கொண்டு, அங்கீகரித்து விட்டது. இரண்டாவது வாரத்தில் விசாரிக்கப்பட்ட சில சாக்ஷிக் காரர்கள் விரோதமாக அபிப்பிராயம் கொடுத்தார்கள்.

**மிஸ்டர் நார்மன் தாமஸ்** அமெரிக்கா சமாதானமென்று சொல்லிக்கொண்டு யுத்தத்தைக் கிளப்புவதாயும், ஜனநாயகமென்று சொல்லிக்கொண்டு சர்வாதி காரத்திலிறங்குவதாயும் சொல்லிக்கொண்டார்.

**மிஸ்டர் சார்லஸ் மாக் நார்வி** பிரிடனுக்கு உதவி செய்யவேண்டும், ஆனால் ரூஸ்வெல்ட்டுக்குச் சர்வாதிகாரம் கொடுக்கக்கூடாதென்றார்.

**ஜெனரல்-ஹியு-எஸ்-ஜான்ஸன்** இந்த மசோதா சண்டையை முன்னிட்டு பிரிடனோடு, செய்துகொண்டிருக்கும் ஒப்பந்தமென்றும், இதிலிருந்து ஆபிரிக்கா வின் வடக்கேயாவது கிழக்கேயாவது அமெரிக்கா யுத்தம் செய்ய நேரிடுமென்றும் அபிப்பிராயப்பட்டார்.

**கர்னல் சார்லஸ் லிண்ட்பெர்க்** பிரிடிஷ் மக்களுக்கு அனுதாபத்தைக்காட்டி அவர்களுடைய நோக்கங்களை வெறுத்தார்.

**மிஸ்டர் வில்லியம் புல்லிட்** பிரிடிஷ் கப்பற்படை போனால் அமெரிக்கா படை யெடுக்கப்படுமென்றும், அதைத்தடுக்க அமெரிக்காவில் இப்பொழுது போதுமான சைனியமில்லாததால், தளவாடங்கள் தயாரிக்கச் சில வருஷங்கள் பிடிக்கு மென்றும், அதற்காகவாவது இப்பொழுது பிரிடனுக்குச் சகாயம்செய்து எதிரி யைத் தடுக்கவேண்டுமென்றும் சொன்னார்.

**புதிய ஸ்தாநிகராகிய** ஹாலிபாக்ஸ் பிரபு இங்கிலாந்திலிருந்து புறப்பட்டதும் கடல்யாத்திரை செய்ததும், அமெரிக்காவில் வரவேற்கப்பட்டதும், அவருடைய மேன்மைக்கும், அவர் போயிருக்கும் காரியத்துக்கும், தக்கவாறு இருந்தன. புறப்படும்போது மிஸ்டர் சர்ச்சில் லண்டனிலிருந்து கூடச்சென்று கப்பலேற்றி விட்டார். பிரயாணம் ஐந்தாம் ஜார்ஜ் என்ற யுத்தக் கப்பலில் நடந்தது. அமெரிக்கா சேர்ந்தவுடன், மிஸ்டர் ரூஸ்வெல்ட் முன்னிருந்த வழக்கத்தை யெல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டு, தானும், தன் மனைவியும், கர்னல் பிராங்கு நாக்ஸ் முதலிய உயர்ந்த அதிகாரிகளும் புடைசூழ அனபாலிஸ் என்ற துறைமுகம் வந்து, ஹாலிபாக்ஸ் பிரபுவை வரவேற்று, பிறகு, தனது கப்பலில் ஏற்றிக்கொண்டு சிறிதுநேரம் கடல் பிரயாணம் செய்து, இறங்கி, சந்நாகம் பின்வர, மோட்டாரில் இருவரும் ஏறிக்கொண்டு வாஷிங்டனுக்கு வந்து, ஊர்வலம்போய், ஹாலிபாக்ஸி னுடைய ஜாகையில் அவரை இறக்கி விட்டுச்சென்றார். இந்த வரவேற்பில் அமெரிக்கா முழுவதும் கலந்துகொள்ளுகிறதாகவும், இவர் வரவு ஒரு சினிமாக் கதையைப்போல் ருசிகரமாயிருப்பதாகவும் அமெரிக்கப் பத்திரிகைகள் கூறு கின்றன.

1939-டிஸம்பர் 2-ல், ரஷியாவுக்கு அமெரிக்காவிலிருந்து விமானங்களும், விமான சாமான்களும் விற்கக்கூடாதென்று போட்ட உத்தரவு இப்பொழுது ரத்து செய்யப்பட்டிருக்கிறது. மேலும் விளாடிவாஸ்டாக் என்ற ரஷிய ஸ்தலத்தில் அமெரிக்க வியாபார காரியஸ்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இதிலிருந்து ரஷியாவுக்கும், அமெரிக்காவுக்கும் நேயம் ஏற்படுமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

**பிரிடன் தொழிலாளிகளின் பதிவு.** இது சம்பந்தமாக, காமன்ஸ் சபையில் நடந்த சர்ச்சையை, தொழில்—இலாகா மந்திரி மிஸ்டர் பெவின், ஆரம்பம் செய்து வைத்தபோது, விமானங்களைக் கட்டும் தொழிலானது சிறு துளிகளாக ஆரம்பிக்கப்பட்டு, வெள்ளமாய் நிறைந்து வருவதாகச் சொன்னார். அமெரிக்கா வின் உதவியைக்கொண்டு ஜெர்மனியைவிட அதிக விமானபலத்தையடையலாம். மாரி காலத்தில் பகல்வேலை குறைவாயிருந்தும், அடிக்கடி விமான எதிர்ப்புக் களிலிருந்தும், கோடையில் கட்டிய விமானங்களைக் காட்டிலும், மாரிகாலத்தில் அதிக விமானங்கள் கட்டப்பட்டன.

சென்ற யுத்தத்தில் 5 கப்பற்படைகள் செய்த காரியத்தை இப்பொழுது பிரிடிஷ் கப்பற்படையொன்று தனியாக நின்று செய்கிறது. இக்கப்பல்களைக் கட்டுவதும், பழுதுபார்ப்பதும் பிரிடனுக்கு முதற்காரியமாகும். இருந்தபோதி லும், இந்த 6 மாதங்களில், முன்னைவிட 100-க்கு 30 பங்கு அதிகம், வியாபாரக் கப்பல்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

மேலும், நவம்பர் மாதத்தைக்காட்டிலும், டிஸம்பர் மாதத்தில் 24,400,000 பவுன் பெறுமான ஏற்றுமதி சாமான்கள் அதிகமாகச் செய்யப்பட்டு மத்திய ஐரோப்பாவிலும், கிழக்கு மத்தியதரைக்கடலிலும் வியாபாரம் குறைந்தும், இதர இடங்களில் விற்கப்பட்டிருக்கின்றன. இதோடு நைல் தீரத்தில் பிரிடிஷ் சைனியங்களுக்கு வேண்டிய தளவாடங்களும் செய்து அனுப்பப்பட்டிருக் கின்றன.

ஆகையால், கட்டாயமில்லாமலே, தொழிலாளிகள் அபூர்வமான வேலையைச் செய்து வருகிறார்கள். ஆனால், இப்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியில் ஏற்கனவேயுள்ள தொழிலாளிகளிடமிருந்து அதிக வேலைவாங்கவும், புதுத் தொழிலாளிகளை நியமிக்கவும் வேண்டியிருக்கிறது. உதாரணமாக, பெண்பிள்ளை களை இனி அதிகமாக வேலைக்கு எடுக்கவேண்டும். யுத்த தளவாடங்களைச் செய் யும் தொழிலாளர்கள் இனி ஸர்க்கார் சம்மதமின்றி வேலையைவிட்டுப்போகக் கூடாது. அரைநாள் வேலையும் நிறுத்தப்படும். பிரயோஜனமில்லாத முதலாளி கள் தொழிற்சாலைகளிலிருந்து நீக்கப்படுவார்கள். வயதுக்கிரமப்படி தொழிலாளி கள் ஸர்க்கார் கணக்குகளில் பதிவு செய்யப்படுவார்கள்.

இதன் பிறகு நடந்த சர்ச்சையில், காமன்ஸ் சபையானது இப்பொழுதுள்ள ஏற்பாடுகளைவிட அதிகமாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளத் தயாராயிருப்ப தாகத் தெரிந்தது. இது வரையில் செய்த ஏற்பாடுகள் போதாதென்றும்,

உத்தேசித்திருக்கும் ஏற்பாடுகளை ஸர்வ ஜனங்களும் ஆதரிப்பார்களென்றும், தானகத் தொழிலாளர்கள் அமர்வதோடு, கட்டாயப்படுத்துவதும் அவசியமாகு மென்றும், இன்னுமதிகப் பிரசாரம்செய்து, விசேஷமாக, அதிகப் பெண்பிள்ளை களைத் தொழிலில சேர்க்கவேண்டுமென்றும் சொல்லப்பட்டது.

இந்தச் சர்ச்சைக்கு முடிவுரை சொல்லும்போது மிஸ்டர் சர்ச்சில் புது ஏற்பாட்டின் அவசியத்தை எடுத்துக் காட்டினர். இதற்குக் காரணம் இப் பொழுது பிரிடிஷ் சைன்யம் பலப்பட்டதுதான். பிரிடனில் மட்டும், உள் நாட்டுப்பாதுகாப்புப் படையைச் சேர்த்து 40 லக்ஷம் பேர்கள் சேர்க்கப்பட்டிருக் கிருர்கள். இந்தத் திட்டம் 1939-ல் போடப்பட்டது. இவர்களுக்கு வேண்டிய தளவாடங்களைச் செய்ய, புதுத் தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இப் பொழுதுதான் இவைகள் அதிக சாமான்கள் செய்ய ஆரம்பித்திருக்கின்றன. இன்னும் ஆறுமாதத்திற்குள் ஏராளமான தளவாடங்களைச் செய்ய முடியும். அதற்கு அதிகத் தொழிலாளிகள் வேண்டும். ஆண் பெண் தொழிலாளிகள் வேண்டும். நிலப்படையும், விமானப்படையும் அதிகப்படப்பட, தளவாடங்கள் செய்யத் தொழிலாளிகளில்லாத குறைவு ஏற்பட்டுவிட்டது. இதை நிவர்த்திக்க இந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இதிலிருந்து யுத்த தயாரிப்பு பூர்ணமாய் விடும்.

வோட்டுகள் எடுக்காமல் இந்தச் சர்ச்சை முடிந்தது.

**விமான எதிர்ப்புகள்.** 9 நாட்களாக பிரிடன்மேல் விமான எதிர்ப்புக் கிடை யாது. பிரிடிஷ் விமானிகள் எதிரிகளுடைய தேசங்களுக்குப் போய்ப் படை எடுத்த விவரங்களை அட்டவணைகளில் காணலாம்.

**மெடாக்ஸாஸின் மரணம்.** புதன்கிழமை காலையில் கிரீஸின் பிரதம மந்திரி மெடாக்ஸாஸ் மரணமடைந்தாரென்று கேட்க வியசனிக்கவேண்டியிருக்கிறது. இவர் தேசாபிமானியாயிருந்ததோடு, யுத்தவீரனும், ராஜிய தந்திரியுமாவார். ஐரோப்பிய நிலைமை அலங்கோலமாயிருந்த சமயத்தில், 4 மாதங்களுக்கு முன் இதாலியை எதிர்த்து, யுத்தப்போக்கைத் திருப்பி, தன் தேசத்தின் புராதன கீர்த்தியை நிலைநாட்டினர். அவருடைய பெயர் அவர் தேசத்தின் சரித்திரத் திலும், உலகத்திலும் விளங்கும். சிறு தேசங்கள் ஸ்வதந்திரத்தை நிலைநாட்ட இவர் ஒரு வழிகாட்டியாவார்.

| தேதி | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **20—1—41** (திங்கட்கிழமை). | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமானஞ்சுடும் பீரங்கிகள், இன்னும் மற்ற தற்காப்பு ஸாதனங்கள்.—டொப்ருக் (Tobruk). | ...... | தகர்க்கப்பட்டன 2 பீரங்கிகள் நாசமாயின. |
| | சைனியங்கள் வசிக்குமிடங்கள், இன்னும் மற்ற ராணுவமுக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—டெர்ன (Derna). | ...... | எங்கும் பெருந்தீ சூழ்ந்தது. |
| | எல் குப்பி (El Gubbi). | ...... | ...... |
| | மின்சார உற்பத்திச்சாலை, ஒரு பெரிய தொழிற்சாலை.—மஸாவா (Massawa). | ...... | ...... |
| | ரயில்வேஸ்டேஷன்.—அய்ஷா (Aisha). | ...... | பாதை தகர்க்கப் பட்டது. |
| | சைனியங்கள் ஏறிப்போய்க்கொண்டிருக்கும் லாரிகள்.—அதாத் (Adad)திக்கு சமீபத்தில். | ...... | பலத்த சேதம். |
| | சைனியங்கள் தங்குமிடம், கோட்டைகள்.—மற்றோரிடத்தில். | ...... | தீப்பிடித்தன. |
| | மோட்டார் வண்டிகள்.—செரு (Cheru)வுக்கும், பிஸ்கியா (Biskia)விற்கும் மத்தியிலுள்ள ரோடு. | ...... | கடுமையான சேதம். |
| | தரையில் இருக்கும் விரோதி விமானங்கள்.—ஜாவல்லோ (Javello). | ...... | குண்டு வீசும் விமானங்களின் மேல் குண்டு வீழ்ந்தது. |
| **21—1—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—எல்பஸான் (Elbasan). | ...... | பலத்த சேதம். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | டொப்ருக் (Tobruk). | 1 விமானம். | ...... |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **22—1—41.** (புதன்கிழமை). | | | |

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| | விமான நிலயங்கள், தரையில் இருக்கும் விமானங்கள், சாமான் வண்டிகள், முக்யமான தொழில்களில் ஈடுபட்டிருக்கும் சைனியங்கள்—விரோதி ஆக்ரமித்திருக்கும் வட பிரான்ஸ் (France). | நஷ்டமில்லை. | எங்கு பார்த்தாலும் ஒரே தீமயம். பலத்த சேதம். தரையில் பல விமானங்கள் சேதமாயின. |
| | டஸ்ஸல்டார்ப் (Dusseldorf) பிரதேசம் | ...... | ...... |

ஸிஸிலி (Sicily).

| | | | |
|---|---|---|---|
| | விமான நிலயங்கள்.–அகஸ்டா (Augusta), ஸிராக்யூஸ் (Syracuse), கடானியா (Catania). | ...... | தீப்பிடித்தன. பலத்த சேதம். |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | சைனியங்கள் வசிக்குமிடம்.–அபலோனியா. | ...... | ...... |
| | பாதுகார்த்தல்.—சைனியத்தின் முன்னணி ஆதாத் (Adad), அஸ்ஸாப் (Assab). | 1 விமானம். நஷ்டமில்லை. | 1 விமானம். |
| | விமான நிலயம்.–அபிஸீனியா (Abyssinia) வில் யாவெல்லோ. | ...... | 3 விமானங்கள் நாசமாயின. |

**23—1—41.** (வியாழக்கிழமை).

அல்பேனியா (Albania).

| | | | |
|---|---|---|---|
| | ராணுவ கட்டடங்கள்.–பேராட்டி (Berati) | ...... | சேதமாயிற்று. |
| | மோட்டார்வண்டிகள்.–பேராட்டி (Berati)க்கும் கெல்ஸைரி (Kelcyre)க்கும் மத்தியிலுள்ள ரோட்டு. | ...... | பலத்த சேதம். |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | சைனியங்கள் வசிக்குமிடங்கள், விமான நிலயம்.—அபலோனியா (Apollonia) | ...... | வெடிகளும், தீயும், கிளம்பின. |
| | கட்டடங்கள்.—டேர்ணு (Derna). | ...... | ...... |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **23—1—41.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa)**—தொடர்ச்சி. | | |
| | **தரையில் இருக்தும் விமானங்கள்.**—மாரோவா (Maraua). | ...... | பல விமானங்கள் சேதமாயின. |
| | வேவுபார்த்தல்.—கிழக்கு ஆபிரிக்கா (Africa). | ...... | ...... |
| | அரசாங்க கட்டடங்கள், விமான நிலயம்.—ஸியாஸியமன்ன (Sciasciamanna). | ...... | 4 விமானம் சுட்டுத் தள்ளப்பட்டன; மற்றும் பல சேதமடைந்தன. |
| | **கட்டடங்கள்.**—நெகெல்லி (Neghelli). | ...... | ...... |
| | **விமானச் சண்டை.**—செரு (Cheru). | ...... | 1 விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது பல சேதமாயின. |
| | **விமான நிலயம்.**—ரோட்ஸ் (Rhodes) தீவிலுள்ள மாரிட்ஸா (Maritza). | ...... | தீப்பிடித்தது. |
| **24—1—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில், வேவுபார்த்தல், காவல் காத்தல்.—இங்கிலீஷ் (English) கால்வாய்; பிரஞ்சு (French)-க் கடற் கரை. | ...... | ..... |
| | இரவில் ஸப்மரைன் (Submarine) நிலயம்.—லோரியான் (Lorient). | நஷ்டமில்லை. | பலத்த சேதம். |
| | **ஸிஸிலி—(Sicily).** | | |
| | **இதாலிய ராணுவ நிலயங்கள்.**—ஸிஸிலி (Sicily). | ...... | மால்டாவிலிருந்து தீப்பற்றி எரிவது தெரிந்தது. |
| | **இதாலிய ஆபிரிக்கா—(Africa).** | | |
| | **தரையிலிருக்தும் விமானங்கள்.**—மாக்ரும் (Magrum). | ...... | பல விமானங்கள் சேதமாயின. |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம் | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **24—1—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி. | | |
| | ரயில்வே பாதையும், ஸ்டேஷனும்.—எரிடிரியா (Eritrea) விலுள்ள பிஸ்கியா (Biskia). | ...... | பலத்த சேதம். |
| | மோட்டார் வண்டிகள்.—பிஸ்கியா (Biskia)விற்கு மேற்கே. | ...... | ...... |
| | தரையிலிருக்தும் விமானங்கள், மோட்டார் வண்டிகள் —அகோர்தத் (Agordat). | ...... | ...... |
| | ரயில்பாதை.—பிஸ்கியா (Biskia)விற்கும் அகோர்தத்து (Agordat)-க்கும் மத்தியில். | ...... | ...... சேதமாயிற்று. |
| | விரோதி ஸ்தலங்கள்.—அம் (Umm). | ...... | தீப்பிடித்தன. |
| | ரயில்வே ஸ்டேஷன்.—கேரென் (Keren). நஷ்டமில்லை. | | |
| **25—1—41.** (சனிக்கிழமை). | | | |
| | அல்பேனியா (Albania). | | |
| | சைனியங்கள் தங்குமிடம்.—எல்பஸானு (Elbasan)க்கருகிலுள்ள புல்ஸா (Bulsa) | ...... ...... | ...... குண்டு நேரே விழுந்தது |
| | இதாலிய சாமான் கிட்டங்கி.—அல்பேனியா (Albania). | ...... | தீப்பிடித்தது. |
| | இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| | விமானங்கள் இறங்குமிடம்.—மாரோவா (Maraua). | ...... | ...... |
| | விமான நிலயம்.—பெர்கா (Berka). | ...... | ...... |
| | இதாலிய குண்டுவீசும் சுழல் விமானங்கள், ஜராபப் (Jarabab). | | சேதமாயின. |
| **26—1—41.** ஞாயிற்றுக்கிழமை. | | | |
| | ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| தொழிற்சாலைகள்.—ஹானேவர் (Hanover). நஷ்டமில்லை. 3 விமானங்கள் | | | |

| தேதி | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **26—1—41.** | (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | போக்குவரத்து, தந்தி தபால் சாதனங்கள்.—டெபெலேனி (Tepeleni) க்கும், வலோனு (Valona) விற்கும் மத்தியில். | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | மோட்டார் வண்டிகள்.—டெல்லேனு (Tellena)-விற்கு சமீபத்தில் ஒரு ரோட்டில். | ...... | ...... |
| | விமான நிலயம்.—லிபியா (Libya)-வில் உள்ள பார்ஸி (Barce). | ...... | தரையில் கிடக்கும் விமானங்கள் நாசமாயின. |
| | விமானங்கள் இறங்குமிடம்.—டெர்னு (Derna). | 1 விமானம். | ...... |
| | ஒரு பாலம்.—டெல்விஞு. | ... | ...... |
| | மோட்டார் வண்டிகள்.—பாரெண்டு (Barento) அம் ஹாகர் (Um Haggar). | ...... | குண்டு நேரே வீழ்ந்தது. |
| | வேவுபார்த்தல், காவல் காத்தல்.—மார்டுபா எல்மெகெல்லி (Martuba-Elmechili) பிரதேசம். | நஷ்டமில்லை. | 6 விமானங்கள். |

---

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **21—1—41.** | (செவ்வாய்க்கிழமை). | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—லண்டன் (London) சுற்றுப்புறங்கள்; ஹோம் (Home), கிழக்கு (East) கவுண்டி (County)களில் சில இடங்கள், கிழக்கு ஆங்கிலியா (Anglia) வில் ஒரு கடற்கரைப் பட்டணம். | ...... | சில வீடுகள் சேதமாயின. சிலர் மாண்டனர். |
| | இரவில்.—விமானப்படையெடுப்பே இல்லை. | ...... | ...... |

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **21—1—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **கிரீஸ் (Greece)** | | |
| | ப்ரீவிஸா (Preuiza), வோலோஸ் (Volos), ஸலானிகா (Salonika). | ...... | சில கட்டடங்கள் இடிந்தன. சிலர் உயிரிழந்தனர். |
| **22—1—41.** (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—கெண்ட் (Kent) கடற்கரை, யார்க்ஷயரிலு (Yorkshire)லுள்ள கிழக்கு ரைடிங் (East Riding). | 2 விமானங்கள். | சேதமேயில்லை. ஒருவருக்கும் காயமுமில்லை. |
| | இரவில்.—கிழக்கு கவுண்டிகளி (Eastern Counties)லுள்ள அங்குமிங்கும் சில இடங்கள். | ...... | ...... |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | ஜானினு (Janina)வில் ஜனங்கள் வசிக்குமிடம். | ...... | ஒருவருக்கும் காயமுமில்லை; சேதமுமில்லை. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | ...... | சேதமே இல்லை. |
| **23—1—41** (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain)** | | |
| | இன்று விமான நடவடிக்கையே இல்லை. | ...... | ...... |
| **24—1—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பிரிடனி (Britain)ல் ஒரு இடத்திலும் விமான நடவடிக்கை இல்லை. | ...... | ...... |

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **25—1—41.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain)** | | |
| | பகலில்.–கிழக்கு ஆங்கிலியா (Anglia)வில் இரண்டு இடங்கள். | ...... | சொற்பசேதம், சிலருக்குக் காயம். |
| | இரவில்.–மேற்கு இங்கிலாந்தி (England)ல் ஒரு கடற்கரைப்பட்டணம். | ...... | சேதமேயில்லை. |
| | **அல்பேனியா (Albania), கிரீஸ் (Greece).** | | |
| | கிரேக்க சைனியங்கள் இருக்குமிடங்கள்.— வடக்கு பிராந்தியம் முழுவதும். | 3 விமானங்கள். | ...... |
| | ஸலோனிகா (Salonika). | 3 விமானங்கள். | |
| **26—1—41** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain)** | | |
| | பகலில்.—வடகிழக்குக் கடற்கரை ... | ...... | ஒருவருக்கும் காயமில்லை; சேதமேயில்லை. |
| | இரவில்.—விமான நடவடிக்கையே இல்லை | ...... | ...... |
| **27—1—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பிரிடனி (Britain)ல் ஒரு இடத்திலும் இன்று முழுவதும் விமான நடமாட்டம் இல்லை. | ...... | ...... |

# யுத்தக் குறிப்புகள்.

## யந்திரத்தில் இருக்கிறது சூக்ஷமம்......!

கேவலம் "ஒரு சம்பவம்" என்று சர்வாதிகாரிகள் சொல்லக்கூடிய இந்த யுத்தமொன்று நீங்கலாக எனக்குத் தெரிந்தவரை ஒவ்வொரு யுத்தத்திலும் பட்டாள பலம் எந்த பக்கமுண்டோ அந்த பக்கம்தான் ஜயம் என்று சொல்லுவது உண்டு. அதாவது, செவ்வனே தயார் செய்யப்பட்ட சைனிய பலமுள்ளவர்கள் பக்கமென்று மட்டுமில்லை, மனித பலம், அதாவது, ஜனத்தொகை பலமுடைய பக்கம் ஜயம் என்று சொல்லுவதுண்டு.

தனக்குள்ளேயே சக்தியுண்டாக்கி வேலை செய்யும் யந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டதால் மனிதர்கள் காரியங்கள் எப்படி மாறுதலடைந்திருக்கின்றன வென்பது எல்லோருமறிந்தது. நவீன சைனியங்களிற்கு ஏற்பட்டிருக்கிற யந்திர பலமும் நமக்கு நன்றாய்த் தெரியும். ஆனால், ஏறத்தாழ ஒரே அளவிற்குச் சரீர தாட்டியம், சுதேசாபிமானம், யுத்த முஸ்தீபுகள் தயாரிப்பு இருந்தால், எந்தப் பக்கம் ஜனத்தொகை பலமிருக்கிறதோ அந்தப் பக்கம்தான் ஜயமடையும் என்ற கொள்கை இந்த பேய் போன்ற யந்திரங்களால் பறந்து போய்விட்டதென்று எவருமே நம்பியிருக்கமாட்டார்கள்.

ஆயினும், இதன் உண்மை இந்த யுத்தத்தில் நன்றாய் வெளியாகிவிட்டது. Mr. சர்ச்சில், நமக்கு மனித சகாயம் தேவையில்லை, யந்திரங்கள் வேணுமென்று, Mr. ரூஸ்வெல்டிடம் சொல்லுகிறார். Mr. ரூஸ்வெல்ட்டும் அவருடைய சகாபாடிகளில் பலரும் அதையே பலமாய் ஆதரிக்கிறார்கள்.

உலகம் முழுவதும் பெயர்போன ஒரு யுத்த வீரரின் தலைமையில் மொத்தத்தில் 1,100 பெயர்களுக்குமேல் சேதமில்லாமல் ஒரு லக்ஷம் போர்வழிகளுள்ள ஒரு பெரும் சைனியத்தை ஆறு வாரகாலத்தில் வட ஆபிரிகாவில் சின்னா பின்னமாக்கி விட்டோம். இருதிறப்பாரும் இது யந்திரங்களின் தாங்கமுடியாத பலப் பிரயோகத்தால் ஏற்பட்டது என்று சொல்லுகிறார்கள்.

மூந்திய போரின் முதல் 16 மாதங்களில் எல்லா போர் முனைகளிலும் மொத்தம் எவ்வளவு பெயர்களை இழந்தோமென்று எனக்கு ஞாபகமில்லை; ஆனால் அதன் சங்கியை பல லக்ஷங்களாக இருக்கவேண்டும். ஆனால் இப் போரிலோ, மொத்த சேதம் 60,000-க்கு கீழ் என்றும், அதில் பாதிவரை பட்டாளத்தைச் சேராத ஊர் வாசிகள் என்று நேற்றுத்தான் Mr. சர்ச்சில் சொன்னார்.

இதனால் என்ன ஏற்படுகிறதென்றால் முந்தி நடந்த எந்த யுத்தத்திலும் இல்லாத விதமாக லக்ஷக்கணக்கான பெயர்கள் இருக்கிறார்கள் என்றும், இவர்களை பலவந்தமாகப் பட்டாளத்தில் சேர்ப்பதைக் காட்டிலும் கைத்தொழில் சாலைகளில் சேர்க்கவேணுமென்றும் ஏற்படுகிறது.

## புதிய நிறைகள்.

சுருங்கச் சொல்லில், எல்லாம் மாறிவிட்டது. 85,000,000 ஜெர்மானியரும் அவர்கள் துணைவர்களுமாகச் சேர்ந்து பிரிடனின் 55,000,000 பெயர்கள் என்ன, அதன் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்தவர்களென்ன, இவர்களை (முதல் துணைவன் இழக்கப்பட்டு போனாலும்) ஜயிக்க முடியாது. எந்தத் திறப்பாருக்கு லக்ஷக் கணக்காக வெடிகுண்டுகளும், குண்டு வண்டிகளும், ஆயுதம் நிறைந்த 'கார்' களும், 'லாரி' களும் விமானங்களும், ஆயிரக்கணக்கான சிறு கப்பல்களும் நடுத்தரமான வியாபாரக் கப்பல்களும், யுத்தக் கப்பல்களும், நூற்றுக்கணக்கான விமான நிலயங்களும், பெருங்கப்பல்களும் இடைவிடாமல் காலதாமதமன்னியில் கிடைக்குமோ அந்தத் திறப்பிற்குத்தான் இந்த யுத்தத்தில் வெற்றி கிடைக்கும். மேலும், இந்த ராக்ஷஸ வேலையில் வாரம் 80-மணி நேரம் வேலை செய்யும் லக்ஷக்கணக்கான தொழிலாளிகளுக்குச் சாப்பாடு போட்டு பாதுகாக்கக்கூடிய திறப்பிற்கே ஜயம்.

இந்தப்படி செய்யக்கூடிய திறப்பு எது? அமெரிக்கா முழுதும் தனது ஆயுதச்சாலையாகக்கொண்டதும் தன் சாம்ராஜ்யத்தின் கைத்தொழில் சக்தியின் பிரயோஜனத்தைக்கொண்டதும், இவைகள் தயார்செய்யும் தளவாடங்களைச் சாவதானமாய் கொண்டுவரும்படி சமுத்திரவச்யமுமுள்ள பிரிடனா? அல்லது, தங்கள் தளவாடத் தயாரிப்பில் எட்டக்கூடிய எல்லையை ஏற்கனவே அடைந்து, கடல்கிட்ட நெருங்கமுடியாததும், பக்கதேசத்தாரை முடிந்தவரை கொள்ளையிட்டு ஓய்ந்துபோனதுமான அச்சு தேசத்தாரா?

ஒருதரம்தான் பேட்டி!

## ஒரு தாக்கீது.

மேலே சொன்னதில் சேர்ந்திருக்கிற "பிரிடன் உதவி மசோதா" இன்னும் மசோதாவாகத்தான் இருக்கிறது, இன்னும் சட்டமாகவில்லை. காங்கிரஸில் அது வாதிக்கப்படும்; அது தள்ளுபடியாகக்கூடும். அடுத்துவரும் வாரங்கள் வெகு நெருக்கடியான சமயம். நமக்கு எவ்வளவு நெருக்கடியோ அமெரிக்கருக்கும் அவ்வளவு நெருக்கடியென்று அமெரிக்கர்களே உணருகிறார்கள். அது Mr. ரூஸ்வெல்ட் விடுத்த பெயர்போன "செய்தி" பலிதமாகுமென்பதற்கு சுபசூசகமாகும்.

ஐரோப்பாவில் மனநிலை மாறுவதில் இதாலியரைப்போல் எவருமில்லை; அவர்கள் அற்பகாரணத்தால் ஒரு சமயம் தலை நிமிர்ந்து நிற்பார்கள்; சில சமயம் தலையை தொங்கப்போட்டு பதுங்குவார்கள். சிலர் சொல்லுவதுண்டு, முஸொலினி இங்கிலாந்தில் பிறந்திருந்தால் அவர்பெயரே தெரிந்திருக்காது; எந்நேரமும் கலகம் செய்கிறவரென்று போலீஸ் கோர்ட்டுகளில்மட்டும் அவர் பெயர் அடிபட்டிருக்கும். ஆனால், அவர் தடபுடல் பேச்சுகள், மல்யுத்தம் செய்பவன் போன்ற புகைப்படங்கள், அழுத்தமான கனத்த முகவாய்க்கட்டை, உடுப்பின் கட்டிற்கடங்காத பருத்த சரீரம் முதலியவைகளை ஆதாரமாகக்கொண்டு, இதாலியர் இவரை புராதன ரோமாபுரியின் தெய்வங்களில் ஒன்றாக இவரை தேர்ந்தெடுப்பார்கள்.

அது தலை நிமிர்ந்திருந்த சமயம்—அந்த துரதிர்ஷ்ட இதாலியர் மனம் இப்போது எவ்வாறு தத்தளிக்கும்! டாரண்டோ—அல்பேனியா—லிபியா—போதாதற்கு வீரத்தலைவர் என்ற பெயர்கொண்ட பேர்வழி, பிராசீனமாகப் பயந்து வெறுப்புடன் மதித்த தேசத்தாரை "வாருங்கள், வந்து நான் இழிவடைந்து கிடக்கும் நிலைமையைப்பாருங்கள்" என்று அழைக்கிறார். உண்மையில் ஜெர்மானிய விமானப்படை இதாலிய விமான நிலையங்களில்வந்து காக்கவேணும் என்று (இவ்வளவுதான் கேட்டாரோ, மேற்கொண்டும் கேட்டாரோ, தெய்வத்திற்குத்தான் வெளிச்சம்). முஸோலினி வேண்டிக்கொண்டது இதாலியர் இழிவடைந்து மனம் தத்தளிக்கிறதற்கு வெளிப்படையான அத்தாட்சியாகும்.

## நோக்கயிருப்பவை.

இதாலியர் எண்ணமெப்படியிருந்தாலும் இந்த ஹூண படையெடுப்பின் உள் கருத்து விசித்திரமாகயிருக்கிறது.

(a) ஹிட்லர் ஏமார்ந்தவனல்ல, வீணுகப் பணம் செலவிடுகிறவனல்ல! இதாலியர் கீழே விழுவே, வெகுநாள்வரை, "ஏது இதாலி சின்னுபின்னமாகப் போய்விடுமோ என்னமோவென்று" ஜெர்மன் பத்திரிகைகள் சொல்லுவது தடுக்கப்படவில்லை. அவர்கள் திண்டாடட்டும் என்ற மனோபாவத்துடன் இருந்தான். இந்த ஸ்திதியில், பிரான்ஸு தன் வழி வரவேணுமென்று இவன் செய்த சூழ்ச்சிகளுக்கு இசையாததால், இப்படிச்செய்தாரென்பதைவிட வேறு காரணம் கிடையாது.

(b) பிரெஞ்சு கப்பற்படையும் மத்தியதரைக்கடல் துறைமுகங்களும் கிடைக்காததால், ஜெர்மானியர்கள் இதாலிய 3 படை இலாகாக்களில் ஒன்றை கைவசப்படுத்தப்போகிறுர்கள். (முதலாவதாக எதை?)

அதாவது, இம்மாதிரி ஏதேனும் செய்யாவிடில் இதாலியையே இழக்க நேரிடுமென்பது ஹிட்லரின் பயம்.

(c) ஐரோப்பிய புது முறையில் இதாலி ஒட்டுமென்றே ஹிட்லர் எப்போதும் எண்ணியிருந்தான். இந்த நோக்கத்துடன் பல பேர்வழிகள் இதாலியில் பத்திரிகைகள், சங்கங்கள், கைத்தொழிற்சாலைகள் மூலம் வேலை செய்து வந்திருக்கிறுர்கள். சுதந்திரம், அச்சு தேச கொள்கைகளைப்பற்றி கண்டனம் முதலியவைகளைக்காட்டிலும் அமளியன்றி இதாலியை வசப்படுத்துவதில் ஹிட்லருக்குக் கவனம்; ஆனல், இதாலியில் ஜெர்மானியர் வந்து கூடவே, மற்ற "ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகள்" போலவே, இதாலியும் வம்புவியவகாரங்களைக் கிளப்புமென்பது ஹிட்லரின் பயம்.

(d) இதாலிக்கு இவர் செய்யும் உதவியானது வெகு காலதாமதத்தின் பேரில் செய்யப்பட்டதென்று நினைக்கக்கூடியதாகவிருக்கிறது; தரைப்பட்டாளத்துடன் வேலை செய்ய ஜெர்மன் விமானங்கள் தயாரானவர்கள். அவ்வித துருப்புகளும் தரைகளும் இல்லாத நிலைமையில், வடஆபிரிக்கா கிரேக்க தீவுகள் இவைகளை

ஆதார நிலையங்களாகக்கொண்டு உயர்தரமான விமானங்களைக்கொண்டு தேர்ச்சி யடைந்த பிரிடிஷ் விமானங்களை எதிர்ப்பதென்றால் ஜெர்மன் விமானிகளுக்கு பெருத்த சங்கடந்தான்.

[ஜெர்மனிக்கும் கிரீஸுக்கும் இன்னும் போர் ஏற்படவில்லை.]

(e) நடப்பிலிருந்து கவனிக்க குண்டு போடும் விமானங்களைக்காட்டிலும் யுத்த கப்பல்தான் சரக்குள்ளதென்று தெரியவருகிறது.

(f) இருமுனைகளில் யுத்தமென்றால் ஹிட்லருக்கு நடுக்கம், இருந்தாலும் தீரவில்லை.

## அந்த பால்கன் நாடுகள்.

ருமேனியாவைப்பற்றி புத்திசாலியான ஒருவர் எங்களை விசாரித்தார்; அவரைத் திருப்தி படுத்தக்கூடுமானால் எங்களுக்குத் திருப்திதான். நாங்கள் மேலாக சென்ற வாரம் இப்பத்திரிகை பதிப்பின் முதல் கட்டத்தைக் கவனிக்கச் சொன்னோம். பால்கன் நாடுகளைப்பற்றித் துணுக்குகள் அனுப்பும் 'நடுநிலைமை' நாடுகளிலிருந்து வரும் செய்திகளைக் கவனத்துடன் ஏற்றுக்கொள்ளும்படி சொன்னோம்.

சுற்றியுள்ள சகதியில் எந்த பக்கம் கட்டியென்று ஹிட்லர் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் சமயம் சமீப கீழ் நாடுகளைப்பற்றி சர்ச்சை பலமாகவிருப்பது இயல்பு; ஆகையால், இந்தச் சிக்கலான புதிர்போன்ற நிலைமையின் சாராம்சத்தை குறிப்பிடுவோம். பதில் மட்டும் இப்போதைக்குச் சொல்லவில்லை.

வட பாகத்திலுள்ள ஜெர்மன் துருப்புகளின் சங்கியைப்பற்றி காபராக் கொண்ட விதமாகப் பூதிப்பேச்சு ஏராளமாக இருக்கிறது. இவ்வித பேச்சுகளை ஜெர்மானியரே கிளப்புகிறார்கள். நமக்குத் தெரிந்த வரையில், ருமேனியாவில் லக்ஷம் பெயர்கள் வரை இருக்கிறார்கள்.

இவர்களைக்கொண்டு பயமுறுத்தலாம்; இவர்களை பல்கேரியா அல்லது துருக்கி, அல்லது ருஷியா, யாருக்காவது விரோதமாக உபயோகப்படுத்தலாம். ஆனால் அவர்களை அப்படி உபயோகப்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் இன்னும் வரவில்லை. இன்னும் ஒரு மாதம் வரை வராது.

விரிவான பூதிப்பேச்சு இன்னமொன்று, Dr. கோயபெல்ஸ் கிளப்பினார், அதாவது, பல்கேரியாபேரில் ஜெர்மன் படையெடுக்கலாம் என்று ருஷியர்கள் ஒத்துக்கொண்டுவிட்டார்கள் என்று. இது உண்மையானால் கிரீஸை தாக்கலாம் (ஜெர்மனிக்கும் கிரீஸுக்கும் இன்னும் போர் இல்லை); துருக்கியை எதிர்க்கலாம் (லவாண்ட் வழியாக எகிப்தின் பேரில் படையெடுக்க).

காபரா பண்ணும் பேர்வழிகளுக்கு இவைதான் படும் காரணங்கள்; வேறு ஒன்றுமிருப்பதாகப் புலப்படவில்லை.

மற்ளுெரு பக்கம் பார்ப்போம். பல்கேரியா கொஞ்சகாலமாக தனக்குத் தோன்றியபடி செய்வதென்று ஆரம்பித்து விட்டது. ருஷியாவை வைத்து ஜெர்மனியை அமட்டியிருக்கலாம், அல்லது துருக்கியுடன் அதற்கு ஏற்படும் ஸமாதானத்தை வைத்து பயங்காட்டி ருஷியாவைக்கொண்டு வெறித்தோடும் அந்த மாட்டை எதிர்க்கச் செய்யலாம் என்று எண்ணியிருக்கலாம். உண்மையில், பிரிடன் என்ன, பிரிடன் கப்பற்படையென்ன இவைகளின் ஆதரவுள்ள துருக்கியுடன் பல்கேரியா நட்பாயிருப்பதில் ருஷியாவிற்காவது ஜெர்மனிக்காவது விருப்பமில்லை யென்பதிலிருந்து பல்கேரியாவிற்கு பலம் போலும்.

ருஷியாவுடன் சிநேகமாயிருக்க வேணுமென்று துருக்கியர் வெகுபாடு படுகிருர்கள். இந்த ராக்ஷஸ பிராயமான இருதேசத்தாரில் எவர் துருக்கியில் செல்வாக்குடையவர் என்பதில் சந்தேகமில்லை. இதில் ருஷியாவின் பெயர் எவ்வளவு முறை வருகிறதென்று கவனித்தீர்களா? நீங்கள் கவனிக்க வேண்டியது.

பல்கேரியா பேரில் படையெடுக்க அனுமதிகொடுக்கவில்லை யென்று மாஸ்கோ ரேடியோ செய்தி.

பால்கன் நாடுகளில்—அதிலும் முக்கியமாக ருமேனியாவில் வெகு அக்கரை காட்டுகிறது.

பல்கேரியா ஜெர்மனியுடன் சேருவதைக் காட்டிலும் துருக்கியுடன் சேருவதில் அதற்கு இஷ்டம்.

துருக்கியரிடம் பிரியமாய் இருக்கிருர்கள்; பிரிடனிடம் அன்புகாட்டாத போனுலும் துருக்கியும் நாமும் வெகு நட்பாயிருக்கிருேமென்று அவர்களுக்குத் தெரியும். சரி, எங்களுக்குத் தெரிந்த விஷயமெல்லாம் உங்களுக்கும் தெரிந்து விட்டது!

## இன்னுமொரு உடன்படிக்கை!

ஜெர்மனியும் ருஷியாவும் ஒரே அக்கரை கொண்டவர்கள் என்று காட்ட வேண்டி 10-ம் தேதி ஏற்பட்ட ருஷிய—ஜெர்மானிய வியாபார உடன்படிக்கையைச் சொல்லி நமது சந்தேகங்களைக்கலைக்க "பொய் சொல்லா" டாக்டர் (கோயபெல்ஸ்) முயலலாம் ஆனுல்.........

(*a*) மோலடாவ் பெர்லினிக்குப் போனதால் ஏற்பட்ட பயனிதுதான் என்ருல், மலையைக்கெல்லி எலி பிடித்தது போலிருக்கிறது.

(*b*) வியாபாரம் நடக்கவேண்டுமானுல், பிரயாண வசதிகள் வேண்டும்; சாமான் கொண்டுபோக ருஷியாவிற்குள்ள வசதிகள் 100 வருஷ காலமாகவே ஹீனமானவை; பிரிடிஷ் விமானப்படை தங்கள் காரியத்தைப் பரிஷ்காரமாகச் செய்து வருவதால் ஜெர்மனியாலொன்றும் முடியாது.

(c) பசியால் ஒருவன் வருந்தினால், தன்னிடம் இருக்கும் சொற்ப உணவுப் பொருளை வேறு ஒருவனுக்கும் கொடுக்கமாட்டான். ஸ்தூலமாகச் சொல்லுவதனால், உபரியாகவுள்ள பொருளைத்தான் பிறருக்கு விற்கப்படும். இவ்வித உபரி சாமான்கள் என்ன? ருஷியாவிலிருந்துவரும் கோதுமையா, எண்ணெயா? அல்லது, இச்சமயம் ஜெர்மனியிலிருந்து யந்திரங்களா, ஆயுதங்களா, வெடிகுண்டுகளா? ஷராத்துக்களைப் பற்றி விவரங்கள் தெரியவில்லை. அப்படி வெளியிடாதிருப்பதும் ஒருவித தந்திரமாகவிருக்கலாம்.

# பிரிடன் பேசுகிறது.

(திரு. லெஸ்லி ஹாவோர்டு எழுதியது. பி. பி. ஸி. ஒலிபரப்பு.)

ஐரோப்பாவில் ஒரு புதிய ஏற்பாட்டுக்காக திட்டம் போடுவதாக ஹிட்லர் சொல்லிக்கொண்டிருந்ததை சென்ற இலையுதிர் காலத்தில் நாம் பிரமாதமாகக் கேள்விப்பட்டோம். அது மனதை இழுக்கக்கூடியதாகவே இருந்தது. ஏனெனில் கோயபல்ஸ் துரையவர்களுடைய நூற்றுக்கணக்கான கையாட்கள் அதை வர்ணித்தார்கள். அவர்கள் சொல்லியபடி உத்யானவனத்தில் ஒவ்வொன்றும் ரம்யமாகத்தான் இருந்தது. ஆனால் இந்தக் கொடிய பிரிடிஷாரும், கொடிய கனடா தேசத்தாரும், கொடிய ஆஸ்திரேலியர்களும், நியூஸிலாந்தர்களும், தென் ஆபிரிக்கர்களும்--கிரேக்கர்களைப் பற்றித்தான் நாவில்வைத்துப் பேசக்கூடாதே—இவர்கள் எல்லோரும் புல்தரையை வெட்டிக் கிளறி புஷ்பங்களைத் திருடிக்கொண்டு போகாமல் இருக்கவேணும்.

நாஸி பிரசுரகர்களைக் காட்டிலும், நடப்புகளை நன்றாகத்தெரிந்துகொண்டவர்களுக்கு இப்புதிய திட்டம் ஒரு தோட்டம் இல்லை, அது ஓர் கல்லறை என்று தெரியும். கல்லறை பூமியிலும் ஒரு ஒழுங்கு அவசியம் இருக்கும். ஆனால் அது நம் ஜீவதசைக்கு உரிய ஒழுங்கு அல்ல. மேலும் ஹிட்லர் தன்னுடைய புதிய ராஜ்ய பார திட்டம் என்று சொல்லிக்கொள்ளுகிறானே, அது குகைக்குள் மனிதர் வசித்த நாட்களிலேயே இருந்தது. அது பண்டைக்காலத்தியது. "பலோ ராஜா ப்ருதிவி" என்று சொல்லியிருக்கும் பழைய மொழியிலுள்ள நீதியை அப்புதிய ஏற்பாடு, அஸ்திவாரமாகக் கொண்டது. ஜெர்மன் செல்வ நிர்வாக மந்திரியால் இப்புதிய ஏற்பாட்டைப் பற்றிய பூரா வ்யாஸமும் தயவாக இரண்டு பத்திரிகைகளுக்கு அதாவது, நியூயார்க் டைம்ஸ், லைப் என்ற இரண்டு பத்திரிகைகளுக்கும் கொடுக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டதற்குப் பிறகு இந்த நாஸி நற்காலத்தைப்பற்றி நாம் வெகுவாகக்கேட்கவில்லை. அந்தக்கொள்கையும் கொஞ்சம் சுவாரஸ்யமாகத்தான் இருக்கின்றது. இது விஷயமாக நாம் கவனிக்கவேண்டிய ஒரு அம்சம் என்னவென்றால் ஜெர்மன் மனதில் மறுபடியும், மறுபடியும் ஏதாவது ஒரு ரூபத்தில் அந்தக்கொள்கை முளைத்துக் கொண்டிருக்கிறது. 200 வருஷங்களுக்குப் பிறகும்கூட ஸ்வஸ்தம் செய்யக்கூடாத "நாம் பெரியோர்" என்ற ஒரு பைத்தியத்தில் ஆழ்ந்தவர்கள் இந்த ஜெர்மன் ஜாதியார்கள் என்று இது குறிப்பிடுகிறது. சில ஆங்கில ஆசிரியர்கள் "அமெரிக்கர்தான் பெரியோர் என்ற பிராந்தி பிடித்தவர்கள்" என்று சில சமயம் எழுதியிருக்கிறார்கள். ஐக்கிய ஸமஸ்தானங்களில் உள்ள சில மனிதர்கள் பலான பெரிய வஸ்து அல்லது நீண்ட வஸ்து அல்லது உயர்வான மற்றொன்று தங்களுக்கு வேண்டுமென்று நினைத்ததில் இருந்து அவ்வாறு கூறப்படுகின்றது. அதுவிஷயத்தில் கவனித்தால், கனடா தேசத்தார்களுக்குத் தங்களுக்கு விஸ்தாரமான கோதுமை வயல்களைப்பற்றி ஒரு

இயற்கையான பெருமை இருப்பதும், ஆஸ்திரேலியர்களுக்குத் தங்கள் விசாலமான ஆட்டு மேய்ச்சல்களைப்பற்றி பெருமை பேசிக்கொள்ளுவதும், நமக்குத் தெரிந்ததே. அவர்கள் ஏன் அப்படிச் செய்யக்கூடாது? இம்மாதிரியான சிறு பெருமைகள் மனிதனுக்கு உள்ளது சாதாரணமே. ஆனால் பிரிடிஷ் வம்சத்தில் பிறந்த எந்த கனடியனும் தன்னோடு பிறரை ஒப்பிட்டுப் பார்த்து, பிரஞ்சுக்காரர் தாழ்ந்த ஜாதி என்று சொல்லுவதையாவது அல்லது அமெரிக்கர்கள் தாங்கள் உலகத்தை ஆள சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், அப்படிச் சொல்லுவது சரி என்றும் பகிரங்கப்படுத்திக்கொள்ளுவதையாவது நாம் காணவில்லை. இத்தகைய மனோபிராந்தி வேறு யாவரும் விரும்பாத ஒரு காணியாக்ஷியாக ஜெர்மானியாரே அனுபவித்து வருகிறார்கள். உலகத்தில் இருக்கும் மற்றவர்கள் எல்லாரைக்காட்டிலும் தாங்களே மேலானவர் என்று நம்புவதும், அதை வெளியிட்டு வற்புறுத்துவதும் ஜெர்மானியருடைய வேலை. மகா பிரடெரிக் என்ற ஒரு அரசன் தான் நிரபராதியான ஒரு சிற்றரசின்மீது இம்மின்னல் படையெடுப்பு என்பதைத் தயாரித்தான். ஜெர்மன் தத்வ சாஸ்திரியான "நீட்ஷே" என்பவன் ஜெர்மன் அதிமானுஷன் என்றும், அவனைப் பின் தொடர்ந்து செல்லுபவர்கள் இருக்கிறார்கள் என்றும், ஒரு கொள்கையை ஸ்தாபித்தான். அதை ஜெர்மானியர்களுக்குள் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தது, ராஸன்பர்க் என்று பெயருள்ள ஒரு தத்வ சாஸ்திரி. நாடாசைகொண்ட ஜெர்மனி ஹெய்டன் என்ற சங்கீத சாஸ்திரியின் கம்பீரமான கீதத்தில் "எல்லாவற்றிற்கும் பெரிது ஜெர்மனியே" என்ற சாகித்யத்தை இணைத்தது. மானிடவர்க்கம் முழுவதும் அடிமையில் அழுத்தப்பட்டு, அவர்களுடைய எஜமானர்களான ஜெர்மானியர்களுக்கே எல்லா நன்மையையும் அளிக்கவேண்டும் என்ற கொள்கையை நாஸிகள் உத்கோஷம் செய்யக்கேட்டு உலகம் திகைத்தது. அடிமை என்ற பதத்திற்குப் பொருள் தெரியாமலிருப்பார்களோ என்று நினைத்து, அந்தப்பதம் அலங்காரமாக உபயோகப்படுத்தப்படவில்லை என்றும், உண்மையான அர்த்தம்கொண்டதென்றும் வெகு ஜாக்கிரதையாக விவரிக்கிறார் அந்த ஜெர்மன் செல்வ நிர்வாக மந்திரியார். 'நாம் பெரியோர்' என்ற பயித்தியம் பிடித்தவர்கள் உண்மையில் ஜெர்மானியர்தான், வேறு ஒருவரும் இல்லை, என்று நீங்கள் சொல்லலாம். அதற்காக அவர்கள் மாறுகிறபாடு இல்லை. மகா பிரடெரிக் காலத்திலிருந்து ஹிட்லர் காலம்வரை நீண்டகாலம் ஆகிவிட்டது. இந்த 200 வருஷங்களுக்குள் விஞ்ஞான சாஸ்திரமானது இளமைப் பருவத்திலிருந்து பெரிய ராக்ஷஸனாக வளர்ந்துவிட்டது. அரசுகள் கிளம்பிவிழுந்தன. கலைகள் ஓங்கி மங்கின. இக்காலத்திலெல்லாம் மனிதவர்க்கமே அரசியல் பிரதேசத்தில் முன்னேறிக்கொண்டே வழியறிந்துகொண்டிருக்கிறது. அரசியல்கலையும் முக்கியமாக ஜனநாயகமும் விருத்தியாகி முன்னேறிக்கொண்டிருக்கிறது. அறிஞர்களும், சான்றோர்களும் லிங்கன் என்ற பெரியோர், என்றும் அழியா வார்த்தைகளில் விவரித்த "பொது மக்களால், பொது மக்களுடைய அரசு ஸ்தாபிக்கவேண்டும்"

ன்ற லக்ஷியத்தையே கொண்டிருக்கிறார்கள். நாம் அச்சாலையில் வெகு துலை இன்னும் செல்லவேண்டியிருக்கிறது. ஆனால் ஒன்றைத் தவிர மற்ற ராஜ்யங்கள் எல்லாம் அந்த ஒரே லக்ஷியத்தைக் குறித்துச் சென்றுகொண்டிருக்கின்றன. அவைகள் தவறுகள் இழைத்திருக்கலாம். சில சமயம் வழி தப்பியிருக்கலாம். ஒவ்வொன்றும் சற்று பின்வாங்கியிருக்கலாம். அல்லது வேறு வழி திரும்பியிருக்கலாம். ஆனால், ஜெர்மானியரோ, யாதொரு முன்னேற்றமும் அடையவில்லை. 200 வருஷங்களுக்குமுன் நின்ற இடத்திலேயே நிற்கிறார்கள். இவ்வெட்கரமான விஷயத்தை ஜெர்மானியர் ஒருவர்தான் ஒப்புக்கொள்வதோடு பெருமைப்படுத்திக்கொள்ளமுடியும்.

சரி, இதுவரை தாங்களே பட்டம் தரித்துக்கொண்ட 'யஜமான ஜாதியா''ரைப்பற்றித் தெரிந்துகொண்டீர்கள். ஒவ்வொரு ஜாதியார்களுக்கும் அவரவர்கள் பூர்த்திசெய்யவேண்டிய விதி இருக்கின்றது என்று வெகு தீவிரமாக முஸோலினியும், ஹிட்லரும் வாதாடுகிறது சரிதான் என்று நாம் ஒப்புக்கொள்ளலாம். ஆனால் அந்த விதியை அனுஷ்டிப்பதில் அடிப்படையான ஒரு தவறு இருக்கின்றது. அதாவது அவ்விதி என்னவென்பதும், அதை எப்படி அனுசரிப்பது என்பதும அவர்களுக்குத்தான் தெரியும் என்று அவர்கள் வற்புறுத்துவதே. உமக்கு ஒரு காரியம் சம்பவித்தால், நிச்சயமாக அது உங்கள் விதிப்பயனே. நீங்கள் அதைச் செய்துமுடிக்கவேண்டிய பொறுப்பு ஒன்றும் இல்லை. ஏனெனில் உண்மையில் விதிப்பயனாக இருக்கும் ஒவ்வொரு காரியமும் நடந்தே தீரும். நீங்கள் அதை மாற்ற என்ன முயன்றாலும் முடியாது. ஆனால் அது முடியும்வரை அது விதிப்பயன்தானா என்று சொல்ல முடியாது. நான் ஒன்றும் ஒரு சூக்ஷ்மதத்வத்தைச் சொல்லிவிடவில்லை. ஆனால் ஒரு மனிதன் தன் விதிப்பயன் எவ்வாறு இருக்கும் என்று முன்கூட்டியே சொல்லமுடியாது என்று எனக்குத் தோன்றுகிறது. நடந்த காரியங்களை நோக்கிப்பார்த்து, என் வாழ்க்கையில் இன்னின்னது என் விதிப்பயன் என்று சொல்லமுடியும்.

மேனாட்டு நாகரிகம் கிளம்புவதற்கு முன் பண்டைகாலத்தில் விவசாயத்தையும், ஜோதிடத்தையும், சிற்பசாஸ்திரத்தையும் வளர்க்கவேண்டிய விதிப்பயனானது எகிப்துக்கு இருந்தது. கலையையும், இலக்கியத்தையும், வேதாந்தத்தையும், கணிதத்தையும் முக்கியமாக நாம் எல்லோரும் பிரத்தியேக நன்றியுடன் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும் படியான ஜனநாயகம் என்ற அரசியல் தத்வத்தையும் சிருஷ்டித்து வளர்க்கக்கூடிய விதிப்பயனானது கிரீஸ் தேசத்திற்கு ஏற்பட்டது. ரோம் மாநகரும், அதன் முற்காலத்திய தேசங்களைப்போல அவ்வளவு பெரிதான மகிமையை அடையாவிடினும் உலகத்திற்கே வெகு உபயோகமுள்ள ஒரு விஷயத்தைத் தந்தது. ரோம் பட்டணத்தின் ஆட்சி யந்திரமும் வெகு ஒழுங்கானது. அதன் சட்டமும் பிற்காலத்திய ஆட்சிகளுக்கு ஒரு பிரமாணமாக இருந்தது. பிற்காலத்திய அரசுகளும், சிற்றரசுகளும் கூட உலகத்துக்குப் பெரும் பயன்கள் தந்திருக்கிறார்கள். பிரான்ஸ், இதாலி தேசங்கள் கலையிலும், இலக்கியத்திலும் நூற்றுக்கணக்கான வருஷங்களாக

முன்னணியில் நின்றிருக்கின்றன. மேற்கு ஐரோப்பா தேசம் முழுவதிலும் நார்வே என்ற தேசமானது தன்னுடைய ஜீவ உணர்ச்சியைப் பரப்பியிருக்கிறது. நார்வேயிலிருந்த ஜனங்கள் எல்லோரும் மேற்கு ஜெர்மனியிலும், வட பிரான்ஸிலும், ஸ்காட்லாந்திலும், இங்கிலாந்திலும் குடியேறிபுத்துயிரும், புஸ்சத்துவமும் அளித்திருக்கிறார்கள். இங்கிலாந்தின் சிம்மாஸனத்தைப் பிடித்த கூடஸ்தன் ஒரு நார்மன், அல்லது வடக்கித்தியான்; அல்லது நார்வேயில் உள்ளவன். இவ் வடக்கித்தியார்கள் ஐஸ்லாந்திலும், கிரீன்லாந்திலும் குடியேறினார்கள். கொலம்பஸ் என்பவன் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததற்கு 500 வருஷங்கள் முன்னாடியே அக்கண்டத்தைக் கண்டுபிடித்தார்கள். ஸ்பெயினும், போர்ச்சுகலும்கூட அவைகளின் பெரும் விதிப்பயனைச் செய்திருக்கின்றன. அவைகளின் பாஷைகளையும், மதப்பற்றையும் உலகத்தின் பாதியில் (தென் அமெரிக்காவில்) பரப்பியிருக்கிறார்கள்.

மானிட வர்க்கத்தின் பற்பல கிளைகளின் விதிப்பயன்களை இவ்வாறு நாம் விவரித்துக்கொண்டே இருக்கலாம். ஜெர்மனி தேசமானது சங்கீதத்திற்கும், சாஸ்திரத்திற்கும் நன்மைகளைச் செய்திருந்தபோதிலும் ஸம்ஹாரமே அதன் தொழிலாக இருந்திருக்கிறது.

நம் நாளில் விதிப்பயன் என்னவென்று நாம் சொல்லிக்கொள்ளலாம். நாகரீகத்தின் பயனே இப்பொழுது மறுதளிக்கப்பட்டு, திராசில் அளக்கப்படும் இந்நாளில் நாம் கணக்கு எடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. நாம் என்ன செய்திருக்கிறோம் என்று நாமே கேட்டுக்கொள்ளவேண்டிய சரியான தருணம் இதுதான். உலக சரித்திரத்தில் நம்முடைய பதிவு என்று நாம் காட்டக்கூடியது என்ன? நாம் பிறந்ததற்கும், இருந்ததற்கும், வளர்ந்ததற்கும், இறந்ததற்கும் என்ன பயன்? இக்கேள்வியானது, ஆங்கிலம்பேசும் எல்லா ஜாதியாருக்கும் உரியதே. அதாவது, ஐக்கிய ஸமஸ்தானங்களுக்கும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்திற்கும் உரியதே. அவர்கள் ஒரே வம்சத்தில் பிறந்தவர்கள் ஆயினும் பல ஜாதியார்களின் சேர்க்கையே. ஆங்கில ஸாக்ஸர்கள், நார்ஸ், கெல்டிக், ஐபீரியர் இன்னும் பலரும் சேர்ந்தே நாம் பிரிடிஷார்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறோம். பிரிடிஷ் தீவுகளில் இன்றுகூட ஆங்கிலத்தைத் தவிர மூன்று பாஷைகள் பேசப்படுகின்றன. இன்னும் அதைக் காட்டிலும் அதிகமானதாக, கதம்பத்திலும், கதம்பம் இங்கிலாந்தில் இருக்கின்றது. ஏனெனில் ஆங்கிலருக்கு ஸ்காட்ஸ்காரர், வேல்ஸ்காரர் போன்ற ஒரே பூர்வீகம் கிடையாது. ஆயினும் இந்த பல ஜாதிகள் கலந்த ஒரு கூட்டத்திலிருந்து பலவகையான குணங்கள் வளர்ந்திருக்கின்றன. அவர்கள் ஜெர்மானியரைப்போல் உழைப்பாளிகள். நார்ஸ்காரரைப்போல் வெகு தூரம் செல்பவர்கள். பிரஞ்சுக்காரரைப் போல் ஜன்ம பூமி வாத்ஸல்யம் உள்ளவர்கள். யூதஜாதியாரைப்போலவும், ஸ்லாப் ஜாதியார்களைப்போலவும், வெகு பிடிவாதமாக எவ்வித கஷ்டங்களையும் பொறுக்க வல்லவர்கள். பல வழிகளில் நாம் ஒரு விசித்திரமான ஜாதியார். பரஸ்பர விரோதமான இயற்கை உள்ளவர்கள். இயற்கையில் போரை விரும்புகிறவர்கள் அல்ல. ஆயி

றும் யுத்தத்தில் இறங்கினால் வெகு ஆச்சரியகரமான திறன் உள்ளவர்கள். ஸ்வபாவத்தில் கலை ஞானம் உள்ளவர்களல்ல. ஆயினும் தாய் பாஷையில் கணக்கில்லா பக்கங்கள் நிறைந்த உத்தம இலக்கியத்தை சிருஷ்டித்தவர்கள். லௌகீக வழியில் பொதுவாக ஜயத்தை அடைந்தவர்கள். தம் உணர்ச்சிகளை வெளிப்படுத்த விரும்பாதவர்கள். ஆயினும், உணர்ச்சி ததும்பும் இயற்கை உள்ளவர்கள். வெகு பக்தி உள்ளவர்களல்ல. ஆயினும் அடிப்படையான மதப்பற்றுள்ளவர்கள், நாம் எப்பொழுதும் நம் மனதை மாற்றிக்கொண்டேயிருக்கிறோம். ஒரு வித ஸ்வரூபமும் இல்லாத நம் ஸ்வபாவத்திற்கு ஒட்டிய விதத்தில் நாம் நடந்துகொண்டிருக்க பிற ஜாதியார் நம்மை அறிய முடியாததும், அதனால் நம்மை பைத்தியக்காரரென்றும், துரோக சித்தரென்றும் கூப்பிடுவது ஆச்சரியமல்ல. இத்தகைய அரிய குணங்களையும் விசித்திர பேதங்களையும் வைத்துக்கொண்டு நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம். அல்லது என்னுடைய ஆதிக்கேள்வியை திருப்பிக்கேட்கலாம் என்றால், நம் விதிப் பயன் என்ன? இந்த கேள்விக்குப் பல விதமாக விடையளிக்கலாம். நண்பர்களும் பகைவர்களும் பரஸ்பர விரோதமாய் பதிலளிப்பார்கள். நாம் ஐந்து கண்டங்களில் நம் ஜனங்களை குடியேற்றி பரப்பியிருக்கிறோம். வெள்ளை மனிதனும், கருப்பு மனிதனும் சமாதானமாக ஒருவர் பக்கம் ஒருவர் இருந்து வாழலாம் என்று காண்பித்திருக்கிறோம்.

முக்கியமாக, நம் ஜாதியார் பிறஜாதியார்களை ஆகர்ஷிப்பதோடு அவர்களோடு சேர்ந்துவிடலாம் என்பதையும் அப்படி பிற ரத்தத்தோடு கலப்பதால் இன்னும் பலமாக தழைத்து ஓங்கலாம் என்பதையும் காண்பித்து இருக்கிறோம். உலகத்தின் ஒவ்வொரு மூலைமுடுக்குக்கும் ஆங்கிலபாஷையை கொண்டு போயிருக்கிறோம். ஆங்காங்கு அந்த பாஷையானது பற்பல சம்பவங்களுக்கு உட்பட்டு புதிய வார்த்தைகளை பிறபாஷைகளிலிருந்து சேர்த்துக்கொண்டும், பிறபாஷைகளுக்கு ஈடுபட்டுக்கொண்டும் இருக்கிறது.

ஆங்கிலமானது உலகத்திலுள்ள எல்லா ஜாதியார்களுக்கும் பொது பாஷையாக ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள ஒரே வழியாகவும் இருக்கிறது என்று வில்லியம் ஹோல்ட் என்பவர் அன்று ஒலிபரப்பும் பொழுது சொன்னார்.

நாம் ஆங்கில பாஷையோடு கூட வேறு விஷயமும் உலகத்துக்கு அளித்திருக்கிறோம் புராதன நாகரீகங்களிலிருந்து நாம் அடைந்திருக்கிற விஷயத்தையும் கொடுத்திருக்கிறோம். நிகுதியும், நிச்சயமுமான சட்டம் என்ற ரோம திட்டத்தை கொடுத்திருக்கிறோம். ஞாயமும், நீதிவழுவாதவுமான ராஜ்யபாரத்தை அளித்திருக்கிறோம். கிரேக்க கொள்கையான ஜனநாயகத்தை வளர்த்து இருக்கிறோம். அடிமைத்தனத்தை காட்டிலும் உயர்வான அடிப்படையின்மீது ஜனநாயகத்தை திருத்தி அமைத்திருக்கிறோம், ஜனங்கள் தத்தம் வழிகளில் வெளியிட்டு சொல்வது என்றும், அதிகாரவர்க்க கட்டளைப்படி சொல்லவேண்டியதில்லை என்றும் கிரேக்கர் கொண்ட வழக்கத்தை நாம் அனுஷ்டித்து இருக்கிறோம். குடும்பமே பெரிதென்ற பிரஞ்சு

கொள்கையை நாம் எடுத்துக்கொண்டு பிரிடனுடைய தேசிய வாழ்க்கைக்கு வீடும், அடுப்பங்கரையும் மர்மஸ் தானங்களாக ஏற்படுத்தியிருக்கிறோம். தைரியத்தையும் ஊக்கத்தையும் கௌரவிக்கிறோம். பண்டை நார்ஸ் ஜாதியாரைப்போல விசுவாஸத்தைப் போற்றுகிறோம், யூதமதத்திலிருந்து பிறந்த கிரிஸ்தவமதத்தை பரப்பியிருக்கிறோம். அதன் பயனாக நம்குடியேற்ற தலைவர்கள் சென்ற இடங்களில் எல்லாம் உதாரணமாக ஆபிரிக்காவில் லிவிங்ஸ்டன், நியூஸிலாந்தில் வில்லியம்ஸ் போன்ற பெரியோர்கள் புகழப்படுகிறார்கள்.

எல்லா ஜனங்களிடம் போல் நம்மிடமும் சில குறைகள் இருக்கின்றன. சில குற்றங்கள் செய்திருக்கிறோம். எந்த தேசங்களிலும் இம்மாதிரி விஷயங்களில்லாமலில்லை "நம் வீடு ஒழுங்காகஇருக்கிறது, நம் வேலையைச்செய்து முடித்துவிட்டோம், நம் ஏற்பாடுகள் பழுதின்றி இருக்கின்றன" என்று நாம் சொல்லிக்கொள்ளக்கூடிய காலம் வரவில்லை, வரக்கூடிய ஸம்பாவிதமுமில்லை. நம் சத்துருக்களில் வெகு மூர்க்கமும் பலிஷ்டருமானவர்களை நாம் எதிர்க்கும் இச்சமயத்தில்கூட ஒன்று சொல்லிக்கொள்ளக்கூடும். அதாவது நம் வம்சத்துக்குத் தகுதியான கட்டடத்தை கட்டியிருக்கிறோம். நாம் செய்திருக்கும் கார்யத்தைக்கண்டு நாம் வெட்கப்படவேண்டியதில்லை. உலக நாகரீகத்திற்கு நாம் ஒன்று புதிதாக அளித்திருக்கிறோம். அது நம்முடையதே. அதன் பொருளை ஜெர்மானியர் அறியவில்லை. அதற்குப்பெயர் 'க்ஷமை.' ஆங்கிலம் பேசும் ஜாதியார்கள் தாம் தம் அரசை ஸ்தாபித்த இடங்களிலெல்லாம் அந்நாகரீக புஷ்பத்தை நட்டிருக்கிறார்கள். இவ்வித உருவமுள்ள ஸ்வதந்திரத்திற்குத் தான் கிரேக்கர்கள் மாரதானில் போராடினார்கள் புரூஸ் என்பவரும் அவருடைய ஸ்காட்ச் வீரர்களும் பானக்பர்ன் என்ற போர்க்களத்தில் யுத்தம் புரிந்தார்கள். ஆங்கிலரும் எலிஸபெத்து ராணியும் ஆங்கில கால்வாயிலும் பிரஞ்சுக்காரர் வெர்டனிலும், சரடோகாவில் அமெரிக்க குடியேறிகளும் போர்புரிந்தார்கள்—அதாவது ஸர்வேசுவரனைத் தொழுவதில் ஸ்வதந்திரமும், பேசுவதிலும் எழுதுவதிலும் ஸ்வதந்திரமும், ராஜ்ய ஸபைகளில் வாதம்செய்யும் எதிர்க்கக்ஷியின் அவசியமும், அரசியலில் சிறுபாலாரும், ஜாதியில் சிறுபாலாரும் ஸமாதானமாக வாழ்வதும், ஜாதி, மதம், நிறம் ஒன்றும் ஒரு மனிதனுடைய பிரஜா உரிமைகளுக்கு இடையூறன்றி இருப்பதும்—இவைகளை ஏற்படுத்தியிருக்கிறோம். இவைகள் எல்லாம் நல்லதென்றும், தகுதியென்றும், நியாயமென்றும் நினைக்கிறோம். நாம் ஸ்வதந்திரமுள்ள தேசமாக இருக்கும் வரை ஆங்கிலம் பேசும் நாம் அவைகளில் நம்பிக்கையை விடமாட்டோம். அந்நம்பிக்கையை உலகத்திற்கு கற்பிப்பதே நம்முடைய விதிப்பயன்.

# மத்திய கிழக்கில் ஆர். ஏ. எப்.பின் வேலை.

(விங் கமாண்டர் எல். வி. பிரேஸர் கட்டுரை.)

லிபியாவில் கிரேஸியானியின் துருப்புகளில் சிலாக்கியமானவற்றை வலைப் படுத்தி நூற்றுக்கணக்கான மைல்கள் இதாலியர்களைப் புறங்காட்டி ஓடச்செய்த ஜாக்கிரதையாக முன்வகுக்கப்பட்ட பிரிடிஷ் திட்டங்களும், பிரிடிஷ் துருப்பு களின் வெற்றிக்கு வழியில் நின்ற எதிர்ப்பை தவிடுபொடியாக்கிய ஆர். ஏ. எப்.பின் (பிரிடிஷ் ராஜீய விமானப்படை) பெரும் முயற்சியும், இப்பொழுதுதான் வெளியாகின்றன.

இதாலியை, பிரிடிஷார் தந்திரமாக எகிப்தில் புகும்படி வேணுமென்று வழி விட்டார்கள். இது இப்பொழுதுதான் தெரிகிறது. தான் பிடித்த இடங்களை இதாலி சிரமப்பட்டு 2-மாதங்களாக பந்தோபஸ்து செய்தது. பிரம்மாண்டமான வட்டாரப் பாசறைகள் இதாலியால் வகுக்கப்பட்டன; பெரிய பீரங்கிகளை நிறுத்த சிமெண்ட் அஸ்திவாரங்கள் போடப்பட்டன; கப்பிபோட்டு திம்ஸுசெய்த ஒரு முதல்தரமான ரோடு 50-மைல் போடப்பட்டது; நீர்வசதிகள் அமைக்கப் பட்டன. இக்காபந்துகளை ஆர். ஏ. எப். ஆறு நாட்கள் ஓயாமல் குறிதப்பாமல் குண்டு வீசி ஒரேயடியாக ஒதுக்கியது; துருப்புகளின் பின் தாக்குதலை சாத்திய மாக்கியது. ஒரு வாரத்தில் 300-தடவைகள் ஆர். ஏ. எப். பறந்து சத்துருவை தாக்கியது; இதில் சேதம் 4-விமானங்கள்தான். எதிரிகள் சேரவொட்டாமல் செய்து சிதரடிக்கப்பட்டார்கள். இதற்கு எதிரிடையாக இதாலியின் ராஜாங்க விமானப்படை (ரீஜியா ஏரோநாடிகா) பிரிடிஷ் விமானப்படைத் தாக்குதலை விலக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் வீணாயின.

டிஸம்பர் 9-முதல் 16-வுக்குள் எதிரிப்படைகள் மீது ஆர். ஏ. எப். 56 தடவை குண்டுவீசி, யந்திர பீரங்கிகளால் சுட்டது; எதிரி விமான நிலையங்கள், பாசறைகள், எண்ணெய்க்கிடங்குகள் மீது கணக்கில்லாமல் பாம்களைப்போட்டது. சோபாபி என்ற இடத்தில்மட்டில் 1500 மோட்டார் லாரிகள் நொறுங்கி இரும்புத் துண்டுகளாயின. இதாலி யுத்தத்தில் இறங்கிய ஜூன் 11 முதல் லிபியாவை ஆர். ஏ. எப். 614-தடவை தாக்கியது. யுத்தம் ஆரம்பிக்கும்பொழுது மத்திய கிழக்கில் ஆர். ஏ. எப்.பின் எண்ணிக்கை மிகவும் குறைவாயிருந்ததைக் கருத இவ்வெண்ணிக்கைகள் பிரமாதமல்லவா?

இதாலி யுத்தத்தில் இறங்கிய முதல்வாரம் ஆர். ஏ. எப். தாக்கியதின் கணக்கு 57. இத்தாக்குதலின் உச்சம் 2—1—41-ல்; அன்று 44 பிரிடிஷ் பாம்பர்கள் அலைஅலையாகச்சென்று இம் முனையில் 50 டன் பாம்கள் போட்டன.

மேற்கு பாலைவனச்சண்டையில் கண்மூடித்தனமாக ஒன்றுமே நடைபெற வில்லை. அதிர்ஷ்டத்துக்கு விட்டுப்பார்ப்போம் என்று ஒன்றுமே செய்யப்பட வில்லை. ஆர். ஏ. எப்.பின் பலம் மிகவும் ஜாக்கிரதையாக பரிபாலிக்கப்பட்டு வந்திருக்கிறது. பிரான்ஸில் ஜெர்மன் படைகள் தாக்க ஆரம்பிக்குமுன்

ஜெர்மனிக்கு நாள் ஒன்றுக்கு 50 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. ஏராளமான ஜெர்மன் விமான ஓட்டிகள் செத்தனர். லிபியா பாலைவனத்திலோ ஆர். ஏ. எப். தன் பலத்தைமட்டில் காட்டாமல், தன் மூளையையும் உபயோகித்திருக்கிறது. அதற்கு ரொம்ப சேதம் ஏற்பட்ட வாரத்தின் நஷ்டம் 15 விமானங்களே; இதாலியர்களுக்கு 97. எதிரியைவிட ஆகாயத்தொழில் ஒவ்வொன்றிலும் தாங்கள் தேர்ந்தவர்கள் என்பதை ஆர். ஏ. எப். நிரூபித்துவிட்டது. 9—12—40 முதல் 13—12—40-க்குள் ஒன்றோடொன்று தனித்துச்செய்யும் 'நாய்ச்சண்டை'களில் 35 இதாலிய சண்டை விமானங்கள் அழிந்தன. இவைகளில் 6 ஆர். ஏ. எப். விமானங்கள்தான் அழிந்தன; அதன் ஓட்டிகளில் 3-பேர் தப்பினர்.

இது நிற்க, மத்தியகிழக்கின் இதர பிரதேசங்களில் ஆர். ஏ. எப்.பின் முயற்சிகள் பயனளித்திருக்கின்றன. ஸூடானிலிருக்கும் ஆர். ஏ. எப்.பால் இதாலிய கிழக்கு ஆபிரிக்கா 481-தடவையும், ஏடனிலிருக்கும் விமானங்களால் 366 தடவையும், கெனியாவிலிருக்கும் விமானங்களால் 215 தடவையும் தாக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரதேசங்களில் தென் ஆபிரிக்கா, ரொடீஷியா விமானங்களும் நன்றாக ஒத்தாசைபுரிந்திருக்கின்றன.

கிரீஸிலிருந்து பிரிடிஷ் விமானங்கள் அல்பேனியாவில் இதாலிய கொத்தளங்களை 93 தடவையும், மால்டாவிலிருக்கும் விமானங்கள் அல்பேனியா, இதாலி, லிபியாவை 44-தடவையும் தாக்கியிருக்கின்றன.

இதுவரை சொன்னதில் கடற்படை விமானங்கள் புரிந்த பெருத்தவேலைகள் கணக்கிடப்படவில்லை. யுத்த நிபுணர்கள் நூற்றுக்கணக்கான தடவை வேவு பார்க்கப் பறந்திருக்கிறார்கள். அவைகளையும் இக்கணக்கில் சேர்க்கவில்லை.

மத்திய கிழக்கில் பிரிடிஷ் விமானிகளின் வேலை நெட்டிவாங்கக்கூடியது. மலேரியா, புயல்கள், அதிஉஷ்ணம், அதிசீதம்—இவைகளுக்கிடையே பாலைவனத்தில் பறத்தல்—என்றைக்கும் உள்ள பிரச்னைகள். இவற்றையெல்லாம் சமாளிக்க பிரிடிஷ் விமானி இரும்பு போன்ற உறுதிகொண்டிருக்கிறான். நொறுங்கிய இதாலிய விமானப்படையின் ஒத்தாசைக்கு ஜெர்மானியர் வருவதாயிருந்தால், உஷ்ணப்பிரதேசங்களில் பறப்பதின் கஷ்டங்களைப்பற்றி ஜெர்மானியர் ரொம்பத் தெரிந்துகொள்ளவேண்டும். ஆர். ஏ. எப்., பாலைவனங்களில் சண்டை போடுவதில் ரொம்ப அனுபவம் பெற்றிருக்கிறது; அது ரொம்பப்பயன் அளித்திருக்கிறது. மேற்கு ஐரோப்பாவில் பறப்பதற்கும் இதற்கும் ஒன்றும் சம்பந்தம் இல்லை. இதற்கென பிரத்யேகமாக பிரிடிஷ் ஓட்டிகளும் தரையில் ரிபேர் செய்கிறவர்களும் தயாரிக்கப்பட்டு வருகிறார்கள்.

லிபியா யுத்தம் நல்ல பொட்டல் பாலைவனத்தில். காற்று மணிக்கு 10 மைலுக்குமேல் அடித்தால் புழுதியைக் கிளப்பிவிடும். புழுதி உயரக் கிளம்பும் பொழுது ஏகப்பட்ட சொக்கப்பானைகளை ஏத்துவதைப்போல் தோற்றும். புழுதி உயர 10,000 அடி வரை சில சமயம் படிந்து ஒன்றையும் பார்க்கவிடாமல் மூடும்.

தரையில் குறிகளும், இறங்கும் இடங்களும் புழுதியில் மறைந்தால் கிளம்பிய இடத்துக்குத்திரும்ப, விமானமோட்டிக்குத்தனி சாமார்த்தியம் வேண்டும். புழுதி எண்ணெயில் படிந்தால் மோட்டார் வால்வு இரும்பைத்தேய்க்க உபயோகப் படுத்தப்படும் பிசினைப்போலாகும். பேரிங்குகளுக்குள்ளும், ஸிலிண்டர்களுக் குள்ளும் அது புகுந்து, என்ஜின்களை அடிக்கடி தேய்ந்து கொடகொடக்கச் செய்கிறது. இதனால் ரிபேர் செய்கிறவர்களின் வேலை அதிகமாகிறது. பதில் சாமான்கள் அடிக்கடி மாத்தவேண்டியிருக்கிறது. இவைகளுக்கெல்லாம் ஆர். ஏ. எப். முன்னும் தயாராய் இருந்தது; இப்பவும் இருக்கிறது.

---

## எதிரியை அறிதல்.
## நாஸி மனம் எவ்வாறு வேலை செய்கிறது.
## சக்தியை வளர்த்துக்கொள்ள அக்கரை.
## ஒரு பழைய தத்துவத்துக்கு ஒரு புதியவழி.

திரு. டபிள்யூ. ஏ. ஸின்க்ளேர் எழுதியது.

[பண்டித ஸின்க்ளேர் அவர்கள் எடின்பரோ கல்லூரியில் தத்துவ சாஸ்திர பண்டிதர். நாஸி மனித னுடைய நடத்தையைத் தூண்டும் உள்ளாந்தரங்களையும், அவனுடைய குணங்கள் கொள்கை கள் எவையென்பதையும் வர்ணிக்கிறார்].

ஐரோப்பாவில் ஒரு புதிய நாகரீகத்தை சிருஷ்டிப்பதாக நாஸிகள் சொல்லு கிறார்கள். இது பெரும் பொய். ஆனால் 'நாகரீக' த்தைப்பற்றி அவர்களுக்கு என்ன அபிப்பிராயம் இருக்கிறதென்று அது காட்டுகிறது. வாழ்க்கையின் நோக்கம் அவர்களுக்கும் உண்டு—உயிர் வாழ்வதின் பயன்தான் என்னவென்பதைப்பற்றிய எண்ணங்கள் அவர்களுக்கு உண்டு. ஆனால் நம்மைப்போல் பழைய நாகரீகத்தில் பழகினவர்களுடைய அபிப்பிராயத்துக்கு மாறுபாடாகவே அவைகள் இருக் கின்றன.

ஆனால் நாஸிகள் செய்யும் ஒவ்வொருகாரியமும் அவர்கள் நன்றாகத் தெரிந்து தீர்மானித்து இருக்கும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டதல்ல. நாஸி களில் பெரும்பாலார் ஜனங்களையும் சொத்துக்களையும் நாசம் செய்வதில் சந் தோஷம் கொள்ளும் ரகத்தைச்சேர்ந்தவர்கள். அவர்கள் இஷ்டப்படி அவர் கள் நடப்பதில் அவர்களுக்கு பரமஸந்தோஷம். ஆயினும் அவர்களுக்குள்ளும் ஏதோ ஒருவிதமான கொள்கையை அடிப்படையாகக்கொண்டு காரியங்கள் செய் பவர்கள் இருக்கிறார்கள்.

முதல் எடுப்பில் நம்மைப்போல் இருப்பவர்கள் அவர்களுடைய நோக்கத்தை அறிந்துகொள்வது வெகு சிரமசாத்தியமானது. நிச்சயமாக நான் அவர்களை அறிவது எனக்குச் சிரமமாகயிருந்தது. அப்படித்தான் உங்களுக்கு மிருக்குமென்று எதிர்பார்க்கிறேன். கடைசியில் நான் அவர்களுடைய நோக்கத்தைப்பற்றி என்ன நினைக்கவேண்டிற்று என்று இப்பொழுது சொல்லுகிறேன்.

வாழ்க்கையில் உயரியது எது என்பதைப்பற்றி நாஸிகள் நினைப்பதற்கும் நாம் நினைப்பதற்கும் வெகுதூரமாக யிருப்பதால் நாம் அவர்களுடைய நோக்கத்தை அறிய முடியவில்லையென்று நினைக்கிறேன். அதை அறிய சற்று மானஸிக பிரதேசங்களில் சஞ்சரிக்க வேண்டியிருக்கிறது. இம்மாதிரியான விஷயங்களில் இருக்கும் அபிப்பிராயங்கள் யாவருமறிந்தவையாதலால் அவைகளைப் பேசக்கூடத்தேவையில்லை. உதாரணமாக பிறருக்கு பக்ஷமும் மரியாதையும் காண்பிப்பது நல்ல காரியங்கள் என்று இந்த தேசத்து மகாஜனங்கள் நினைக்கிறார்கள். நாம் இருக்கவேண்டிய அளவுக்கு மட்டும் மரியாதையாக இல்லையென்று நம் மதபோதகர்கள் உபந்நியாசம் செய்கிறார்கள். நாம் மட்டும் மரியாதையாகயிருக்கவேண்டியதுதானா வென்ற விஷயமாக ஜனங்கள் விவகாரம் செய்கிறதில்லை. அந்த விஷயத்தை நம் ஜனங்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

நாம் விவரிக்க வேண்டியதில்லை. நாம் நினைக்கிறோமே அம்மாதிரியான மேற்கண்ட உதாரணத்தைப் போன்ற விஷயங்களைப் பற்றி நாஸிகள் வேறு விதமான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மரியாதையும், பக்ஷமுமுள்ளவர்களில்லை என்பதில்லை. அவர்கள் அவ்வாறு இருக்க விரும்பவில்லை. நீங்கள் அன்பும் ஆதரவுமுள்ளவர்களாக இருந்தால் நீங்கள் மூன்றாம் ரசத்தில் சேர்ந்த மனிதர்களாக நிரூபித்துக் கொள்ளுகிறீர்கள் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

அவர்கள் எவ்வாறு இருக்க நினைக்கிறார்கள் என்றால்: முதல்தரமான உயரியோராக இருக்கவேண்டும். அவனைக் காட்டிலும் இளைத்தவனிடம் தன் உயர்வைக் காட்டிக்கொள்ளக்கூடியவாறு இறுமாப்புடன் நடந்துகொள்ள வேண்டும். பிறரையெல்லாம் ஆக்ஞாபிக்க வேண்டும். அவன் இஷ்டப்பட்டால் பிறரை அடித்துக் கீழே தள்ளவேண்டும். ஸர்வ நாகரீகங்களுக்கும் ஸமரஸமான பொது நீதிகளையும், சாதாரண மரியாதையையும் புறக்கணித்துத்தள்ளி, யாதொரு கட்டுப்பாடுமின்றி தன்னிச்சையாக மூர்க்கத்தனமாக நடப்பதே நாஸியின் கொள்கையாகயிருக்கிறது. அக்கொள்கை மேற்கண்ட நடத்தைகளுக்கு அடிப்படையாக இருக்கிறது. நாஸிகளின் கொள்கையின் பிரகாரம், எவ்வாறு தேகப்பயிற்சியால் ஒரு மனிதனுடைய தேகம் செம்மைப்படுகிறதோ அதுபோல் பிறரை நம் வசப்படுத்துவதால் உண்டாகும் உத்ஸாகத்தை அனுபவித்தால் அம்மனிதனுடைய உண்மை ஸ்வரூபமும் பண்படுத்தப்படுகிறது.

இப்போதுக் கொள்கை வாழ்க்கையின் பல துறைகளில் பல வழிகளில் வெளிப்படுத்தப்படுகிறது. அவைகளைக் கவனித்தால் வெகு ஸ்வாரஸ்யமாகயிருக்கும். ஆனால், இப்பொழுது அது அவசியமல்ல. ஏனெனில், பிறர்மேல் பலத்தையும் சக்தியையும் பிரயோகிப்பதே வாழ்க்கையின் பரமலாபம் என்று அவர்களுடைய நடத்தையிலிருந்து நாம் தெளிவாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம். அரசியல் கொள்கையிலும் இதுதான் நாஸியின் அடிப்படையான கொள்கை.

# நாஸிகளுக்குப் பணம் என்றால் ஆயுத பரிக்கிரஹம்.

நிர்மாண சாஸ்திரம் படிக்க மூன்று வருஷங்களுக்கு முன் இங்கிலாந்துக்கு வந்த ஒரு நாஸி இளைஞனைப்பற்றி எனக்கு ஞாபகம் வருகிறது. இங்கிலாந்துக்கு வழக்கமாக வந்துகொண்டிருந்த இளைஞர்களைப் போலவே அவன் இருக்கவில்லை. ராஜீய விஷயமாக அவன் பேசுவதில்லை. அவன் என்னுடைய நண்பர் வீட்டில் தங்கியிருந்த ஸமயத்தில் ஒரு நாள் அந்த வீட்டு எஜமானி ஜெர்மனியில் நீங்கள் ஏன் சைனியத்திலும் விமானப்படையிலும் இவ்வளவு பணம் செலவிடுகிறீர்கள். உங்களை ஒருவரும் தாக்கப்போகிறதில்லை. நாங்கள் தாக்கப்போவதில்லை. போலந்தாவது, பிரான்ஸாவது தாக்காது. ஏன் இவ்வளவு பணத்தை ஆயுதங்கள் செய்யச் செலவிடுகிறீர்கள் என்று கேட்டாள்.

அதற்கு நாஸி இளைஞன் பதிலளித்தான்: "ஸரி, வேறு எதற்காகத்தான் பணத்தைச்செலவிடுவது" இந்த பதிலும் மூன்று வருஷங்களுக்கு முன், உலகத்தில் ஸமாதானம் நிலவினபோது அளிக்கப்பட்டதென்பதை நேயர்கள் ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டும்.

அந்த வீட்டு எஜமானிக்கு அதற்கு அர்த்தம் புரியவில்லை. அவ்வாறே அவனிடம் சொல்லி விவரமாகச்சொல்லும்படி கேட்டாள். அவன் விவரம் சொன்னான். அதன் ஸாராம்சம் என்னவென்றால், உலகத்தில் சக்தியே பெரிது என்பது.

ஆனால், ஒன்று கவனிக்க வேண்டும். பலத்தைப் பிரயோகம் செய்தால் ஐசுவரியமும் சுகமும் உண்டாகுமென்ற காரணத்தால் அது நலம் என்று நாஸிகள் நினைக்கவில்லை. அப்படி நாம் அவர்களைப்பற்றி நினைத்தால், தங்களைப் பிசகாக நினைத்து விட்டதாக அவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் லக்ஷியமாகக் கொண்டிருக்கிறது. பலப் பிரயோகத்தால் மனதிற்கு ஏற்படும் ஸுகானுபவமே, பலத்தால் ஏற்படும் வேறு லாபமாவதுடன் தேகஸௌக்கியமாவது அல்ல. உண்மையில் அவர்கள் தேக ஸுகத்தையும், ஸந்தோஷத்தையும், அல்லது வீடு வாசல் முதலியதால் உண்டாகும் ஸுகங்களையும்அவர்கள் விரும்பவில்லை. அவைகளில்லாமலிருக்க இஷ்டப்படுவார்கள். அவைகளில்லாமலிருப்பதை ஒரு தியாகமாகக்கூட நினைக்கமாட்டார்கள். அதற்கு மேலும் தியாகம் செய்ய நினைப்பார்கள். எப்படி பள்ளிக்கூடம் செல்லும் பையனை மற்றொரு பையன் துன்புறுத்துவதில், கேவலம் துன்புறுத்துவதிலுள்ள ஸந்தோஷத்தைத்தவிர வேறு அடைய வில்லையோ அதுபோல, அதற்குப்பிறகு அவன் மனது யதேச்சையாகத் திரிகிறது. அப்பொழுதுதான் அவனுக்கு உயிர் வந்ததுபோல் தோன்றுகிறது.

நாஸி கொள்கை கொண்ட எல்லா ஜெர்மானியருடைய நோக்கமும் இதுவே. அதனால் ஸேனாதிபதி கோயரிங் "நாஸி ஜெர்மனியிலுள்ள யாவரும் வெண்ணெயைத்தள்ளி துப்பாக்கியை விரும்புகிறார்கள்" என்று சொன்னபோது ஜெர்மானியரின் உண்மைக் கொள்கையை வெளியிட்டான். மற்ற ராஜ்யங்களின் பேரில் ஜெர்மனி ஆதிக்கமடைந்து ஆனந்தமடைய முயலுவதில் அவர்களுடைய காலத்

தையும் செல்வத்தையும் செலவிடுவதில் அவர்களுக்கு உண்மையான அவா கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வியாபித்திருக்கிற எல்லா தேசங்களிலும் இந்த உணர்ச்சியை அனுபவிக்கிறார்கள்.

அந்தக் காரணத்தால் ஜெர்மனி பராராஷ்ட்ரங்களோடு கொண்டிருக்கும் ஸம்பந்தங்களில் தனக்கு மற்ற எல்லா ராஷ்ட்ரங்களுக்கும் சண்டை போலவும், அல்லது இனிமேல் சண்டைக்கு வரக்கூடியவர்களென்றும் கருதுகிறார்கள். ஆனால் இச்சண்டை சில சமயம் பகிரங்க யுத்தமாகவும் சில சமயம் வியாபாரம், சூழ்ச்சி இவைகளாகவும் இருப்பது, ஜெர்மானியருக்கு ஒரு ஸாதனபேதமே ஒழிய வேறல்ல. உலகம் முழுவதும் அவர்களுடையதாக ஆகும்வரை இந்தச் சண்டை ஏதாவது ஒரு உருவத்தில் நடந்துகொண்டிருக்கவேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்கள். அதனால்தான் அவர்கள் "இன்று ஜெர்மனி நாஸிகளுடையது, நாளை உலகம் முழுவதும் அவர்களுடையதே" என்று பாடுகிறார்கள்.

அதனால்தான் ஹிட்லர் "அமைதி வேண்டும்" என்று எப்போதும் சொல்லுகிறான் "ஸமாதானம்" என்ற பதத்துக்கு அவன் நினைக்கிறபடி "நாஸியாதீனத்தின்கீழ் ஸமாதானம்" என்று பொருள்.

## தவித்த முயலடிப்பவர்கள்.

இந்த க்ஷணத்தில் உண்மையில் ஏராளமான ஜெர்மானியருக்கும் இதே கொள்கையிருக்கிறது. நாம் நினைத்துக் கொண்டிருப்பதற்கு முற்றிலும் மாறுபாடாகயிருப்பதால் நாம் அதை அறியக் கூடவில்லை. அதுபோலவே நாஸிகளும் நம்மை அறிந்து கொள்ளுவது சிரமமாகயிருக்கிறது. உதாரணமாக, வீண் கர்வங்கொண்டு பிறரை அலக்ஷியமாகப் பேசுகிறவனை நாம் மதிக்கிறதில்லை. "கீழே விழுந்தவனை உதைக்கக் கூடாது" என்று நாம் நினைக்கிறோம். இது நாஸிகளுக்குப் புரியவேயில்லை. "கீழே விழுந்த சத்துருவை உதைக்கக் கூடாதென்றால் பின்னர் எதற்காகத்தான் அவனை கீழே தள்ளினேன்" என்று கேட்கிறான் நாஸி. நம்முடைய அபிப்பிராயங்களைக் கேட்டு நம்மிடம் அவர்களுக்கு ஒரு மதிப்புக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மானியர்கள் நம்மை மக்குகள் என்று நினைக்கிறார்கள். அவ்வாறேதான் வழக்கமாய்க் குற்றத் தொழில் செய்பவர்கள் ஸாதுவானவர்களைப் பற்றி நினைக்கிறார்கள். அதனால் அந்த ஸாதுக்களிடமிருந்து சொத்துக்களைப் பறிக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

நாஸிகள் செய்யும் எல்லா காரியங்களிலும் இந்த விஷயமெல்லாம் நிரூபிக்கப்படுகிறது. அவர்கள் எழுதும் புத்தகங்களில் இப்படிப்பட்ட கொள்கைகள் வெகு தெளிவாக வெளியாக்கப்படுகின்றன. அப்புத்தகங்கள் எல்லாம் ஒரே மாதிரியாகயிருக்கின்றன. ஹிட்லருடைய புத்தகமும் மற்ற நாஸி புத்தகங்களைப் போலவேயிருக்கின்றது. "என்னுடைய போராட்டம்"; என்ற ஹிட்லரின் புத்தகம் வெகு ஸுவாரஸ்யமுள்ள புத்தகம். அதில் ஹிட்லரின் மனதை காணலாம். அவனுடைய இஷ்டங்கள் எவையென்று அதில் தெரியும்.

அவனுடைய ஜீவியத்தைப்பற்றிய விஸ்தாரமான கதைகள் அப்புத்தகத்தில் இருக்கின்றன. ஆனால் அப்புத்தகத்தில் பெரும்பாலும் எவ்வாறு சக்தியையும் செல்வத்தையும் அடைவது என்பதையும் அதிகப்படுத்திக்கொள்வது என்பதையும் பற்றி ஹிட்லருடைய உபாயங்கள் விஸ்தாரமாகவும், விவரமாகவும், எடுத்துரைக்கப் பட்டிருக்கிறது. உதாரணமாக, தனக்கு வெகு உதவியாக இருக்கக்கூடிய கீழ்ப் பட்ட தலைவர்களை எவ்வாறு பொருக்கி எடுப்பது என்பதைப்பற்றி அதில் விவகரிக் கிறான். அது விமரிசையாக இருக்கிறது. முதல் தலைவனாக இருந்துவரும் தன்னை வெளியேற்றக்கூடிய அளவுக்கு மேற்கண்ட கீழ்பட்ட தலைவர்கள் சக்தியை அடையாதபடி எவ்வாறு செய்துகொள்வது என்பதைப் பற்றியும் விஸ்தரிக்கிறான். இதுபோன்ற பிரச்னைகள் நுண்ணிய விவரங்களுடனும் அதிக விஸ்தாரத்துடன் விவரிக்கப்படுவதில் ஒரு அணு அளவாவது நாணயப்பொறுப்பு, கண்ணியம், முதலிய நல்லொழுக்கங்களே இல்லாமல் எழுதப்பட்டிருக்கிறது. "என்னுடைய போராட்டம்" என்பது ஒரு பருமனுள்ள புஸ்தகம். அது 782 பக்கங்கள் அடங்கியுள்ளது. அந்த 782 பக்கங்களிலும் சக்தியை எவ்வாறு கொள்வதென்றும், கொண்ட சக்தியை எவ்வாறு நிலை நிறுத்துவது என்றும், விருத்தி செய்வதென்றும், விமர்சனம் செய்யப்படினும் அப்படி அடையப்பட்ட சக்தியை பிரயோகிக்கத் தகுந்த லக்ஷ்யம் என்னவென்றும், கொஞ்சமேனும் சிந்திக்கவில்லை. சக்தியை அடைவதிலேயே அவனுக்கு அக்கரையேயன்றி அதன் உபயோகங்களில் அல்ல. ஏன் அவன் இவ்வளவு சக்திமானாக இருக்க வேண்டும் என்று அவனை நீங்கள் கேட்பீர்களேயாகில் அக்கேள்வியை ஒரு மூடத் தனமான கேள்வி என்று எண்ணுவான். ஒரு சாதாரணமான மனுஷ்யனை "எதற்காக நீங்கள் ஆரோக்கியத்தை விரும்புகிறீர்கள்" என்று கேட்டால் அக்கேள்வியை அவன் அர்த்தமில்லாததாக நினைப்பது எவ்வளவு சகஜமோ அவ்வளவு சகஜமாக ஹிட்லருக்கு சக்தியை அடைவது தோன்றுகிறது.

பிறர்மேல் ஆதீனம் கொள்ள சக்தியை அடைவதற்கு ஒருமுகமாக விரும்பு வதில் மட்டும் நாஸிதத்வம் அடங்கிவிடவில்லை. ஆனால் அது ஒரு அடிப்படை யான கொள்கை. அதை அறிந்தால்தான் அவர்களுடைய மற்ற கொள்கைகளையும் அறியமுடியும்.

இதில் புதிதாக ஒன்றும் இல்லை. நாஸிகள் மட்டும் ஏதோ இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஒரு புதிய நாகரீகத்தைப் பற்றியும், இளமையும், வலிமையும் கூடிய சர்வாதிகார தேசங்களின் ஆத்மாவுக்குத்தக்கவாறு ஒரு புதிய ஏற்பாட்டை ஐரோப்பாவில் சிருஷ்டிப்பதைப் பற்றியும், சவிஸ்தாரமாக தத்வ விமர்சனம் செய்கிறார்கள். இந்தப் போலி தத்வங்களைச் சோதித்துப் பார்த்தால் பண்ட மற்ற பிதற்றலாகவும் அல்லது வேணுமென்று சொல்லப்பட்ட பொய்களாகவும் ஏற்பட்டு விடுகின்றன. மேற்கண்ட இரண்டு தோஷங்களும் உள்ள பல தத்வங் களும் இருக்கின்றன.

## மூர்க்க வேதாந்தம்.

நாஸியம் என்பது ஒரு புதிய வேதாந்தம் அல்ல. உலகத்தில் ஒவ்வொரு காலத்திலும் இரக்கமற்ற மூர்க்கர்கள் வாழ்க்கையைப்பற்றிக் கொண்ட நோக்கத்தையே அரசியல் விஷயங்களில் தற்காலத்திய வார்த்தைகளில் சொல்லப் படுகிறது. புதிதாக இருப்பது ஒரே ஒரு விஷயம்தான். அதாவது, தற்காலத்திய மூர்க்கர்கள் தற்கால விக்ஞான சாஸ்திரத்தைத் தங்களுக்கு உதவியாகக் கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு ஜாதியாரில் இம்மாதிரியான நோக்கமும், இயற்கையும் கொண்டவர்கள் பற்பலர் கிளம்புகிறார்கள். அவர்களை அடக்குவதே நாகரீகத்தின் கடமையாகும். அவர்களை பலாத்காரத்தால்தான் அடக்க முடியும். ஏனெனில் பலாத்காரம் ஒன்றைத்தான் அவர்கள் அறிந்து மதிப்பார்கள்.

சாதாரணமாக அவர்கள் அடக்கப்படுகிறார்கள். ஒரு வரம்பிற்குள் வைக்கப் படுகிறார்கள். ஆனால் உலக சரித்திரத்தில் ஒவ்வொரு காலத்தில் கவனக் குறைவாலோ, அல்லது வேறு எக்காரணத்தாலோ அவர்கள் வரம்புமீறி அபாயகாரமான அளவுக்கு அநியாயம் செய்யும்படி விடப்படுகிறார்கள். அக்காலங்களில் அமைதியுள்ள மனிதர்கள் தங்களுடைய சாதாரணத்தொழில்களையெல்லாம் அவசரமாகக் கட்டிவைத்துவிட்டு அவர்களை முறியடிக்க வேண்டியிருக்கிறது. அலக்ஷியமாக விட்டுவைத்திருந்த தற்காப்புகளை சீக்கிரமாக பலப்படுத்த வேண்டியிருக்கிறது. அபாயத்தை விலக்க எல்லாவிதமான பலங்களையும் ஒன்று சேர்க்கவேண்டியிருக்கிறது. மறுபடியும் இது இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது.

---

# துருக்கியர்கள் எவ்வாறு நினைக்கிறார்கள்.

## I

## நாம் யுத்தத்தில் இறங்கும்படி நேர்ந்தால் அது நம்முடைய குற்றமல்ல.

(இஸ்டான்புலில் உள்ள **ஆக்ஷம்** என்னும் பத்திரிகையில் **என். ஸடாக்** என்பவர் 1940-ம் ஹு நவம்பர்மீ 5உ யில் வெளியிட்டது.)

**யு**த்தம் ஆரம்பித்தது முதல் துருக்கியானது சண்டையில் கலந்துகொள்ள வேண்டாமென்று தீர்மானித்திருக்கிறது. இந்த மனப்பான்மை ஒருவருக்கும் பாதகமளிக்கவில்லை. எல்லாத் தேசங்களோடும் ஒத்துமையாயிருப்பதற்கு இது சாதகமாயிருக்கிறது. நமது தேசத்தலைவர் அவருடைய சொற்பொழிவில் இந்த விஷயத்தைத் தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறார். இத்துடன், அவருடைய தேசத்தில் தரைவழியாகவோ, கடல் வழியாகவோ அல்லது விமான மார்க்கமாகவோ யுத்தம் செய்கிறவர்களைப் புகும்படி துருக்கி அனுமதிக்காது என்றும் வாக்கு அளித்திருக்கிறார். நமது தலைவர் எப்பொழுதும் ராஜ விசுவாஸமுள்ளவர்,

கபடமற்றவர். இந்தச் சமயத்தில் இவர் இம்மாதிரியான மனப்பான்மையை வெளியிடுகிறது மிகவும் கவனிக்கத்தக்கது. இந்த யுத்தத்தின் போக்கு மிகவும் பயங்கரமாகயிருக்கிறது. ஆகையால் யுத்தத்தின் முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு நடுநிலைவகிக்கும் தேசத்தைப்பற்றியும் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. தலைவர் பின்வருமாறு பேசினார்: "இங்கிலாந்தின் பேரில் ஏற்பட்ட ஒரு பெரிய எதிர்ப்பை அது பராக்ரமத்துடன் தடுத்து வருகிறதென்பது யுத்தத்தின் போக்கை வேறு பக்கத்தில் மாற்றிவிட்டது. புதிதான ஒரு வியாஜத்தை வைத்துக்கொண்டு மற்றொரு பாகத்தில் யுத்தம் துடங்கியிருக்கிறது." இதனால் யுத்தமானது தானாகவே கிரீஸ் தேசத்தில் பரவியிருக்கிறது. மறுபடியும் ஜெர்மனியும் இதாலியும் பால்கன் நாடுகளில் யுத்தத்தை ஆரம்பிக்க முயலுகிறார்கள். இதை விட, பிரிடன் பால்கன்நாடுகளை யுத்தத்தில் சேரும்படி செய்ய சதி செய்கிறதென்று பிரிடன்பேரில் அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். ஆகையால் அச்சு வல்லரசர்கள் இங்கிலாந்தை ஆக்ரமித்து அதைச் சமாதானத்துக்கு வரும்படிசெய்ய அபிப்ராயப்படுகிறார்கள் என்பது நிச்சயம். இங்கிலாந்து தோல்வியடைந்தால், பழுத்த பழங்களைப் பொறுக்குவதுபோல் பால்கன்நாடுகளை எளிதில் பொறுக்கிவிடலாம். ஆனால் அவர்கள் இங்கிலாந்தை ஆக்ரமிக்க முடியவில்லை. இங்கிலாந்தின் எதிர்ப்பு நாளுக்குநாள் வலுவடைகிறது. அதை அச்சு நாடுகள் ஆக்ரமிப்பது என்பது கனவே ஒழிய வேறல்ல.

இம்மாதிரியான கடினமான நிலைமையாலும், இங்கிலாந்தை நேராகத்தாக்க இயலாததாலும், அச்சு நாடுகள் வேறுமார்க்கங்களைத் தேடப்புறப்படுகிறார்கள். ஜெர்மனி ருமேனியாவை ஆக்ரமித்திருக்கிறது. இதாலியானது கிரீஸின்மேல் பாய நினைக்கிறது. அச்சு நாடுகளின் தீவிரமான எண்ணம் எப்படியிருந்தாலும் ஒரு விஷயம் தெளிவாய் வெளியாகிறது. பால்கன் நாடுகளில் குழப்பம் உண்டாக்கி அவைகளில் கலவரம் உண்டாகும்படி செய்ய அச்சு நாடுகள் ஒரு பொழுதும் தயங்கவில்லை. அச்சு நாடுகள் ஒரு புதிய ஏற்பாட்டைச்செய்யத் துடங்கிவிட்டார்கள் என்கிறமட்டில், அவர்கள் தாங்கள் கொடுத்த வாக்கை யாவது, நம்பிக்கை ஏற்படுத்தியதையாவது, நடு நிலைமையையாவது, அல்லது யுத்தத்தில சேராதவர்களின் நலத்தையாவது பொருட்படுத்தவில்லையென்று நாம் அறிந்துகொள்ளலாம். தேசங்களின் அமைப்பையாவது, நாடுகளின் சுதந்திரத்தை யாவது, ஜனங்களின் சுயேச்சையையாவது கருதாமல் யுத்த முறைக்காக அச்சு நாடுகள் அவைகளை பலியிடுவார்கள். அவர்கள் எண்ணத்தைப் பூர்த்திசெய்ய தங்குதடையன்னியில் மிரட்டலையும், ஆயுதபலத்தையும் அவர்கள் உபயோகப் படுத்துகிறார்கள். ருமேனியாவிலும், கிரீஸிலும் அவர்கள் செய்திருப்பதைப் பார்த்தால் இது நன்கு விளங்கும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் துருக்கி செய்யவேண்டிய ஒரே விஷயம் என்ன வென்றால் யுத்தத்திற்குத் தயாராக இருப்பதுதான். கிரீஸின்மேல் ஏற்பட்ட எதிர்ப்பினால் அநேக சங்கடங்கள் சம்பவிக்க நேரிடும். எதிர்பாராதவண்ணம் யுத்தம் நம்முடைய தேசத்தில் சுலபமாய் பரவக்கூடும். நமது தலைவர் தேவையான உத்தரவுகள் பிறப்பிவித்திருக்கிறார். கூடுமான அளவு தியாகம்

செய்ய நாம் தயாராக இருக்கவேண்டும். நமது தேசத்தலைவரின் பிரசங்கத்தின் பயனாக நமது நாட்டிலுள்ளவர்களெல்லாம் நூதன வீரர்களாக நடந்துகொள்ளத் தயாராயிருக்கிறார்கள். சமீபத்தில் நெருக்கடி ஏற்பட்டு யுத்தம்செய்ய நேரிட்டால், நமது தேசம் ஒரே மனதுடன் இருப்பதாகவும், தளர்ச்சியடையாத நம்பிக்கையுடனிருப்பதாகவும் காணப்படும்.

நாம் யுத்தத்தில் இறங்கும்படி நேர்ந்தால் அது நம்முடைய குற்றமல்ல.

## II

## நூதன பாந்தவ்யங்களால் பலமடைந்த நட்பு.

### (ஆமத் அமீன் யால்மன்.)

இஸ்டான்புல் "வடன்" பத்திரிகையின் 7—12—40 பதிப்பு.

உலகத்தில் சில தேசங்களுக்குள் அந்யோன்யம் இருக்கும்படிக்கே கடவுள் விதித்த விதி. தேசத்தின் பூகோள ஸந்நிவேசம், முக்கிய விஷயங்களில் ஒரேவிதமான அக்கறை, பிறர்களால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் நிர்ப்பந்தங்களை எதிர்க்கவேண்டி ஒத்துழைக்கவேண்டிய அவசியம், எல்லாமாகச் சேர்ந்து அவ்வித தேசங்களை ஒன்றுகூட்டி வைக்கின்றன.

நமக்கும், பிரிடனுக்குமுள்ள சிநேகமானது இவ்வித இயற்கை சிநேகம். மேலும், இங்கிலீஷ்காரரும், துருக்கியரும் இயற்கையில் கண்யம் பொருந்தியவர்கள். அவர்கள் மனோபாவம் பரஸ்பரம் தெரியும் இந்த அறிவு ஜாஸ்தியாக ஆக அவர்களுக்குள் அன்பு ஜாஸ்தியாகிறது.

அவர்கள் சிநேகம் நெருக்கடியான நிலைமையில்கூட நிலைத்திருக்கிறது. போரிலிருந்து விரோதம் ஏற்படுவதுண்டு என்பது நமக்குத்தெரியும். வாணம் வெட்டி பதுங்கியிருந்து ஆயிரக்கணக்காக ஒருவரையொருவர் கொல்லுவதில் ஈடுபட்டிருந்தால், ஒருவருக்கொருவர் விரோதம் ஏற்படுவது ஸகஜம். ஆனால், பிரிடிஷாருக்கும், துருக்கியருக்கும் அப்படியில்லை. காலிபோலி (Gallipoli)யில் பல மாதங்கள் சண்டையடித்துக்கொண்டார்கள். ஆனால், அவர்களுக்குள் பரஸ்பர மரியாதையும், விருப்பமும் உண்டு.

மேலேகண்ட நிலைமையில்கூட அவ்வித சிநேக உணர்ச்சி உண்டானால், அவர்கள் இருதேசத்தாரும் ஒரே மனதாய் காரியங்கள் செய்யவேண்டிய சந்தர்ப்பத்தில் அப்படி செய்யாமலிருப்பது பேதமை.

காரியகாரணத்துடன் சில தேசங்கள் நடக்காமலிருப்பது எவ்வளவு துக்ககரமான விஷயம்! நமக்கும், பிரிடனுக்கும் சமயத்துக்கேற்றவாறு மனத்தாங்கல், அருவருப்பு, விரோதம் முதலியவை இருந்திருக்கின்றன. ஏன் அப்படி? முதலாவதாக உலகம் நிலைத்தில்லாமல் கலவரையாயிருப்பது ஒரு காரணம். தங்கள் நோக்கங்களை அனுசரியாமல் சமயத்திற்கேற்றவாறு கொள்கைகள் கையாடவேண்டியதாகயிருந்தது.

இரண்டாவதாக, துருக்கியின் சிநேகமுறை, அரசியல் கக்ஷி, பிரதி கக்ஷிகளுக்குள் வாதத்திற்கு இடமாயிற்று. ஒரு கக்ஷியார் நமது சிநேகத்தை ஆதரித்தால், எதிர் கக்ஷியார் அதை நிராகரித்தார்கள். கக்ஷி வேகத்தால் எல்லாம் குதர்க்கமாக இங்கிலீஷ் தாராளக் கக்ஷியாருக்கு வியாக்கியானம் செய்யப்பட்டது. மாத்சல்யமே காரணமாக நடவடிக்கைகள் நடத்தப்பட்டன. இங்கே துருக்கியிலோ என்றால், ஆட்டோமான் ஸுல்தான்களுக்குத் தங்கள் வம்சத்தின் நலமே முக்கியமாகத் தோன்றியபடியால், தேசத்தின் க்ஷேமம் இரண்டாம்பக்ஷமாய் இருக்கிறது. பிரிடனுடன் சிநேகமாக இருந்தால், ஜனநாயகமுறை துருக்கியிலும் அனுஷ்டிக்கவேண்டிவருமென்று அவர்களுக்குத் தெரியும். ஆகையால் தங்கள் சுயநலத்தைக்கருதி ஜெர்மனியுடனும், ஜார்கள் ஆண்ட ரஷியாவிலும் அவர்களுக்குப் பற்றுதல் உண்டாயிற்று.

கடைசியாக இருதரப்பாருக்கும் விஷயம் மனதிற்குவந்தது. உலகம் கட்டுப்பாடு இல்லாமல் மாறும் தருவாயில், இருதேசத்தாரும் ஒத்துழைக்கவேண்டிய அவசியம் மனதிற்கு வந்தது. இந்த யுத்தத்தில் ஒழுங்கை மீறினவர்கள் கைதூக்கியிருந்ததாக சில சமயங்களில் காணப்பட்டது. அச்சமயங்களில்கூட பிரிடனுக்கும், துருக்கிக்கும் இருந்த பரஸ்பர மரியாதை ஒரு க்ஷணங்கூட மாறவில்லை அவர்களுக்குள் இருந்த நம்பிக்கையும் அகலவில்லை. பொது நோக்கத்திலிருந்தும், பொது காரியங்களிலிருந்தும் அவர்கள் நழுவவில்லை.

இவ்வளவு உயர்ந்த சிநேகமானது கிணத்தடிப் பிள்ளையாராய் இருக்கக்கூடாது. அதை நாம் பலப்படுத்தவேணும்.

அதற்கு ஆங்கில-துருக்கி வியாபார உடன்படிக்கை ஒரு நல்ல கருவி. நடுவில் இரு தேசத்தாருக்குள்ளும் இருந்த வியாபார வசதிகள் தாத்காலிகமாகக் குறைந்ததே அவர்களுக்குள் தொடுப்பு குறைந்ததற்கும், சிநேகம் எவ்வளவு முக்கியம் என்று சரிவர அறியாமல் இருந்ததற்கும் காரணம்.

இந்த உடன்படிக்கை அவர்களுக்குள் நிரந்தரமான பொருளாதார வசதிகள் ஏற்பட ஆதாரம்; இது துருக்கிக்கும், பிரிடனுக்கும் மட்டுமல்ல; துருக்கிக்கும் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த எல்லா நாடுகளுக்கும் அன்வயிக்கும். லண்டனில் நமக்கிருக்கும் செல்வாக்கைவைத்தே இந்தியா, ஆஸ்திரேலியா, கனடாவிலிருந்து சரக்குகள் வாங்கமுடியும்.

இந்தப் புதிய வியாபார உடன்படிக்கை குணவிசேஷத்தை பிரிடிஷ் பத்திரிகைகள் தெளிவாய் மனதிற்குவாங்கி வெளியிட்டிருக்கின்றன. அது எவ்வளவு விசேஷமானது என்பதை இங்கேயும் நாங்கள் அறிகிறோம் என்பதை அவர்கள் நம்பலாம்.

துருக்கி சாமான்கள் பிரிடனிலும், பிரிடிஷ் சாமான்கள் துருக்கியிலும் வாங்குவது தேசாபிமான அடையாளமென்று இரு தேசத்தாரும் உணரும் காலம் சமீபிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

## 1940-ம் ஆண்டின் கப்பல் நிரூபணம்.
## புதிய சண்டைக் கப்பல்கள் வளர்ச்சி.
## ஐந்து நவீன "டெரட்நாட்டுகள்".
## 1941-ம் ஆண்டின் தயாரிப்பு ஜாப்தா.

("எஞ்சினீர்" என்ற வாரப்பத்திரிகையில் பிரான்ஸிஸ் மெக்மர்ட்டிரி என்பவரால் வெளியானது.)

1939-ம் வருஷத்திய முடிவில் ராஜீய கப்பல்படைக்காக நிர்மாணம் செய்யத் துவக்கிய ஒன்பது சண்டைக் கப்பல்களில் இரண்டு சென்றவருஷத்தில் முடிந்தது. "கிங் ஐந்தாம் ஜார்ஜ்" வகுப்பைச்சேர்ந்த 35,000 டன் கனமுள்ளவும் 30 நாட்டு களுக்கு மேற்கொண்ட வேகத்தோடுகூடினதும், 14 அங்குலம் குறுக்களவுள்ள பீரங்கிகள் முக்கிய முஸ்தீபாகப் பொருத்தப்பெற்றதுமான மூன்று கப்பல்கள் 1941-ம் வருஷத்தின் தயாரிப்பின் திட்டம். இந்த ஐந்து நவீன சண்டைக் கப்பல்களும், ஒரு விசேஷ உதவிபுரியக்கூடிய சதுர வியூகமாகும். 1939-ம் ஆண்டில் 40,000 டன் நிறையுள்ளதும், 16 அங்குலம் குறுக்களவுள்ள பீரங்கிகள் பொருத்தப்பெற்றதுமான நான்கு பெரிய சண்டைக்கப்பல்கள் தயார் செய்யப் பட்டன. இந்த உந்நதமான கப்பல்களில் சருவங்களின் கனத்தை நூற்றுக்குப் பதினைந்து வீதம் குறைப்பதின் மூலம் இவைகளின் வேகத்தை மிகவும் அதிகப் படுத்தக்கூடும். "கிங் ஐந்தாம் ஜார்ஜி"லுள்ள 14 அங்குலம் குறுக்களவுள்ள பீரங்கிகள் நான்கு கால்களோடுகூடின கோபுரங்களின்மேல் பொருத்திவைக்கப் பட்டிருப்பதால், இதற்கு முன் கட்டிய கப்பல்களிலுள்ள 15 அங்குலம் குறுக் களவுள்ள பீரங்கிகளைவிட அதிகதூரம் பாய்கிறதென்று இவைகளின் பிரயோகத் தால் கவசங்களில் ஏற்படும் துளைகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இத்தோடு இவைகளின் சுடும் சக்தியும் அதிகரிக்கப்படுகிறது. சமீபத்தில், புனர் நிர்மாணம் செய்யப்பட்ட "க்வீன் எலிஸபெத்", "வாலியண்ட்" என்ற சண்டைக் கப்பல்கள் எதிரிகளின் எத்தகைய கப்பல்களையும் எதிர்க்கும் சக்திவாய்ந்தவைகள்.

1940-ம் வருஷத்தில் தயார்செய்யக் கட்டளையிடப்பட்ட, ஆகாய விமானங் களைத் தாங்கிச்செல்லும் 23,000 டன் நிறையுள்ள 4 கப்பல்களில் 'இல்லஸ்ட்ரியஸ்,' என்னும் கப்பல் ஏற்கனவே இந்த யுத்தத்தில் முகான்மையாக வேலைசெய்து வருகிறது. இந்தக் கப்பல்கள் "ஆர்க்ராயல்" கப்பல் மாதிரியைவிட சற்று விருத்திசெய்யப்பட்டவைகள். 1942-ம் ஆண்டில் தயார் செய்யப்போகும் "இம்ப்ளாகபிள்", "இண்டிபாடிகபிள்" என்ற கப்பல்கள் இவைகளைவிட அதிக அபிவிருத்தி அடைந்தவைகளாகயிருக்கும்.

சென்ற ஆண்டில், மிகவும் பலமுள்ள பயங்கரமான ஒரு சதுர வியூகம் (கப்பற்கூட்டம்) ஒவ்வொன்றும்—8,000 டன் நிறையுள்ளதும், 33 நட்டுகள் வேக முள்ளதும், பன்னிரெண்டு 6 அங்குல பீரங்கிகளும், 8 நாலு அங்குல (ஆகாய விமானங்களைச் சுட்டு வீழ்த்தும்) பீரங்கிகளும் பொருத்தப்பட்ட ஐந்து கப்பல் களும், ஒவ்வொன்றும் 5,450 டன் நிறையுள்ளதும், 33 நாட்டு வேகமுள்ளதும்,

இரண்டு $5\frac{1}{4}$ அங்குல பீரங்கிகள் பொருத்தப்பட்டதுமான 7 கப்பல்களும்—தயார் செய்யப்பட்டிருக்கவேண்டும். சந்தேகமில்லாமல் இன்னும் அநேக யுத்தக் கப்பல்கள் தயாராகின்றன. 1939-ம் வருஷம் ஆரம்பத்தில் துவக்கப்பட்ட 2,650 டன் நிறையுள்ள நான்கு வெடிகுண்டு பரப்பும் கப்பல்கள் அநேகமாய் முடிவடையும் ஸ்திதியிலிருக்கும். 1,920 டன் நிறையுள்ள "லேட்னிங் வகுப்பைச் சேர்ந்த 16 கப்பல்களும், 1,690 டன் நிறையுள்ள எட்டு "ஜாவலின்" வகுப்புக் கப்பல்களும் 1939-ம் வருஷத்தில் கட்டப்பட்டவை முடிவடைந்து அவைகளில் சில சமுத்திரத்தில் இருக்கச்செய்யலாம்.

1941-ம் வருஷம் நெடுகிலும், அடுத்தடுத்து நாசகாரிகள் அநேகம் கொடுபடு வதை எதிர்பார்க்கலாம். இதன் மத்தியில் ஐக்கிய நாடுகளிலிருந்து வாங்கப்பட்ட 50 நாசகாரிகளுக்கும் சுறுசுறுப்பான காலமிருப்பது நிச்சயம். எதிர்க்கும் ஆகாய விமானங்களைச் சுட்டெறிய தங்கள் பீரங்கிகளை உயர்த்திவைப்பது இவைகள் எல்லா வற்றின் காரியமாகும்.

இந்த யுத்தத் துவக்கத்தில் ஐந்து நீர்மூழ்கிகள் (Submarines) கட்டப்பட்டு வந்தன. "ஹண்ட்" வகுப்பைச்சேர்ந்த 900 டன் நிறையுள்ள 20 கப்பல்கள் இதுவரை கொடுபட்டிருக்கவேண்டும். "பிலாக் ஒவன்" வகுப்பைச்சேர்ந்த மெதுவேகமுள்ள நான்கு துணைக்கப்பல்கள் சந்தேகமில்லாமல் வேலை செய்து கொண்டுவருகிறது.

1940-ம் வருஷத்தில் கட்டப்பட்ட "மோட்டார் டார்பிடோ போட்டு" களின் சங்கியை ஏராளமென்று சொல்லலாம். 1939-ம் வருஷப்பிரகடனையி லடங்கிய "பெங்கர்" வகுப்பைச் சேர்ந்த வேகமுள்ள 20 கடல் வெடிகுண்டு பெருக்கிகள் இப்பொழுது மிதக்கவிடப்பட்டு வேலை செய்துகொண்டு வருகின்றன.

டெப்போ கப்பல்களும், வேலர் வகுப்பைச்சேர்ந்த 56 வேவு பார்க்கும் கப்பல்களுமே இவைகளின் இதர வகைகளாகும்.

ராஜீய ஆஸ்திரேலியன் கப்பற்படைக்கு இரண்டு சிறு கப்பல்கள் கட்டி முடித்திருப்பதுடன், அதிவேகமுள்ள அநேகம் கடல் வெடிகுண்டு பெருக்கிகளும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ராஜீய கனடியன் கப்பற்படைக்கு, 2 நாசகாரிகள் 34 வெடிகுண்டு பெருக்கிகள், 54 "கார்வெட்ஸ்", 24 "மோட்டார் டார்பீடோ போட்டுகள்" சேர்ப்பது சண்டை விளம்பரப் பத்திரிகையின் அறிக்கையாகும்.

---

# கதம்பம்.

1. "ஹிட்லர் இங்கிலாந்தின்பேரில் படையெடுத்தால் அவனை எவை அடித்து விரட்டியது என்று தெரியாதவண்ணம் வெகுவேகமாக அவன் துறத்தி அடிக்கப்படுவான்." (அமெரிக்காவின் யுத்த நிருபர், க்வெண்டின் ரெயினால்ட்ஸ், ஜனவரி 18).

2. "நாம் யுத்தத்தில் அகப்பட்டுக்கொள்ளாமலிருக்க வேண்டுமானால் பிரிடனுக்கு எல்லாவிதமான ஒத்தாசைகளும் செய்யவேண்டும்." (மிஸ்டர் வெண்டல் வில்கி, வாஷிங்டன், ஜனவரி 21).

3. "தேசங்களின் வாழ்நாட்கள் வருஷக்கணக்குகளால் தீர்மானிக்கப் பட்டவை அல்ல. மனிதர்களின் வாழ்க்கையின் ருசியினுல்தான் அவைகள் அளவிடப்படுகின்றன." (மிஸ்டர் ரூஸ்வெல்ட், வாஷிங்டன், ஜனவரி 21).

4. "இந்த யுத்தத்தில் முக்கியமாகக் காணக்கூடியது யாதெனில், கப்பல் களால் சமுத்திரத்தில் ஆதிக்கம் பெறலாமென்பதுதான்." (அட்மிரல் சாட்பீல்ட் பிரபு, லண்டன், ஜனவரி 21).

5. "இதாலியர்களை யுத்தம் செய்யாமல் ஒழிப்பதற்கு முன்னுல் இதாலியில் உள்ள இதாலியர்களைத் தாக்கவேண்டும்." (ஜெனரல் ஸ்டார்டி, ஆஸ்திரேலிய சேனைத்தலைவர், மெல்போர்ன், ஜனவரி 24).

6. "நம் முன்னேர்களைப்போல நாம் கடவுளைத்தவிர மற்றொரு எஜமானனுக்கும் கீழ்ப்படிய மாட்டோம்." (மிஸ்டர் வில்லியம் புல்லிட், வாஷிங்டன், ஜனவரி 25)

7. "இரண்டு தேசங்களுக்கும் இல்லாமல், இரண்டு மனிதர்களுக்குள் ஏற்பட்ட ஒப்பந்தம் இது." (அலெக்ஸாண்ட்ரியாவிலிருந்த கைது செய்யப்பட்ட ஒரு இதாலிய ஆபீஸர், அச்சுநாடுகளின் ஒப்பந்தத்தைப் பற்றி ஜனவரி கடைசியில்).

8. "1941-ம் வருஷத்தில் நடக்கும் யுத்தம் கப்பல் சண்டையாகத்தான் இருக்கும்." (மிஸ்டர் ரொனுல்ட் கிராஸ், பிரிடிஷ் கடற்படை மந்திரி, லண்டன், ஜனவரி 26).

9. "அவர்கள் மனிதர்கள் சேர்ந்த ஒரு அழகிய கூட்டம்." (பிரிடிஷ் வியாபாரிகள் சங்கத்தின் தலைவர்களைப்பற்றி மிஸ்டர் வெண்டல் வில்கி, லண்டன், ஜனவரி 30).

10. "உலகத்தில் எந்தப் பிரதேசத்துக்கும் கப்பல்களை அனுப்ப அமெரிக் காவுக்கு உரிமையுண்டு. அதேமாதிரி அவர்களைத் தடுக்க முயலும் எவரையும் சுட்டு விடவும் அதற்கு அதிகாரம் உண்டு." (ஹிட்லர் ஸ்போர்ட்ஸ் பாலாட்ஸ் என்னும் இடத்தில் பேசியதைப்பற்றி ஸெனடர் கிளாஸ் சொல்லியது, வாஷிங்டன், ஜனவரி 30).

---

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

(ஜனவரி 13உ முதல் 19உ வரை.)

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

---

### அச்சு நாடுகளும், பெருக்கல்-வாய்ப்பாடும்.

ஜனவரி 10-ம்தேதியன்று பிரிடிஷ் வியாபாரக் கப்பல்களையும், அவை களுக்குத் துணைபோன சில யுத்தக் கப்பல்களையும் மத்தியதரைக் கடலில் ஜெர்மன் விமானங்கள் தாக்கின. இந்தச் சண்டையைப்பற்றி உள்ளது உள்ளபடி

எதிரிநாட்டு ரேடியோ நிலயங்கள் செய்தி விடுக்குமென்று நினைப்பதற்கில்லை தான். ஆனால், இதைப்பற்றி அதிகமாய்ப் பெருமைபாராட்டாதிருந்ததற்குக் காரணம் ஜெர்மனிக்கேற்பட்ட விமான நஷ்டமாயிருக்கலாம். பிரிடிஷ் கப்பல்களை எதிர்த்த போது 12-யூங்கர், பாய்ச்சல்-விமானங்களும், பிறகு, ஜெர்மன் விமானங்கள் ஒளிந்திருக்கும் கடேனியா (ஸிஸிலித்தீவில்) நிலயத்தைத் தாக்கியபோது 30-40 விமானங்களும் ஜெர்மனிக்கு நஷ்டமாயின.

இது இப்படியிருக்க, பிரிடிஷ் அறிக்கையில் பிரிடிஷ் நஷ்டம் குறைத்துக் காட்டப்பட்டிருப்பதாக எதிரி ரேடியோக்கள் குறைகூறுகின்றன. ஆனால், இவைகள் எதிரிக்கேற்பட்ட விமான நஷ்டத்தைப்பற்றிப் பிரஸ்தாபமே செய்யவில்லை.

உள்ளபடி, இச்சண்டையில் பிரிடனுக்குச் சேதம் பின்வருமாறு: ஸௌதாம்ப்டன் என்ற குரூஸர் தீப்பிடித்து மூழ்க்கப்பட்டது ஒன்று. இல்லஸ்டிரியஸ் என்ற விமானமேற்றிச் செல்லும் கப்பலும், காலண்ட் என்ற நாசகாரியும் பழுதுபட்டது இரண்டு. ஆனால் இவைகள், பத்திரமாய் துறைமுகம் சேர்ந்தன. வியாபாரக் கப்பல்களெல்லாம் பத்திரமாகக் கிரீஸுக்கும் போய்ச்சேர்ந்தன. இந்த எதிர்ப்பில் பிரிடிஷ் விமானங்களொன்றும் நஷ்டமாகவில்லை.

உண்மையிப்படியிருக்க காலண்ட் முழுகிவிட்டதாகவும், இந்தச் செய்தி ஜர்னல்-டி-இதாலியாவிலிருந்து கிடைத்திருப்பதாயும் ஒலிபரப்பப்பட்டது. ஒலிபரப்பிய சமயத்தில் (ஜனவரி 15) காலண்ட் துறைமுகத்தில் பத்திரமாயிருந்தது. இதன் மத்தியில், நஷ்டத்தை உள்ளபடி பிரிடிஷ் அறிக்கை வெளியிட்டது. அதற்கு விரோதமாக, ருஜுவொன்றுமில்லாது, ஸௌதாம்ப்டனைத் தவிர 8 பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் அடிபட்டுப் பழுதுபட்டதாக ஜனவரி 17-ல் ஒலிபரப்பப்பட்டது. நஷ்டத்தைக் குறைத்துச் சொல்லிவிட்டதாக நினைத்துக் கொண்டு, மறுபடியும், அடிக்கப்பட்டது 14 கப்பல்களென்றும், அவைகளில் சில மூழ்கிவிட்டதாகவும் மேற்சொன்ன செய்திவந்த 7-மணிக்குப் பிறகு, புதுச்செய்தி ஒன்று ஒலிபரப்பப்பட்டது.

## கடற்கொள்ளைக் காரர்களாம்!

மெண்டோஸா என்ற கப்பலொன்று உணவுப்பொருள்களை ஏற்றிக்கொண்டு ஐரோப்பாவிற்கு, தென் அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் வந்துகொண்டிருக்கிறது. இதைப்பிடிக்க அஸ்டூரியாவென்ற ஆயுதமணிந்த பிரிடிஷ் வியாபாரக் கப்பலொன்று விரட்டிக்கொண்டிருக்கிறது. 'பிரிடனைக்காப்பாற்ற பிரான்ஸ் சண்டைசெய்து எல்லாவற்றையும் இழந்தது. இப்பொழுது பிரெஞ்சுக்காரர்களுக்கு உணவு கொண்டுவரும் மெண்டோஸாக் கப்பலை பிரிடன் கொள்ளையடித்து உடைக்கப்பார்க்கிறது: என்ன அநியாயம்' என்று ஜெர்மன் ரேடியோ ஜனவரி 17-ல் ஒலிபரப்பியிருக்கிறது.

இதில் விஷமப்பிரசார சமாசாரங்களிரண்டிருக்கின்றன:—

சண்டையில் சேராத ஐரோப்பியர்களுக்குக்கூட உணவில்லாது பிரிடன் முற்றுகை போடுவதென்பது ஒன்று.

முடிவு வரையில் சேர்ந்து சண்டை செய்வதாக வாக்குக்கொடுத்த பிரிடன் இப்பொழுது பிரான்ஸைக் கைவிட்டுவிட்டதென்பது மற்ருென்று.

பிரான்ஸ் தேசமானது இப்பொழுது இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ஒருபாகத்தில் ஜெர்மனியின் நேராட்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த பாகத்திலுள்ள ஒரு துறைமுகத்துக்குத்தான் மெண்டோஸாக்கப்பல் உணவுப்பொருள்களை எடுத்துக்கொண்டுவருகிறது. இந்தச் செய்தியை ஜெர்மன் ரேடியோ ஒளித்து விட்டது. இந்த பாகத்தில் ஜெர்மன் சைனியங்கள், ரக்ஷிப்பதற்கென்று சொல்லிக்கொண்டு, அங்கு விளையும் விளைபொருள்களையெல்லாம் விழுங்கி விடுகின்றன. மெண்டோஸாக்கப்பல் பிரான்ஸுக்கு வந்துசேர்ந்தால், அதிலிருக்கும் உணவையும் சைனியங்களெடுத்துக்கொள்ளுமேயொழிய, பிரெஞ்சுக்காரர்களுக்குக் கிடைக்காது. மேலும், ரக்ஷிப்பதற்கென்று ஜெர்மனிக்கு பிரான்ஸ் தினசரி 4,000 பிராங்க் கப்பம் கட்டுகிறது.

## நாஸிகளின் மனக்குழப்பம்.

பிரிடனுக்கு அமெரிக்கா செய்யத் தீர்மானித்திருக்கும் உதவியைப்பற்றி எவ்விதம் தூஷிப்பதென்று ஜெர்மனிக்கு இன்னும் புரியவில்லை. மனக்குழப்பமேற்பட்டுப் பலவிதமாய்ப் பிதற்றுகிறது. முதலில் அமெரிக்காவில் கட்டப்பட்ட விமானங்கள் சண்டைக்கு உபயோகமில்லையென்று தூஷித்தது. நன்ருகச் சண்டைப்போடக்கூடியவையென்று உலகமறிந்தவுடன், இந்த விமானங்களை பிரிடனுக்குக் கொண்டுவரும்போது வழியில் நீர்மூழ்கிகளால் உடைத்துவிடப் போவதாகச் சொல்லிக்கொண்டது. இப்பொழுது பிரிடிஷ் விமானிகள் வாரத்துக்கு இரண்டு தடவை அமெரிக்காவுக்குச் சென்று விமானங்களைக் கொண்டு வருகிருர்கள். ஆகவே ஜெர்மனிக்கு மற்ருெரு பொய்யைக் கட்டவேண்டியதாய் விட்டது. அமெரிக்கா ஏராளமாய் பிரிடனுக்குக் கடனைக்கொடுத்து, யுத்தம் முடிந்தவுடன் பிரிடனைப் பாபராக ஆக்கிவிடப் போகிறதென்றும், இதற்காகத்தான் இப்பொழுது மிஸ்டர் ஹாரி-ஹாப்கின்ஸும், மிஸ்டர் வெண்டல் வில்கீயும் வந்திருக்கிருர்களென்றும் இப்பொழுது சொல்லுகிறது.

## எல்லாம் சரிதான்: ஆனல் முடிவில்......

ஸெகோஸ்லவோகியாவில், ப்ரேக் நகரத்தில் மார்ச்சு 16-லிருந்து 23-வரையில் வஸந்தக் கண்காக்ஷி ஒன்று நடைபெறுமென்றும், தொழிலாளிகளும், வியாபாரிகளும் இதை அதிக உத்ஸாகத்தோடு எதிர்பார்க்கிருர்களென்றும், அநேக கடைக்காரர்கள் மனுச் செய்துகொண்டிருப்பதின் முடிவாக கண்காக்ஷிச் சாலையில் போதுமான இடம் இல்லையென்றும் ஜெர்மனி ஜனவரி 17-ல் ஒலிபரப்பியிருக்கிறது.

ஆனல், இந்தக் கண்காக்ஷி ஜெர்மானியர்களுக்கேயொழிய ஸெக்கியர்களுக்காகவில்லை. எவ்வளவுக்கெவ்வளவு கண்காக்ஷி நன்ருயிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஸெக் நாட்டுத் தொழில்கள் போய்விட்டதாகக்கொள்ளலாம்.

## ஊரிலில்லே.

இப்பொழுது அநேக ஸெக்கியர்கள் காக்ஷியைக் கண்ணால்கூடப் பார்க்க முடியாது. 150,000 பேர்கள்போல வேலைசெய்ய ஜெர்மனிக்கனுப்பப்பட்டு விட்டார்கள். பாக்கிப்பேர்களில் அநேகம் பேர்களுக்குக் காக்ஷிசாலைக்குள்போக சீட்டுகள் வாங்கக்கூட காசு கிடையாது. அவர்கள் மீதம்பிடித்துக் கையில் வைத்திருந்த பணத்தையெல்லாம் யுத்தம் நடத்திய செலவுக்சென்று வருஷம் 20,000 லக்ஷம் க்ரௌன் பிடுங்கிக்கொள்ளப்படுகிறது.

இந்த இரண்டு வருஷங்களாக ஸெக்கியர்கள் உலகத்திலில்லாத கொடுங்கோலை அனுபவித்துவருகிறார்கள். ஆனால் தைரியத்தைமட்டும் விடவில்லை. இதையடக்குவதற்காக பாரன்-வான்-நியூராத் என்ற தலைமை அதிகாரி உத்தரவுகளைப் போட்டிருக்கிறார். 'ஸெக்கியர்களுடைய தைரியத்தை அடக்கவேண்டும்' என்ற முத்திரையைக் கண்காக்ஷிக்கு மூலவாக்கியமாக வைத்துக்கொள்ளலாம்.

---

# B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

## போலண்டின் கதி.

போலிஷ்காரர்களுடைய அபிவிருத்தியைக் கவனித்துவருவதாக ஜனவரி 14-ம்தேதி ஜெர்மன் ஒலிபரப்பு சொல்லுகிறது. போலிஷ்காரர்களையம், பிரஞ்சுக்காரர்களையும் 19-ம் நூற்றாண்டில் நினைத்தபடி ஜெர்மானியர்களாக மாற்றிவிடமுடியாதென்று ரீச் ஸ்டாக் சபையில் ஹிட்லர் 17—5—1933-ல் பிரஸ்தாபித்திருக்கிறார். போலிஷ்காரர்களை போலண்டிலிருந்து விரட்டிவிடுவதுதான் இப்போது ஹிட்லரின் கொள்கை. ஏற்கனவே 1940 மார்ச்சுக்குள்ளாக 700,000 போலிஷ்காரர்களையும், யூதர்களையும் விரட்டியாய்விட்டது. இப்பொழுது மொத்தம் 10 லக்ஷம் போலிஷ்காரர்களை விரட்டியிருப்பார்கள். போலிஷ்காரர்களுக்கு உரித்தான கல்வி, மதம், சமூக அபிவிருத்தியெல்லாம் பாழாய்ப் போயின. ஜெர்மன் வாலிபர்களுக்காகப் பள்ளிக்கூடங்களையெல்லாம் பிடுங்கிக் கொண்டுவிட்டார்கள். போலிஷ் பிள்ளைகளுக்கு வாரத்துக்கு மூன்று நாள் தான் பள்ளிக்கூடம்.

ஜெர்மனி பிடித்துவைத்திருக்கும் இதர நாடுகளைக்காட்டிலும் போலண்டில் உணவில்லாத கஷ்டம் அதிகமாயிருக்கிறது. பொதுவாக, போலிஷ்காரர்களுக்கு ஜெர்மானியருக்குக்கொடுக்கும் உணவில் மூன்றில் இரண்டு பாகம் கொடுக்கப்படுகிறது. ஜெர்மன் கடைகளுக்கும், யூக்ரேனியக் கடைகளுக்கும் வேண்டிய சாமான்கள் சப்ளைசெய்யப்படுகின்றன. ஆனால், போலிஷ், யூதர்கடைகளுக்கு அநேக வாரங்களில் கொழுப்பு, இறைச்சி, முட்டை, சர்க்கரை சப்ளையாவதே

கிடையாது. சட்டப்படி உடுக்கத் துணியானது எல்லோருக்கும் சமமாகக் கொடுக்கவேண்டுமானாலும், நடப்பில் ஜெர்மன் ஜாதியாருக்கு வஸ்திரச் சீட்டுச் சரியாய்க் கொடுக்கப்பட்டு, போலிஷ்காரர்களுக்குக் குறைத்துக் கொடுக்கப்படு கிறது. உதாரணமாக, வார்ஸா நகரத்தின் ஜனத்தொகை 1,000,000 பேர்கள். அவர்களுக்கு 10,000 வஸ்திரச் சீட்டுகள்தான் கொடுக்கப்படுகின்றன.

### ஜெர்மனியும், ரஷியாவும்.

இந்த இரண்டு தேசங்களுக்கும் சமீபத்திலேற்பட்டிருக்கும் வியாபார உடன் படிக்கையைப்பற்றி ஜெர்மனி களிக்கிறது. இது சிநேகிதத்தையும், சமாதானத் தையும் நிலைநாட்டப்போவதாக ஒரு ரஷியப்பத்திரிகை எழுதிவிட்டதாம்.

ஆனால் யுத்தத்துக்குதவாத உடன்படிக்கை பிரயோசனமற்றதென்று மைன் காம்பில் ஹிட்லர் எழுதியிருக்கிறார் மேலும், ரஷியாதிகாரிகள் கொலைசெய்யும் குற்றவாளிகளென்றும், மானிடப் பதர்களென்றும் தூஷித்திருக்கிறார்.

### பிரிடனுடைய விமானமேற்றிப்போகும் கப்பல்களின் நஷ்டக்கணக்கு.

இவைகளில் 'கரேஜியஸ்,' 'குளோரியஸ்' என்ற இரண்டு கப்பல்கள் அமிழ்ந்து, மேலும், 4 கப்பல்கள் சேதப்பட்டிருப்பதாக ஜெர்மனி கணக்குக்கொடுக் கிறது (ஜனவரி 17).

ஆர்க்ராயல் உள்பட 10 கப்பல்கள் போய்விட்டதாக 31—8—40-ல் சொல்லப்பட்டது. ஆனால் பொய் இப்பொழுது மட்டுக்கட்டியிருக்கிறது. கப்பல்கள் ஏழாயிருந்தால், 10 கப்பல்களெப்படி நஷ்டமாகும். நஷ்டமாய் விட்டதாகச் சொன்ன ஆர்க்ராயல் இன்னும் ஓடிக்கொண்டுதானிருக்கிறது.

---

# இங்கிலாந்தில், யுத்த சேவைக்காக ஒன்றுபட்டு உழைக்கும் ஸெயிண்ட் ஜான் சங்கமும், ரெட் கிருஸ் சங்கமும்.

### அந்நிய தேசங்களில் சம்பந்தம் ஏற்படுத்தும் ஸ்தாபனம்.

இந்தக் கூட்டுறவார் செய்யும் வேலைகளில் முக்கியமான வேறொரு வேலை, யாதெனில், அந்நிய நாடுகளுடன் சம்பந்தம் ஏற்படுத்துவதாம். சர்வ ராஜ்ஜியங் களின் ரெட் கிருஸ் சங்கத்தில் நிலையான கமிட்டி மெம்பரான 'ஓதியர்' அம்மை யார், சில காலத்திற்கு முன்பு இங்கிலாந்துக்கு வந்து அங்கு தற்போது இருக்கும் வெவ்வேறு ராஜ்ஜியங்களின் ரெட் கிருஸ் பிரதிநிதிகளுடன் கலந்துறவாடி ஜெனிவா சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் சகல பணிவிடைகளைப் பற்றியும், விசேஷமாய் தன் பகுதியின் சேவையையும் விஸ்தரித்தார்கள்.

அந்நிய நாட்டு சிறையாளருக்கு ஆதரவளிக்கும் பிரிவிலிருந்து, 'அந்நிய நாடுகளிடம் பற்றுண்டாக்கும்,' பிரிவாரை, மே மாதமே பிரித்துவிட்டனர். இப்படி பற்றுண்டாக்கும் பிரிவாருக்கு, இனம் முதலியவைகளை அனுப்புவதோடு, யுத்தத்தால் ஏற்படும் சர்வ கஷ்டநிவர்த்திகளையும் குறித்து ஆலோசனை செய்வதற்காக, ஒவ்வொரு தேசீய ரெட் கிருஸ் பகுதியாரோடும், சர்வராஜ்ஜியங்களின் சங்கமாகிய ஜெனிவா ரெட் கிருஸ் சங்கத்தாரோடும் சம்பந்தம் ஏற்படுத்துவதுவே ஓர் பெரும் நோக்கம். சர்வ தேசங்களின் மக்களாயிருக்கும், சிறைப்பட்டவர்க்கு செய்து வரும் உழைப்பில் ஜெர்மானியரும் பங்கு பெற்று, பயமின்றி, பாதகமின்றி, தம் ரெட் கிருஸ் மூலமாய் உழைப்பதற்கு பிரிடிஷார் செய்யும் இந்த ஏற்பாடு, நல்ல மார்க்கமுண்டாக்குகிறதென்பது இதனால் ஸ்திரமாகிறது. இப்பிரிவார், மேலும், கைதிகளின் க்ஷேமலாபத்தை தெரிவிக்கும்படி ஜெனிவாவில் இருக்கும் சர்வ ராஜ்ஜியங்களின் ரெட் கிருஸ் சார்பாக, ஓர் முக்கிய ஆபீஸரை நியமித்து நடத்தி வருகின்றனர். கீழ்க்கண்ட விவரிப்புவாறு பற்பல சேவைகளை இவர்கள் நடத்தி வருகின்றனர்.

## 1. காணமற் போயினர் என்ற செய்தி வரும் இனத்தாரைப் பற்றிய விசாரிப்பு.

வெடிகுண்டுகளின் வீச்சுகள், இப்பொழுது நடந்து வருவது போல், இதுவரை ஒருக்காலும் பயங்கரமாக இருந்தது கிடையாது. ஒரு நொடியில் 1,000 கணக்கான குடிமக்கள் வீடுவாசலிழந்து தவிக்கின்றனர். ஒரே குண்டு வெடித்தலின் காரணமாய், அநேகர் உயிரிழக்கின்றனர். விமான வெடிகளின் கொடுமையால் அநேக ஆயிரம் குடிமக்கள், இல்லறமின்றி, தவித்து மற்றப் பட்டணங்களுக்கு ஓடோடிச்சென்று சரண் புகுகின்றனர். பிரான்ஸில் ஒரே சமயம் 40,00,000 மக்களைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. சர்வதேச சங்கத்தினர் அமைத்துள்ள ஜெனிவா ரெட் கிருஸ் சங்கத்திற்கு மட்டுமே, காணமற்போனவர்களின் வரலாற்றை கண்டுபிடிக்கும் சக்தியும், வசதியுமுண்டு. ஜெனிவா சங்கத்தினர் பல தேசத்துப் பட்டாள ஆதரவு சங்கங்களுடன் கலந்துகொண்டு, நேரில் கேட்பவர்க்கும், கடிதமூலம் எழுதுபவர்க்கும் தாம் கண்டறிந்த விஷயங்களை அந்தந்த ராஜ்ஜியங்களிலுள்ள தேசீய ரெட் கிருஸ் சங்கத்தினருக்கு உடனே சொல்லிவிடுகின்றனர். விஷயமறிந்து சொல்வது எத்தனைபேருக்கு ஆறுதலையும் மனச்சமாதானத்தையும் அளிக்கும் என்பதை அறிந்து, ஐரோப்பா, அமெரிக்கா தேசங்களுக்கு மட்டுமல்ல, போர் நடக்கும் ராஜ்ஜியங்களிலுள்ளவர்களுக்கும் செய்தி தவறுமல் தெரிவிக்கிறார்கள். எத்தனை பரபரப்பும், அவசரமுமாய் செய்ய வேண்டிய இந்த வேலைக்காக அநேக குமாஸ்தாக்களையும் ஏராளமான மொழிபெயர்ப்போரையும் வேலைக்கு வைத்திருக்கின்றார்கள்.

ரெட் கிருஸ் சங்கத்தார் ஏற்படுத்தியிருக்கும் சட்டங்களுக்கு இணங்கினவராய், போர் புரியும் ஒவ்வொருதேசத்தாரும், சிறை பட்டிருப்போரின், சுக செய்தியை அறிக்கை செய்வதாய் வாக்குறுதி கூறியிருக்கின்றதுடன் அதற்கான ஸ்தாபனங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றனர். இது விஷயத்திலும் ஜெர்மனி

சரிவர நடந்துகொள்கிறது. செய்திகள் பாரின் ரிலேஷன்ஸ் டிபார்ட்மெண்டு —அயல் தேசத்தாருடன் சம்பந்தப்படும் இயக்கத்தார்—மூலமாய், உற்றார் உறவினருக்குத் தெரிவிக்கப்படுகின்றன. இவர்கள் மூலம் வரும் செய்தி மிகவும் உண்மையானவை. தம் அபிப்பிராயங்களையும் சேர்த்துத் தெரிவித்துக்கொள்ளும் படி கைதிகள் ஜாபிதா அறிக்கை ஜெர்மானியர் ஒலிபரப்புவது நம்பத்தக்கதல்ல என்று எச்சரிப்பாய் இருக்கவேண்டும். கைதிகளைப்பற்றி, இஷ்டமித்ரர், பந்துக் களுக்குமாய், ஜூலை மாதத்தில், இப்படிப்பட்ட அஞ்சல்சேவை செய்யமுடிய வில்லை. பின்பு அதிக திரவியம் செலவு செய்து ஸ்விட்ஸர்லாந்திற்கு தந்தி அனுப்பியும், பெற்றும் விஷயங்களை அறிந்து மற்றவர்களுக்கு அனுப்புகிறார்கள். ரெட் கிராஸார் இவ்விதம் செய்யும் வேலை சாமானியமானதல்ல. சிதறிக் கிடப் போர்க்கும், வீடுகளிலிருப்போர்க்கும் கடிதப் போக்கு நிலைபடுத்தி, புகலிடம் புகுந்து இருப்பவர்களுக்கும் அவர்கள் இனமுறையார்க்கும் செய்தியனுப்பும் ஒழுங்குகள் செய்யுமாறு, எங்கெங்கே ரட்சிப்பின் சங்கங்களுண்டோ, அவரோடும், ஜெனிவா சர்வ ராஜ்ஜியசங்கத்தோடும் சேர்ந்து, ரக்ஷணை செய்வதில் பிரயாசை எடுக்கின்றனர். ஜெர்மானியரால் தாக்கப்பட்ட ஊர்களிலிருப்போரும், அவ்வூர் களிலிருந்து வெளியேறினவர்களும், அவர்கள் புகுந்து கொண்டிருக்கும் ஊர்வாசி களும் படும் துன்பமும், விடும் கண்ணீரும், கணக்கில் அடங்கக்கூடியதில்லை. யுத்தத்தால் நேரிடும் துன்பத்தை அளந்து எழுத இடமும்போதாது. ஆதியில் தவறி, சிதறடிக்கப்பட்ட பிரெஞ்சு மக்களின் குடியிருப்பைக் கண்டுபிடிப்பது அசாத்யமாய் தெரிகிறது. பிரிடிஷாருடன் இருப்பவர்கள் செய்தியும் மிகவும் புத்தியாய் செய்யும், கூடியவரை உடனுக்குடன் தெரிவிக்கிறது ரெட் கிராஸ் சங்கத்தாரால் கூடாததாய் தெரிந்தவையும், சாத்தியப்பட்டிருக்கிறது.

## 2. தபால் மூலமாய் அனுப்பும் செய்தி ஒழுங்கு.

போர் புரியும் தேசங்களிலிருப்பவரும், சத்துருவசம் இருக்கும் நாடுகளில் இருப்பவரும், தம் செய்திலாபத்தை சொந்தக்காரருக்குத் தெரிவிக்க, தபால் மூலமாயும் ஒழுங்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள். எழுதும் சமாசாரம் மட்டும் 20 வார்த்தைகளுக்குட்பட்டதாய் இருக்கவேண்டும்.

இதாலி, ஜெர்மனி, பெல்ஜியம், ஆஸ்திரியா, செக்கோஸ்லோவேக்கியா, நார்வே, டென்மார்க்கு, ஹாலண்ட், லக்ஸம்பர்க், போலண்டு, முதலான ஊர் களுக்கு செய்தி அனுப்பியும், அங்கிருந்து செய்தி பெற்றுமிருக்கின்றார்கள். மானிட தர்மங்களில் சிறந்த தர்மம் இது அல்லவா?

# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் XXIX.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1941— | | | | | மணி. |
| பிப்ரவரி | 1, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 2, ஞாயிற்றுக்கிழமை. | வேங்கடக்குளம் | ... | காலை | 9.45 |
| | | திருவப்பூர் | ... | மாலை | 5.00 |
| | 3, திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் | ... | காலை | 10.25 |
| | | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.25 |
| | | பனையபட்டி | ... | மாலை | 5.30 |
| | | அன்னவாசல் | ... | ,, | 5.30 |
| | 4, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் | ... | காலை | 10.25 |
| | | கீரனூர் | ... | மாலை | 5.30 |
| | | ஒடையாளிப்பட்டி | ... | ,, | 5.30 |
| | 5, புதன்கிழமை ... | ஏம்பல் | ... | ,, | 5.30 |
| | 6, வியாழக்கிழமை ... | புதுக்கோட்டை டவுன் உபாத்தியாயர்கள் சங்கம். | | ,, | 3.30 |
| | | வேகுபட்டி | ... | ,, | 5.30 |
| | | அரிமளம் | ... | ,, | 5.30 |
| | 7, வெள்ளிக்கிழமை... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |

## பிரஸங்கம் XXX.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பிப்ரவரி | 8, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 9, ஞாயிற்றுக்கிழமை. | கோட்டைக்காடு | ... | காலை | 9.45 |
| | | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | | மாலை | 5.00 |
| | | பூவரசகுடி | ... | ,, | 5.30 |
| | 11, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் | ... | காலை | 10.25 |
| | | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.25 |
| | | நச்சாந்துபட்டி | ... | மாலை | 5.30 |
| | | திருமயம் | ... | ,, | 5.30 |
| | | காரையூர் | ... | ,, | 5.30 |
| | 12, புதன்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் | ... | காலை | 10.25 |
| | | கரம்பக்குடி | ... | மாலை | 5.30 |
| | 13, வியாழக்கிழமை ... | குடுமியாமலை | ... | ,, | 5.30 |
| | | குழிபிரை | ... | ,, | 5.30 |
| | 14, வெள்ளிக்கிழமை... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |

# இந்தியாவின் பாதுகாப்புக்கு உதவுங்கள்

## பாதுகாப்பு சேமிப்பு ஸ்டாம்புகளை தவறாமல் வாங்குங்கள்.

---

ஒரே சமயம் 10 ரூபாய் கொடுத்து பாதுகாப்பு சேமிப்பு சர்டிபிகேட்டை வாங்க முடியாதவர்களுக்கு இந்தியா கவர்ன் மென்டார் ரூ. 1, அ. 8, 4 விலை பெருமான பாதுகாப்பு சேமிப்பு ஸ்டாம்புகளையும், கார்டுகளையும் வெளியிட்டிருக்கின்றனர். கார்டுகளில் <u>இந்தவிதமான ஸ்டாம்புகளை ஒட்டுவதற்கு</u> இடம் விடப்பட்டிருக்கிறது. 10 ரூபாய் விலை பெருமான ஸ்டாம்புகளை சேர்த்த பிறகு போஸ்டாபீசுக்கு கார்டை எடுத்துக்கொண்டு போய் பாதுகாப்பு சேமிப்பு சர்டிபிகேட்டுக்காக கொடுத்து மாற்றிக்கொள்ளலாம்.

இந்த விதமான ஸ்டாம்புகளும், கார்டுகளும் சேமிப்பு நிதியை வைத்திருக்கும் எந்த தபாலாபீசிலும் கிடைக்கும்.

பாதுகாப்பு சேமிப்பு கார்டுள்ள ஒவ்வொருவரும் தம் பெயரையும், விலாசத்தையும் கையொப்பம் அல்லது பெருவிரல் குறியையும் ஸ்டாம்புகள் ஒட்டுவதற்கு முன்பு கார்டின்மேல் எழுதவேண்டும். சர்டிபிகேட்டையுடையவர் பாதுகாப்புக்காக இந்த எச்சரிக்கை அவசியம்.

**பாதுகாப்பு சேமிப்பு சர்டிபிகேட்டுகள் ரூ. 10, 50, 100, 500 வரையில் கிடைக்கும். 10 வருடங்களின் கடைசியில் 100க்கு 3¼ ரூபாய் வீதம் வட்டிக்கு வட்டியாக வருமான வரி இல்லாமல் ஒவ்வொரு பத்து ரூபாய்க்கும் ரூ. 13-9-0 ஆக கிடைக்கும். எந்த வழியிலும் சேமிப்பு தொகை குறையாது. ஒவ்வொருவரும் 5000 ரூபாய் வரையில் போடலாம். அருகாமையிலிருக்கும் தபாலாபீசில் விசாரிக்கவும்.**

யுத்த சேமிப்பு இயக்கத்தாரால் வெளியிடப்பட்டது.
தபால் பெட்டி 11, சென்னை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 4,400—1-2-41.